# அடிப்படை சத்தியங்கள்

# அடிப்படை சத்தியங்கள்

# அடிப்படை சத்தியங்கள்

## *Basic Truths*

முதற்பதிப்பு : 2018

**சென்னை வேதமாணவர் சபை,**
**22, முதல் தெரு, ராஜீவ் நகர்,**
**காலடிப்பேட்டை, திருவொற்றியூர்,**
**சென்னை-600 019.**

# *Basic Truths*

**Tamil Version**

**I - Edition - 2018 - 2000 Copies**

**NOT FOR SALE**

**Chennai Bible Students,**
**No.22, First Street, Rajiv Nagar,**
**Kaladipet, Thiruvottriyur,**
**Chennai - 600 019.**
**India.**



**அடிப்படை சத்தியங்கள்**

வெளியீட்டாளர் முன்னுரை

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்துகொள்ள வேண்டிய குறைந்தபட்ச வேத அறிவுதான் அடிப்படை சத்தியமாகும். இதை வேதம், மூல உபதேசம் என்றும் பாலாகாரம் என்றும் கூறுகிறது. ஒரு மனிதன் விசுவாசிக்கிறேன் என்றால், அவன் எதை விசுவாசிப்பான்? என்னவென்று விசுவாசிப்பான்? குறைந்தபட்ச வேத அறிவாகிய இந்த அடிப்படை சத்தியத்தை அறிந்து விசுவாசத்திற்குள் வந்த பிறகுதான் அவன் தேவனோடு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

இஸ்ரயேல் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று (அப்.8:36-38) விசுவாசித்தால் ஞானஸ்நானம் எடுக்க தடையில்லை. ஏனெனில் அவர்கள் யேகோவா தேவனை முன்னமே அறிந்திருந்தார்கள். ஆனால் நாம் கிறிஸ்துவை சேராதவர்களுக்கு அந்நியரும், நம்பிக்கை இல்லாதவர்களும் தேவனற்றவர்களுமாயிருந்தோம். (எபே.2:12) ஆகையால் நாம் பிதாவாகிய தேவனையும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிய வேண்டும். அதுவே நித்திய ஜீவன் என்று வேதம் கூறுகிறது. (யோவா: 17:3)

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் நித்திய ஜீவன் உண்டு என்று வேதம் கூறுகிறது. (யோவா: 5:39) பெரோயா பட்டணத்தார், தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயரைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என்றும் வேதம் கூறுகிறது. (அப்.17:11)

ஆழ்ந்த சத்தியத்தை வேதம் பலமான ஆகாரம் என்று கூறுகிறது. பலமான ஆகாரத்தையும் நாம் உண்ண வேண்டும் என வேதம் கூறுகிறது. அப்பொழுதுதான் நாம் தப்பறையான, வஞ்சகமான போதனைகளால் அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைத் கைக்கொண்டு அதில் நிலைத்து நிற்போம்.

(எபே. 4:14,13) மேலும் இந்த பலமான ஆகாரம் நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியும் ஞானேந்திர அறிவுடையவர்களாயிருக்க அவசியமானதாகும். (எபி. 5:14)

ஆனால் நாம் இந்த புத்தகத்தில் அடிப்படைச் சத்தியத்தை மட்டுமே தியானிக்க இருக்கிறோம். மேலும் வேதம் கூறுகிற மனந்திரும்புதல், விசுவாசம், ஞானஸ்நானம், ஆவியின் வரம், உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு (எபிரேயர் 6:1,2) போன்ற அடிப்படை சத்தியத்தோடு கூட இன்னும் சில அடிப்படையான காரியங்களையும் நாம் பார்க்கலாம். இதை படிக்கும் ஒவ்வொருவரும். கன்மலையின் மேல் அஸ்திபாரம் போட்டவர்களாக ஆகும்படி (மத் 7:25) தேவன் கிருபை செய்வாராக என்கிற ஜெபத்துடன் வழங்குகிறோம்.

வெளியீட்டாளர்

# அடிப்படை சத்தியங்கள்

## பொருளடக்கம்


1. பைபிள்தான ஒரே தேவனால் கொடுக்கப்பட்ட ஒரே வேதம் 1
2. கடவுளும் விக்கிரகங்களும் 8
3. இரட்சிப்பு 16
4. ஞானஸ்நானம் 22
5. மரித்தோர் எங்கே? 29
6. உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும் 34
7. வேதம் கூறுகிற நரகம் எது? 40
8. ஆவி, ஆத்துமா, சரீரம் 47
9. அற்புத சுகமளிக்கும் வரம் 53
10. அந்நிய பாஷை வரம் 60
11. மூன்று உலகங்கள் 67
12. வெளியாக்கப்பட்ட இரகசியம் 74
13. கிறிஸ்து (மஸ்) பிறந்த நாள் 83
14. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி 89
15. பரிசுத்த ஆவியும், அதன் கிரியைகளும் 115
16. பஸ்காவும் இராப்போஜனமும் 145
17. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. 157




# 1. பைபிள்தான் ஒரே தேவனால் கொடுக்கப்பட்ட ஒரே வேதம்

இப்பூவுலகில் எத்தனையோ கோடிக்கணக்கான புத்தகங்கள் உண்டாகியிருந்தாலும், அந்த புத்தகங்களுக்கும், இந்த பைபிள் என்கிற விவிலியத்திற்கும் வித்தியாசம் உண்டு. மற்ற புத்தகங்களெல்லாம் மனிதனின் கற்பனையினாலும், அறிவினாலும் உண்டானவைகள். ஆனால், பைபிளோ, மனித அறிவுக்கும் மேலான தெய்வீக அறிவினால் உண்டானது. தேவனுடைய சக்தி (வல்லமை)யாகிய பரிசுத்த ஆவியினால் தேவனடியார்கள் ஏவப்பட்டு, எழுதியது தான் பைபிள். இது ஜீவனுள்ள புத்தகம்; இது விலைமதிப்பற்ற பொக்கிஷம்; இது நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கிற, இனி நடக்கப்போகிற உலகக் காரியங்களைத் தீர்க்க தரிசனமாக, மிகவும் தீர்க்கமாக உரைக்கிறது. இதுதான், ஒன்றான மெய்த்தேவனால் கொடுக்கப்பட்ட ஒரே வேதம் என்பதற்கு இது தனக்குத்தானே சாட்சி பகர்ந்தாலும், இதற்கான ரூபகாரத்தை ஞானமாக வேதப்படி புத்தியுக்தியின்படி தியானிப்போம்.

1. இது உலகிலேயே புராதனப் புத்தகம்; சுமார் 30 நூற்றாண்டுகளாகக் காக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது சுமார் 1800 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல ஒரே மொழியில் பலமுறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை அழிக்க நினைத்தவர்களால், அழிக்கக் கூடாமற் போயிற்று. மேலும் 1600 வருட காலப்பகுதியில் சில மொழிகளில் சுமார் 48 எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இந்த வேதம் 66 புத்தகங்களைக் கொண்டது. இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று இசைந்து இருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்பு வேறு எந்த புத்தகத்திலும் பார்க்க முடியாது.
2. ஒரு புத்தகம் எழுதுமுன், அதை எழுத ஒரு காரணம் இருக்கவேண்டும். பைபிளை எழுதியவர்கள் இதை என்ன

காரணத்தினால் தங்கள் தலையில் போட்டுக் கொண்டார்கள்? இயேசு கிறிஸ்துதான் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டவராயிற்றே. அவரைப்பற்றி ஏன் எழுதவேண்டும்? மேலும் கிறிஸ்துவின் துன்ப காலத்தில் அவரைக் விட்டு ஓடிய அவருடைய சீஷர்கள், அவர் இறந்தபின் தைரியமாய் அவரைக் குறித்து பிரசங்கிக்க ஏவியது என்ன? அவரைக் கொலை செய்தவர்களைக் கண்டிக்க தைரியம் எப்படி வந்தது? இவர்கள் இயேசுவைப் பற்றி பிரசங்கித்ததால் கிடைத்த பலன் என்ன? பணமா, புகழா, பெருமையா என்ன? இயேசு கிறிஸ்துவைப்போல் துன்பமும், கஷ்டமும்பட்டு தங்கள் வீடுகளையும், இனத்தார் களையும் விட்டுப் பிரிந்து, கடைசியில் துர்மரணம் அடைந்தார்கள். ஆகையால், அவர்களது நோக்கம், பரிசுத்தமானதாக மேன்மையானதாக இருந்திருக்கவேண்டும்.

3. இதை எழுதியவர்கள், தாங்கள் செய்த தவறுகளையும் இதில் எழுதியுள்ளார்கள், சுய சித்தமாய் எழுதி இருந்தால், தங்கள் தவறுகளை மறைத்து அல்லவா எழுதியிருப்பார்கள்.

   மோசே செய்த பாவம் - எண். 20:7-13

   தாவீது செய்த பாவம்-II சாமு 11, 12, 24 அதிகாரங்கள்

   யோனாவின் பாவம் - யோனா முதல் அதிகாரம்.

4. i) மனிதன் ஏன் உண்டாக்கப்பட்டான்?
   ii) எப்படி உண்டாக்கப்பட்டான்?
   iii) ஏன் மரணம் வந்தது?
   iv) நல்லவர்கள் துன்பப்படவும், துன்மார்க்கர் செழித்தோங்கவும் காரணமென்ன?
   v) நோய், முதுமை, துன்பம், மரணம் இவைகளிலிருந்து விடுபட என்ன வழி? அதன் திட்டம் என்ன?
   vi) மொழிகள் இத்தனை உண்டாகக் காரணமென்ன? (ஆதி.11:9)
   vii) பூமி தன் பலனைக் கொடுக்காதிருக்கக் காரணமென்ன? (ஆதி. 3:17,18)



இந்த கேள்விகளுக்கெல்லாம் ஞானமாய் பதில் சொல்லக்கூடிய ஒரு புத்தகம் பைபிள் ஒன்றுதான்.

5. படித்தவருக்கும், படிக்காதவருக்கும், ஏழைக்கும், ஐசுவர்யவானுக்கும், வேதத்தைப் போல் மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், ஆறுதலையும், அறிவையும், ஞானத்தையும் கொடுப்பது வேறொன்றுமில்லை. சங்கீதப் புத்தகம், நீதிமொழிகள், பிரசங்கி ஆகியவை இதற்குச் சான்று.

6. வானத்தையும், பூமியையும் படிப்படியாக உண்டாக்கின ஒழுங்கும், பூமியை மனிதக் குடியிருப்புக்காக ஒழுங்கு செய்த முறையில் முதலில் நீரும், நிலமும் பின் ஒளி, காற்று மண்டலம் இதற்குப் பிறகு தாவரம், மிருகம், கடைசியில் மனிதன் ஆகியவைகளைச் சிருஷ்டித்த ஒழுங்கும் பைபிளில் மட்டுமே உண்டு. இந்த அறிவு இதை எழுதிய மோசேக்கு எப்படி வந்தது? ஆகையால் இது தேவ வெளிப்பாடு.

7. வேதத்தில் விஞ்ஞான உண்மைகள்:

   பூமி உருண்டையாயிருக்கிறது. ஏசா.40:22

   பூமி அந்தரத்தில் தொங்குகிறது. யோபு.26:7

   மனித சரீரம் மண்ணிலுள்ள மூலகங்களைக் கொண்டு படைக்கப்பட்டது

   உயிர்வாழ ஆக்சிஜன் தேவை. இரத்தமே உயிர்.லேவி. 17:11

   காற்றுக்கு எடை உண்டு. யோபு. 28:25

   காணப்படாத அணுக்கள் சேர்ந்து பொருட்கள் உண்டாகியிருக்கின்றன. எபி 11:3

   மண் ஒட்டிக்கொண்டு ஏக பாளமாக, பாறையாக மாறுகிறது யோபு: 38:38

   பூமியின் அடியில் அக்கினியால் மாறினதுபோல் இருக்கும் யோபு 28:5

மழை உண்டாகும் விதம்–ஆமோஸ் 5:8; எரே. 10:12-13; யோபு 37:11; சங். 135:7.

கிரகங்கள் அதனதன் பாதையில் ஒழுங்காக வருகிறது. யோபு 38:31,33 தண்ணீரும் காற்றும் சுழற்சியில் இருக்கிறது. பிர. 1:6,7 தண்ணீர் குவியலாக சமுத்திரத்தின் ஆழங்களில் வைக்கப் பட்டிருக்கிறது. சங்.33:7

இவைகளெல்லாம் விஞ்ஞானம் மூலமாக, மனிதனால் கண்டுபிடிக்கப்படும் முன்பே வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இது தேவனால் கொடுக்கப்பட்ட வேதம்.

8. நடைமுறைக்குத் தேவையான அறிவுரைகள்:

i) துன்பங்கள் ஏன் நீதிமானுக்கு வருகிறது? யோபு 1,2 அதிகாரங்கள்

ii) நீதி, தீர்ப்பு குறித்த விஷயங்கள். எண். 35:16-32; உபா. 19:15-21

iii) இராஜாக்களுக்கு அறிவுரை. உபா 17:15-20

iv) வியாபார சம்பந்தமான விஷயங்கள். லேவி 19:35-36; நீதி 20,10,22,23; மத்.7:12.

v) மனிதன் செய்யக்கூடாத முறைகேடுகள். லேவி 20:10-20

vi) மற்றவர்களுடன் உறவு முறைகள்; மத்.7:12;1 தீமோ 5:1,2; லேவி; 19:18.

vii) திருமணம் மத் 19:4-6,9 ; 1 கொரி 7,2,9,10,26.

viii) குடும்ப உறவு முறை - கணவன், மனைவி, குழந்தைகள் கடமை. எபே. அதி. 5&6

ix) அதிகாரமுள்ள ஆட்சியாளருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டியது ரோம. 13-ம் அதிகாரம்.

x) நேர்மையாய் வேலை செய்தல், தொழிலாளி, முதலாளி உறவு முறை. எபே.6-ம் அதி.



xi) தகராறுகளைத் தீர்ப்பது. மத். 18:15-17, எபே. 4:26

xii) உடல் நலம் - மனநலம் நீதி. 17:22;15:17.

ஆகிய இவைகளைக் குறித்து பைபிள் கூறுகிறது. ஆகையால், இது தேவ வெளிப்பாடு

9. தற்காலத்தில் சில குறிப்பிட்ட மிருகங்களினாலும், பறவைகளினாலும் (அவற்றின் மாமிசத்தைப் புசிப்பதால்) சுகக்கேடுகள் விளையுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம்

மோசேயினால் விலக்கப்பட்ட மிருகங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த அறிவு மோசேக்கு எப்படி வந்தது? உதாரணம் பன்றி மாமிசம் - மூளைக்காய்ச்சல் லேவி. 11–ஆம் அதிகாரம்.

10. உலக சரித்திரத்தில் கி.மு.3000 வரை மட்டுமே மனித வரலாற்றுக்கு பாபிலோன், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளின் சரித்திரம் நமக்கு சான்று பகர்கின்றன. ஆனால் அதற்கு முந்தைய வரலாறு குறித்து பைபிளைத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை. பைபிள் மட்டுமே கி.மு. 4000 வரை தொடர்ச்சியாக மனித வரலாற்றை எடுத்துக் கூறுகிறது.

நைல்நதி நாகரீகம், மெசப்பத்தோமியா நாகரீகம் ஆகிய நாகரீகங்கள் கூட கி.மு. 2000, 3000 வருட சரித்திரத்தை மட்டுமே குறிக்கிறது. ஆனால் பைபிளோ, அதற்கு முந்தைய வரலாற்றையும் கூறுகிறது. ஆகையால் இது தேவ வெளிப்பாடு.

11. வேதத்தை ஆராய்ந்து பார்த்து இஸ்ரேலிய புவியியல் வல்லுனர் (Dr. BON TON) பெயர்செபாவிலிருந்து சில மைல் தூரத்ததில் 15 மில்லியன் டன் இரும்பு தாதுக்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். இந்த பெயர்செபாவில் தான் ஆபிரகாம் தோப்பை உண்டாக்கினான் என்று வேதம் கூறுகிறது. பைபிளில் கூறப்பட்ட கானான் தேசத்து எல்லைகள், பட்டணங்களின் பெயர்கள், நீரூற்றுகள் ஆகியவை உண்மையில் ஒத்திருக்கின்றன.

12. இராஜாக்கள் எல்லோரும் வெட்டப்படுவார்கள்; விஸ்தாரமான தேசங்களின் தலைவர்கள் நொறுக்கிப் போடப்படுவார்கள். (சங். 110:5,6) வேறு எந்தப் புத்தகத்தில் இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு, அதன்படி நடந்து வருகிறது?

13. இஸ்ரயேல் ஜனங்கள் தண்டிக்கப்பட்டு சுமார் 2,500 வருடங்கள் கழித்துத் தமது சொந்த நாட்டில் குடியேறி, அந்த நாடு உலகில் முக்கிய இடத்தை வகிக்குமென்று வேதத்தில் கூறப்பட்டு, அது இப்போது நடந்து வருகிறது.

14. மோசேயின் ஆகமங்கள் தீர்க்க தரிசனங்கள், புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள் சுமார் 16 நூற்றாண்டு காலத்தில், பற்பல சமயத்தில் எழுதப்பட்டதாயினும் அவற்றின் நோக்கம் ஒன்றே. முதல்பாகத்தில் மனிதன் விழுந்து போனதையும், அதன் பின்னுள்ள பாகம் இழந்த இரட்சிப்பைப் படிப்படியாகப் பெறுவதையும் காண்பிக்கிறது. இவைகளெல்லாம் மனிதனின் கற்பனைகளினால் எழுதப்பட்டிருக்கிறதென்று கூற முடியுமா?

15. பத்துக்கட்டளை நியாயப் பிரமாணத்தின் தொகுப்பு. நீதிக்கு அடுத்த விஷயங்களும் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னும் சுருக்கமாக எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனை நேசி, உன்னைப் போல் பிறனை நேசி என்று இயேசு கூறியிருக்கிறார். பத்துக்கட்டளையைத் தொகுத்துக் கூற சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் அறிவு பெருத்திருக்குமா? முடியாது. இதை எழுதிய மோசேக்கு இந்த அறிவு எப்படி வந்தது?

16. மோசேயின் பிரமாணத்தில் ஏழைக்கும் ஐசுவரியவானுக்கும் நீதி செய்யப்படுகிற விஷயத்தில் யாதொரு வித்தியாசமும் இருந்ததில்லை. இந்த காலத்தில் கூட அப்படிப்பட்ட சட்டங்கள் இல்லை. சிலர் மென்மேலும் ஐசுவரியவான்களாகவும் வேறு பலர் மென்மேலும் ஏழைகளாகவும் ஆகாதபடிக்குத் தடுக்க மோசேயின் பிரமாணத்தில் எத்தனங்கள் இருந்தன. அதாவது மோசேயின் பிரமாணத்தில் ஒவ்வொரு ஐம்பதாவது வருடமும் யூபிலி வருடமாக இருந்தது. யூபிலி வருடத்திற்கு முன்னதாக



விற்கப்பட்ட நிலங்கள், வீடுகள் எல்லாம் யூபிலி வருடத்தில் விற்றவருக்கு இனாமாக திரும்பக் கிடைத்தன. அடிமைப்பட்டவர்களும் யூபிலி வருடத்தில் விடுதலையானார்கள். லேவி. 27:7, 13-23; 27-31, 39-41.

17. கானான் தேசத்தை இஸ்ரயேலரின் 12 கோத்திரங்களுக்கு பங்கிட்டு கொடுக்கும்போது லேவி கோத்திரத்தாருக்கு நில புலன்களில் பங்கு கொடுக்காமல் 10ல் ஒரு பாகம் விளைச்சலில் மட்டுமே பங்கு கொடுக்க நியாயப் பிரமாணம் கூறுகிறது. மோசே, தனது கோத்திரத்தாருக்கு மட்டுமே நஷ்டத்தை ஏற்படுத்தி, மற்ற கோத்திரத்தாரின் கையிலிருந்து தசமபாகம் பெற்று வாழ்வது மோசேயால் ஏற்பட்டதென்று எண்ண முடியுமா? ஆகையால், இது தேவனால் உண்டானதே.

இதுவரை நாம் தியானித்ததிலிருந்து பைபிள் தான் ஒன்றான மெய்த் தேவனால் கொடுக்கப்பட்ட வேதம் என நிரூபணமாகிறது. தேவன் நம்மிடம் என்னென்ன காரியங்களை கூற வேண்டுமோ, அனைத்தையும் தேவன் வேதத்தில் பதிவு செய்திருக்கிறார். ஆகையால் நாம் வேதத்தைப் படிக்கும்போது தேவன் நம்மோடு பேசுகிறார். நமது பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து நாம் விடுபட வேண்டுமானால், அதற்குரிய வழியைக் கூறுகிற வேதத்தை நாம் ஆராய்ந்து அதிலுள்ள காரியங்களை தியானித்து, விசுவாசித்து அதன்படி நடக்க வேண்டும். அப்போது தான் நமது மறுஜென்ம காலத்தில் நித்திய ஜீவனை, அதாவது அழியாத வாழ்வைப் பெற முடியும்.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, என்னைக் (இயேசு) குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே, (யோவான் 5:34) ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் (யேகோவா) நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோவான் 17:3)

************

## 2. கடவுளும் விக்கிரகங்களும்

உலகில் காணப்படும் மதங்களும் தெய்வ வழிபாட்டு முறைகளும் பலதரப்பட்டன. மதங்களும் வழிபாடுகளும் பலவானாலும் அவைகள் அனைத்தும் வலியுறுத்தும் கொள்கை ஒன்றே ஒன்று. அதுதான் "**கடவுள் ஒருவர் உண்டு**" என்பது. பலதத்துவ ஞானிகள் கடவுள் என்ற சொல்லுக்கு அர்த்தம் கற்பிப்பதுடன் நின்று விடுகின்றனர். அக்கடவுள் யார்? அவர் எத்தன்மை உடையவர்? அவரது மகத்துவங்கள் என்னென்ன? அவரை எப்படி தொழுது கொள்ள வேண்டும் என்பன போன்ற பல உண்மைகளை அவர்கள் ஆராய்ந்து அறியாததினாலோ, அல்லது அறிந்தும் அவ்வுண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்க மறுப்பதினாலோ, பாமரமக்கள் பலவிதமான உருவ வழிபாடுகளில் ஈடுபட்டிருப்பதுடன், அந்த விக்கிரகங்களுக்கும் கற்பனை சிலைகளுக்கும் வீணே தேர் என்றும் திருவிழா என்றும், ஊர்வலமென்றும், கும்பாபிஷேகமென்றும் தங்கள் பணத்தையும் காலத்தையும் பாழாக்குகின்றனர். எனவே கடவுளைப் பற்றிய சில நுணுக்கமான கருத்துக்களை வேதத்தை ஆதாரமாகக் கொண்டு ஆராயலாம்.

செயற்கைப் பொருட்கள் யாவற்றிற்கும் ஓர் செயற்கர்த்தா (உண்டாக்கினவர்) எப்படி இருக்கத்தான் வேண்டுமோ அப்படியே இப்பிரபஞ்சத்தில் காணப்படும் இயற்கை பொருட்களான சூரிய, சந்திர நட்சத்திரங்கள், பூமி மற்றும் கிரகங்கள், வானில், பூமியில், நீரில் வாழும் ஜீவராசிகள், செடி, கொடி, தாவர வர்க்கங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கின சிருஷ்டி கர்த்தாவான சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருக்கத்தான் வேண்டும். இதை ஞானிகளும், மேதைகளும், விஞ்ஞானிகளும் கூட ஒத்துக் கொள்கின்றனர். இவரைப் பற்றி வேதம் கூறுகிறதாவது: "**பர்வதங்கள் தோன்று முன்னும், நீர் பூமியையும்**



**உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." (சங் 90:2) நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்." (ஏசா. 43:13) "இருக்கிறவராகவே இருக்கிறேன்." (யாத். 3:14) "நானே தேவன், வேறு ஒருவருமில்லை; நானே தேவன், எனக்கு சமானமில்லை.**" (ஏசா.46:9) "ஒருவராய் சாவாமை யுள்ளவரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாத வருமாயிருக்கிறவர்." (1தீமோ.6:16) சேராபீன்கள் (ஆவியின் ஜீவிகள்– Spiritual Beings) தேவனுக்கு முன்பாக தங்களுடைய இரு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி இரு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரு செட்டைகளால் பறந்து தேவனை துதிக்கிறதாக நாம் (ஏசா.6:2) காண்கிறோம். இதனால் தேவ தூதர்களும் அவரை காண முடியாமல் தன் கண்களை மூடி கொள்கிறதாக பார்க்கிறோம். மோசே "நான் உம் முகத்தை காணவேண்டும்" என்று கடவுளிடம் கேட்ட போது "ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடு இருக்கக்கூடாது" என்றார். (யாத். 33:18,20) பிதாவினிடத்திலிருந்து வந்தவரே தவிர வேறு ஒருவரும் பிதாவை (கடவுளை) கண்டதில்லை என்று குமாரனான இயேசு கூறினதற்கு இசைய, இயேசு மட்டுமே கடவுளைக் கண்டு இவ்வுலகத்திற்கு அவரை வெளிப்படுத்தினார். (யோவா 1:18) கடவுள் தம்மில் தாமே ஜீவனுடையவர். (யோவா. 5:26) எனவே கடவுளுக்கு பிறப்பும் இறப்பும் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும் தேவன் ஆவியாயிருக்கிறார். (யோவா.4:24) நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. (யோவா.5:37) "நான் யேகோவா, இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும் என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்." (ஏசாயா.42:8) ஆகையால் விக்கிரகத்தை உண்டுபண்ணி வணங்கக்கூடாது என்று வலியுறுத்தவே, அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் (மனதில் தியானித்து) உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள

வேண்டும் (யோவா. 4:24) என்றும் "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை" (அப்.17:24) என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது.

கடவுளைப் பற்றி வேதம் இவ்வளவு தெளிவாக கூறியிருக்க, மதத் தலைவர்கள் சத்தியத்தை மறைத்து பலவிதமான தோற்றமுள்ள விகார விக்கிரங்களையும் அழகான சொரூபங்களையும் ஆலயங்களில் அமைத்து அவைகளைக் கொண்டு மக்களை சத்தியத்தைவிட்டு வழி விலகச் செய்கின்றனர். "அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்; தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்." (ரோமர் 1:23.25) யாராவது ஒருவர் நம்மைவிடத் தாழ்ந்த ஜீவராசி ஒன்றின் படத்தை வரைந்து இதுதான் நீ என்று நம்மை சொன்னால் நமக்கு எவ்வளவு கோபம் வருகிறது. ஆனால் கடவுளுடைய அழியாத மகிமையை அவரை விடத்தாழ்ந்த மனித,மிருக, பறவைகளின் ரூபத்திற்கு சமமாக்கி அவைகளின் முன் விழுந்து வணங்குகிற மனுமக்களை என்னென்பது!

கடவுள் தம் பக்தர்களின் மூலம் பலவிதத்தில் இந்த விக்கிரக ஆராதனையை கண்டித்திருக்கிறார். மீறி விக்கிரக சுரூபங்களை வணங்கினவர்களை அழித்துமிருக்கிறார். நிற்க! தேவன் கொடுத்த பத்து கற்பனைகளில் இரண்டாம் கற்பனையில், "மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிற வைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்று



கூறியிருக்கிறார். (யாத். 20:4,5) மேலும், "நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம். அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" என்றும் தேவன் கூறியிருக்கிறார். (உபா. 12:32) ஆனால் இதற்கு மாறாக இவ்விரண்டாம் கற்பனையை ரோமன் கத்தோலிக்கத் தலைவர்கள் சின்னக் குறிப்பிடத்தில் (ஜெப புத்தகத்தில்) நீக்கிவிட்டு மீதி ஒன்பது கற்பனைகளை பத்தாக திருத்தி அச்சிட்டு கொடுத்து மக்களின் மனக்கண்களை குருடாக்கியிருக்கின்றனர். "நீங்கள் உங்களை கெடுத்துக் கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மாம்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய யேகோவா வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர, சூரிய, நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களை குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்." (உபா.4:16-19) கர்த்தருக்கு அருவருப்பான காரியமான... "விக்கிரகத்தை உண்டு பண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்." (உபா.27:15) என்று வேதத்தில் சொல்லப்பட்டிருந்தும், இதற்கு மாறாக கிறிஸ்துவ ஆலயங்களிலும் வீடுகளிலும் சொரூபங்கள், படங்கள், சிலுவைகள் முதலியவைகளை ஒளிப்பிடங்களில் வைத்து தூபங்காட்டி, மெழுகுவர்த்தி ஏற்றி அவைகளின் முன் வணங்குவது தேவ ஆசீர்வாதத்துக்குரியதா? என்பதை கிறிஸ்துவ மக்கள் சிந்திக்க வேண்டும். இயேசுவையும் அவரது தாயாகிய மரியாளையும், பரிசுத்தவான்களையும் உருவங்களாக அமைத்து தேர்களில் ஏற்றி சுற்றித்திரிவது அவர்களை மகிமைப்படுத்துவதாகாது; அவர்கள் போதித்த

போதனைகளின்படியும் அவர்கள் ஜீவித்து காட்டிய சத்திய மார்க்கத்தின்படியும் நாம் நடப்பதே அவர்களை மகிமைப்படுத்துவதாகும்.

ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கின்றன. காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறான். அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும்; வெள்ளியினாலும், பொன்னினாலும் அதை அலங்கரித்து அதை அசையாத படிக்கு அதை ஆணிகளினாலும் சுத்திகளினாலும் உறுதியாக்குகிறார்கள். அவைகள் பனையைப் போல் நெட்டையாக நிற்கிறது. அவைகள் பேச மாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்க வேண்டும். ஆதலால் அவைகளுக்கு பயப்பட வேண்டாம். அவைகளுக்கு தீமை செய்யவும். நன்மை செய்யவும் சக்தியில்லை என்று கர்த்தர் சொல்கிறார். (எரே.10:3-5) அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள். காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் (அம்மரத்தில்) பாதியை அடுப்பில் எரித்தேன். அதில் தழலின் மேல் அப்பத்தையும் சுட்டு இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன். அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல தன் மனதில் அவனுக்கு தோன்றவில்லை. அம்மாத்திரம் அறிவும் உணர்வும் இல்லை. (ஏசா.44:18,19)

“அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும் மனிதனுடைய கைவேலையுமாய் இருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது; அவைகளுக்கு காதுகளிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது; அவைகளுக்கு கைகள் இருந்தும் தொடாது; அவைகளுக்கு கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவுமாட்டாது. அவைகளை பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்கள் யாவரும் அவைகளைப் போலவேயிருக்கிறார்கள்.” (சங். 115:4-8)



புறமதத்தினர் வணங்குவதுதான் விகார உருவங்கொண்ட விக்கிரகங்கள், அதைத்தான் தேவன் தடுத்தாரே அல்லாமல் நாங்கள் வணங்கக்கூடிய மேல் நாட்டில் செய்த அழகான உருவங்களை தடுக்கவில்லை என்று கிறிஸ்துவ மதத்தலைவர்கள் சுவிசேஷத்தில் வியாக்கியானப்படுத்தியிருக்கின்றனர். ஆனால் தேவன் எந்தவிதமான விக்கிரகத்தையும் சொரூபத்தையும் வணங்க வேண்டாம் என தடுத்து இருக்கின்றார். புறமதத்தினர் கல், மண், விக்கிரங்களை வணங்குவதோடு நின்றுவிட்டனர். ஆனால் புறமதத்தினரைவிட மோசமான நிலையில் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் பதம் பண்ணின பிணங்களையும், பஞ்சு நிரப்பின பொம்மைகளையும் புனிதப் பண்டங்களாக வைத்து மக்களை வணங்க செய்து பொருள் சம்பாதிக்கின்றனர் என்றால் இது எவ்வளவு பயங்கரமான செயல்! (உ-ம்) ரஷ்யாவில் புரட்சி காலத்தில் (1915-1917) புனிதப் பண்டங்கள் மீது குண்டு விழுந்தபோது வயிறு வெடித்து பஞ்சு பறந்தது, இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் காரணமாக கிறிஸ்தவமதம் அழிக்கப்பட்டு நாத்திகம் பரவினதாக பார்க்கிறோம்.

கடவுளைப் பற்றிய எண்ணமும் பக்தியும் எளிதில் மக்கள் உள்ளத்தில் நுழைய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாங்கள் விக்கிரக ஆராதனையை நுழைத்திருக்கிறோமென்று மதத்தலைவர்கள் கூறுகின்றனர். ஆனால் முகமதிய பள்ளி வாசலிலும். சில குறிப்பிட்ட கிறிஸ்தவ ஆலயங்களிலும் படம், சொரூபம், சிலுவை முதலிய எவ்வித உருவங்களையும் வைக்காததினால் அவர்களுக்கு தெய்வ ஞாபகமுமில்லை பக்தியுமில்லை என்று கூறமுடியுமா? ஒரு விக்கிரகத்தின் முன் பிரார்த்தனை செய்யும் போது நம் தியானம் விக்கிரகத்தோடே நின்று விடுகிறது. விக்கிரகமில்லாமல் கண்களை மூடி நம்முடைய மனதில் கடவுளை தியானிக்கும் போது, அது நேரே கடவுளிடம் சென்று அடைகிறது என்ற அனுபவத்தை நாம் அடையலாம். ஆனால், அதை

தடுத்து கடவுளுக்கு போகும் வணக்கத்தை சாத்தான் பெற்றுக் கொள்ள எண்ணம் கொண்டு விக்கிரங்களை வணங்கச் செய்து, மக்களின் மனதை குருடாக்கி கள்ளத்தனமாக துதியையும் கனத்தையும் பெற்றுக் கொள்கிறான். எனவே அப்போஸ்தலர் பவுல், "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை" (I கொரி.10:20) என்று கண்டித்திருக்கிறார். மேலும் தேவன், "என் ஜனங்களோ என்னை மறந்து மாயையான விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள்; செப்பனிடப்படாத பாதைகளிலும் வழியிலும் அவர்கள் நடக்கும்படி அவைகள் அவர்களைப் பூர்வ பாதைகளாகிய அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறது" என்று கூறுகிறார். (எரே. 18:15)

"விக்கிரங்கள் கட்டோடே ஒழிந்துபோம். மனுஷன் பணிந்து கொள்ள தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும் மூஞ்சூறுகளுக்கும், துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்." (ஏசா.2:18,21) "உன் சுரூபங்களை மூடிய வெள்ளித்தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம் போல எறிந்துவிட்டு, அதைச் சீ! போ என்பாய்." (ஏசா.30:22) பாபிலோன் (மதஸ்தாபனங்கள்) பிடிப்பட்டது; அதனுடைய சிலைகள் இலச்சையடைந்தது; அதனுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப் போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம் பண்ணுங்கள். (எரே 50:2) "வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள் பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு அழிந்து போகும் என்பதை அவர்களுக்கு சொல்லுங்கள்." (எரே 10:11) "உங்கள் பலிபீடங்கள் பாழாக்கப்பட்டு உங்கள் சிலைகள் தகர்க்கப்படும். உங்களில் கொலையுண்கிறவர்களை உங்கள் நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக விழப் பண்ணுவேன். உங்கள்



பலிபீடங்கள் நிர்மூலமும் பாழுமாகும். உங்கள் நரகலான விக்கிரங்கள் தகர்க்கப்பட்டு ஓய்ந்து உங்கள் சிலைகள் வெட்டுண்டு உங்கள் கிரியைகள் குலைந்து போகும்படிக்கும் உங்கள் சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர்மூலமும் உங்கள் மேடைகள் பாழுமாகும்." (எசேக் 6: 4,6) "அந்நாளிலே நான் விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன். அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை..." என்று சேனைகளின் கர்த்தராகிய யேகோவா சொல்லுகிறார். (சக. 13:2) இந்த தேவ வாக்குக்கிணங்க அநேக தேசங்களில் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. மூன்றாம் உலகப்போரில் உலகமெங்குமுள்ள விக்கிரகங்கள் பூரணமாக ஒழிந்துபோம்.

இதை வாசிக்கும் சகோதர, சகோதரிகள், மேற்சொன்ன விக்கிரக சொரூபங்களும், அவைகள் அமைக்கப்பட்டிருக்கும் ஆலயங்களும், அவைகளை சேவிப்பவர்களும் அழிக்கப்படுவார்கள் என்று கடவுள் கூறுவதால், என் ஜனங்களே, அவளை (துப்பறையான மதங்களை) விட்டு வெளியே வாருங்கள். (வெளி. 18:4) மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நீங்கள் நினைக்கலாகாது. (அப்.17:29) பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களை காத்து கொள்வீர்களாக. (I யோவா. 5:21) விக்கிரகங்களுக்கு படைத்த அசுசியானவைகளுக்கு நீங்கள் விலகியிருக்க வேண்டும் என்ற வேத எச்சரிப்புக்கிணங்க, உங்களை கறைப்படுத்திக் கொள்ளாமல் விக்கிரக ஆராதனையைவிட்டு வெளியேறி ஜீவனுள்ள தேவன் பக்கம் வாருங்கள். அவருக்கு உங்கள் உள்ளங்களை ஆலயமாக ஒப்புக் கொடுங்கள். (அப்.15:20; II கொரி.6:16,17)

**********

# 3. இரட்சிப்பு

*“கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே கிறிஸ்துவினுடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.” (அப்போஸ்தலர் 4:12)*

மனிதன் பிறக்கிறான்; சிலகாலம் வாழ்கிறான். அந்தக் காலத்தில் அவன் அனுபவிக்கிற கஷ்டங்கள், துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், அவலங்கள் எத்தனை? எத்தனை? இப்படி பஞ்சம், பட்டினி, நோய், கலவரம், விபத்து, போர், இயற்கையின் சீற்றம் முதலியவற்றால் அலைக்கழிக்கப்பட்டு துன்பத்தில் வாடுகின்ற மனிதன் சமாதானத்தை தேடியும் கிடைக்காமல் முடிவில் இறந்து விடுகின்றான். மனிதனின் இந்த அவல வாழ்க்கைக்கு ஒரு முடிவே இல்லையா? இப்படிப்பட்ட அவல நிலையே இல்லாத வாழ்க்கையை மனிதன் இந்த பூமியில் பெற்றால் இந்த பூமியே ஒரு சொர்க்கமாகவல்லவா இருக்கும்! தற்போதைய துயர வாழ்க்கை நீங்கி, சந்தோஷ, சமாதான வாழ்க்கைக்கு, மரணமே இல்லாத வாழ்க்கைக்கு, ஒரு தெய்வீகத் திட்டம் இருப்பதை நீர் அறிவீரா? இந்த தெய்வீகத் திட்டத்தை பைபிள் என்கிற வேதத்தை தவிர வேறு எங்கும் காண முடியாது. இத்திட்டத்தை அறிய நீர் ஆவலுள்ளவராய் இருக்கிறீரா?

ஆதியிலே தேவன், பாவமில்லாத சுயாதீனமுள்ள முதல் மனிதன் ஆதாமை தேவ சாயலாக (தேவ சாயலென்பது சரீரத்தை குறிக்காதபடிக்கு குண நலன்களை குறிக்கும்) சிருஷ்டித்தார். பின் ஆதாமிலிருந்து ஏவாளை உண்டாக்கி, அவ்விருவருக்கும் ஒரு கட்டளையை கொடுத்திருந்தார். அந்த தேவகட்டளையை அவர்கள் மீறி பாவம் செய்ததால், (1 யோவான் 3:4) மரணம் என்ற தண்டனைக்குள்ளானார்கள். ஆதாம் பாவம் செய்த போதும் பாவத்தின் சம்பளமாகிய (தண்டனையாகிய) மரணத்தை தேவன்



ஆதாமுக்கு கொடுத்த போதும், நாம் அனைவரும் ஆதாமுக்குள் பிறவாத சந்ததியாக இருந்தோம். ஆகையால் ஆதாமினுடைய பாவத்திலும், அதின் பலனான மரணத்திலும் நாம் அனைவரும் பங்கு பெற வேண்டியதாகிவிட்டது. இவ்வாறு ஆதாம் என்கிற ஒரு மனிதனாலே உலகுக்கு பாவமும், பாவத்தினால் மரணமும் உண்டாயிற்று. (ரோமர் 6:23; 5:12, 15, 18, 19)

அந்தப்படி ஆதாமிலிருந்து உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய வாழ்க்கை முழுவதும் பலவிதமான அவல நிலைக்கு ஆளாகி முடிவில் மரணத்தை ருசி பார்க்கிறான். இந்த அவல நிலையிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலை பெறுவதே ‘இரட்சிப்பு’ என்பதாகும். வேதம் ‘இரட்சிப்பு’ என்பதை சில இடங்களில் ‘நித்திய ஜீவன்’ என்றும் குறிப்பிடுகிறது. நித்திய ஜீவன் என்றால் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலையாகி முடிவில்லா வாழ்வை பெறுவது. அதாவது நித்திய காலமும் ஜீவனோடிருப்பது என்பதாகும்.

ஆதாமும் அவனுடைய சந்ததியாரும் மன்னிப்படைந்து, இரட்சிப்பைப் பெற வேண்டுமானால், இரத்தம் சிந்தப்படவேண்டும். ஏனென்றால்.... “இரத்தம் சிந்துதலில்லாமல் (பாவ) மன்னிப்பு உண்டாகாது” என்று வேதம் கூறுகிறது. (எபிரேயர் 9:22; லேவியராகமம் 17:11) இந்த தேவ நீதியின்படி, ஆதாம் என்கிற ஒரு பூரண மனுஷன் பாவஞ் செய்தபடியால், ஆதாமுக்கு ஈடாக பாவமில்லாத ஒரு பூரண மனுஷன் இரத்தம் சிந்தி பலியாக வேண்டும். ஆனால் பாவமில்லாத பூரண மனுஷன் உலகில் யாருமில்லை. ஆகையால் ஆதாமினுடைய பாவத்தையும், அதற்குத் தண்டனையாகிய மரணத்தையும் ஏற்றுக் கொண்டு ஆதாமுக்கு சரிசமமான ஈடுபலியை (மீட்கும் பொருளை) கொடுக்க யாராலும் இயலவில்லை. (சங்கீதம் 49:7,8) எனவே தேவன் மனுக்குலத்தின் மேல் வைத்த அன்பினாலே தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இரண்டாம் ஆதாமாக உலகுக்கு அனுப்பினார். இயேசு

கிறிஸ்து ஆதாமினுடைய சந்ததியினரைப் போல பிறவாதபடிக்கு, கன்னியினிடத்தில், பரிசுத்த ஆவியினால் பிறந்த காரணத்தினால் பாவம் இல்லாத, பூரண மனுஷனாக இருந்தார். இவர் தமது வாழ்க்கை முழுவதும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பாவமில்லாமல் வாழ்ந்து, அவர் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்; தம்மைத் தாமே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்தார். எனவேதான், "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்"என்றும், "இயேசு கிறிஸ்து" சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாயிருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. அதாவது ஆதாமினுடைய மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல, கிறிஸ்துவினுடைய கீழ்ப்படிதலினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. கிறிஸ்துவின் பலியை தேவன் ஏற்றுக் கொண்டதினால், மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனை தேவன் வாக்குத் தத்தம் பண்ணினார். (1 கொரிந்தியர் 15:45; I பேதுரு 2:24; மத்தேயு 20:28; I யோவான் 1:7; 2:2; ரோமர் 5:18; I யோவான் 2:25)

தேவன் வாக்குத்தத்தம் பண்ணின நித்திய ஜீவனை பெறுவது எப்படி? ஒன்றான மெய்த் தேவனாகிய யேகோவாவையும், அவரால் அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவையும் அறிந்து கொள்ள வேண்டும். இவர்களைக் குறித்து அறிய சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்பதோடு கூட வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவும் வேண்டும். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவை பற்றிய பிரசங்கமே. இந்த சுவிசேஷமே இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு தேவ பெலனாயிருக்கிறது. இதையே வேதமும், "உமது வசனமே சத்தியம்" என்றும் "சத்தியமே விடுதலையாக்கும்" என்றும் கூறுகிறது. மேலும் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும். சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. (யோவான் 17:3; 5:39; ரோமர் 16;26; 1:16; யோவான் 17:17; 8:32;



1 தீமோத்தேயு 2:4)

சத்தியத்தை அறிந்து, இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று முதலில் விசுவாசிக்கவேண்டும். இந்த கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால்தான் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்றும் விசுவாசிக்க வேண்டும். ஏனெனில் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு கிறிஸ்துவை நமக்காக தேவன் தந்தருளியிருக்கிறார். மேலும் இந்த கர்த்தராகிய கிறிஸ்துவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்றும் விசுவாசிக்க வேண்டும். இதைத்தான் அப்போஸ்தலனாகிய பேதுருவும், "கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கிறிஸ்துவினுடைய நாமமேயல்லாமல் வேறோரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று அப்போஸ்தலர் 4:12ல் கூறுகிறார். இந்த விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். (மத்தேயு 16:16; யோவான் 3:16; ரோமர் 10:9; எபிரேயர் 11:6)

அதன் பிறகு ஒவ்வொரு மனிதனும் தான் பாவி என்கிறதை உணர்ந்து மனந்திரும்ப வேண்டும். ஏனெனில் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். இவ்வாறு மனந்திரும்பியவர்கள், பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் (தேவனோடு நல் மனசாட்சியின் உடன்படிக்கை) பெறவேண்டும். ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிப்புக்குள்ளாக வர முடியாது. இவ்வாறு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுபவர்களை தேவன் நீதிமானாக்குகிறார். தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை தாம் பொறுத்துக் கொண்டதைக்

குறித்து தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாக இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை தேவன் நீதிமானாக்குகிறார். (II கொரி 7:9; அப்போஸ்தலர் 17:30; 2:38; யோவான் 3:3 ரோமர் 3:25; அப்போஸ்தலர் 8:37,38)

ஞானஸ்நானத்தின் மூலமாகக பரிசுத்த ஆவியைப் பெற்று, அது முதல் நித்திய ஜீவ பாதையில் நடந்து ஆவியின் கனிகளை வெளிப்படுத்தி மரண பரியந்தம் நிலைத்திருந்தால் உயிர்த்தெழுதலுக்குப்பின் "இரட்சிப்பு" கிடைக்கும். சிலர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாக இக்காலத்திலேயே மரணத்திலிருந்து விடுதலை கிடைக்குமா? என்று கேட்கிறார்கள். அப்படியல்ல இப்பொழுது நாம் விசுவாசித்து, இரட்சிப்பிற்குள்ளாக வந்தாலும், நாம் ஆதாமின் சந்ததியினராக இருப்பதால், ஆதாமுக்குள் நாம் எல்லோரும் மரித்தே ஆக வேண்டும். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்ததினால், நாமும் கிறிஸ்துவுக்குள்ளாக உயிர்தெழுந்து பிறகு நாம் "நித்தியஜீவனை" அதாவது "இரட்சிப்பை" பெற்றுக் கொள்வோம். ஆகையால் இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். (அப் 2:38; கலா 5:22, 23; மத்தேயு 24:13; யோவான் 5:28,29; 1 கொரிந்தியர் 15:21,22; 15:19)

மேலும் அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த பூர்வ உலகத்தை தேவன் ஜலப்பிரளயத்தினால் அழித்தார். நீதியை பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டு பேரை மட்டும் அதிலிருந்து காப்பாற்றினார். அதைப்போலவே இந்த உலகமும் இப்போது அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு 2:5; 3:5-7) உலகம் உண்டானது முதல் இதுவரை சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான பெரிய ஆபத்தை இந்த உலகம் எதிர் நோக்கியிருக்கிறது. (மத்தேயு 24:21) இதில் நோவாவைப் போன்ற விசுவாசிகள் மட்டுமே காக்கப்படுவார்கள்; மற்ற அனைவரும் அழிக்கப்படுவார்கள். இந்த



மாபெரும் அழிவிலிருந்து காக்கப்பட வேண்டுமெனில் இப்போதே இயேசு கிறிஸ்து என்னும் பேழைக்குள் வந்து விடுங்கள்.

இந்த உலகம் அழிக்கப்பட்ட பிறகு இயேசு கிறிஸ்து எல்லோரையும் உயிர்த்தெழுப்பி விசுவாசிகளுக்கு நித்திய ஜீவனையும், அவிசுவாசிகளுக்கு ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பையும் வழங்குவார். இந்த நியாயத்தீர்ப்பின் நாளில் அவிசுவாசிகளுக்கு தண்டனையைக் கொடுத்து, அதே சமயத்தில் சத்தியத்தையும் போதிப்பார். சத்தியத்தை கேட்டு மனந்திருப்புகிறவர்களை ஆசீர்வதித்து, மனந்திருந்தாதவர்களை இரண்டாம் மரணத்தில் அழிப்பார். பிறகு வியாதி, கண்ணீர், மரணம், பாவம் எல்லாம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, இந்த உலகம் முற்றிலுமாக புதுப்பிக்கப்படும் எல்லா மனுஷர்களும், சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வார்கள் அப்போது இந்த உலகமே ஒரு சொர்க்கமாக இருக்கும். (யோவான் 5:28, 29; ஏசாயா 26:9; வெளி 21:8,4)

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்? (எபிரேயர் 2:4) நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும், பாவியும் எங்கே நிற்பான்? (1 பேதுரு 4:18) ஆகையால் நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. (பிரசங்கி 12:1) இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள். (கொரிந்தியர் 6:2)

**********

# 4. ஞானஸ்நானம்

*"....ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." [ஐ பேதுரு 3:21]*

நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலர்களும் தண்ணீர் மூலமாக முழுக்கு ஞானஸ்நானம் பெற்றதைப்போல, ஒவ்வொரு கிறிஸ்தவனும், எந்தப் பிரிவைச் சார்ந்தவராயினும் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க, ஞானஸ்நானம் பெறவேண்டியது ஒரு அவசியமான வெளியரங்கமான காரியமாக இருக்கிறது.

ஞானஸ்நானம் என்ற சொல் "பேப்டைசோ' (BAPTIZO) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தான் பேப்டிசம் (BAPTISM) என்ற ஆங்கில வார்த்தை வந்தது. "பேப்டைசோ" என்கிற இந்த வார்த்தைக்கு முழுவதுமாக முழுகுதல் என்று பொருள். எனவேதான் யோவான் ஸ்நானகனும், சாலீம் ஊருக்குச் சமீபமான அயினேன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாய் இருந்தபடியால் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். (யோவான் 3:23) எனவே முழுக்கு ஞானஸ்நானம் அவசியம் என்று தெரிகிறது. தெளித்தல் ஞானஸ்நானம் போதுமென்றால் யோவான் தண்ணீர் நிறைந்த இடத்திலே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டிய அவசியமில்லையே.

பிலிப்பு, மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, "இதோ தண்ணீர் இருக்கிறதே. ஞானஸ்நானம் எடுப்பதற்கு தடையென்ன?" என்று மந்திரி கேட்கின்றார். (அப் 8:35-38) அதற்கு பிலிப்பு "முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" என்று கூறுகிறார். இதிலிருந்து, ஞானஸ்நானம் எடுக்க (முழுகுகிறதற்கு) தண்ணீரும், விசுவாசமும் அவசியம் எனத் தெரிகிறது. மேலும் கிறிஸ்துவும், "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் 3:5) என்று கூறி தண்ணீர் ஞானஸ்நானத்தை வலியுறுத்துகிறார்.



நாம் தண்ணீரில் மூழ்கும்போது, இவ்வுலகத்திற்கு மரித்து இயேசுவோடு கூட அடக்கம் பண்ணப்படுகிறோம். தண்ணீரிலிருந்து எழுந்திருக்கும் போது பழைய பாவ மனிதன் மரித்து புதிய ஜீவியாக, மனிதனாக பிறக்கிறோம்; உயிர்த்தெழுகிறோம். முகம் மேல் பக்கமாக பார்த்தபடி அடக்கம் செய்யப்படுவது போல, நாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது ஞானஸ்நானம் கொடுப்பவர் நமது முகம் மேலே பார்த்தப்படி பின்பக்கமாக முழுக்காட்டுகிறார்.

இவ்விதமாய் நாம் மூழ்கும் போது:-

1. நமது சுய சித்தத்தை மூழ்கடிக்கின்றோம்.
2. ஜீவனத்தின் பெருமைகளை மூழ்கடிக்கின்றோம்.
3. ஐசுவரிய மயக்கங்களை மூழ்கடிக்கின்றோம்.
4. மாயையான அறங்குலம் பெருமைகளை மூழ்கடிக்கின்றோம்.

இதுவரை நடந்துவந்த சகல உலகப்பிரகாரமான நடவடிக்கை களையும் மூழ்கடிக்கின்றோம்.

நமது சித்தத்தை வெறுத்து தேவனுடைய சித்தத்துக்கு நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்கிறோம். நமது பலத்தால் நிற்காமல் தேவ பலத்தில் நிற்க நம்மை தத்தம் செய்கிறோம். இதைக் காண்பிக்கவே, நாம் பின்பக்கமாக முழுக்காட்டப்படும்போது, நமது சுய பலத்தால் எழுந்திருக்க முடிவதில்லை. ஞானஸ்நானம் கொடுப்பவர் நம்மை தூக்கிவிடுகிறார். இதுவே முழுக்கு ஞானஸ்நானத்தின் தாற்பறியமாகும். தெளித்தல் ஞானஸ்நானம் கொடுத்தால் இந்தத் தாற்பரியத்தை எப்படி விளக்க முடியும்?

உண்மையான ஞானஸ்நானம் என்பது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுதல் என்று பார்த்தோம். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது உண்மையான ஞானஸ்நானத்தை விளக்குகிற ஒரு வெளியரங்கமான அடையாளமாக இருக்கிறது. இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய **மரணத்துக்குள்ளாக** ஞானஸ்நானம்

பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவரது மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவரது உயிர்த்தெழுதலின் சாயலிலும் நாம் இணைக்கப்பட்டிருப்போம்" என்று ரோமருக்கு எழுதிய நிரூபத்திலும், கொலோசெயருக்கு எழுதிய நிரூபத்திலும் விளக்குகிறார். (ரோமர் 6; 3-5; கொலோ 2:12) இதில் நிபந்தனை மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டால் தான் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட ஏதுவாகும்.

ஆகையால்தான் இயேசு கிறிஸ்து, ஏற்கனவே யோர்தானில் யோவான் ஸ்நானகன் மூலமாக ஞானஸ்நானம் பெற்றிருந்தும் கூட, "ஆகிலும் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் நான் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்று கூறுகிறார். (லூக்கா 12:50) தமது மரணத்தைத்தான், இங்கு ஸ்நானம் என்று கூறுகிறார். (மத்தேயு 20:22; மாற்கு 10:38) ஆகையால் தண்ணீர் ஞானஸ்நானம் என்பது தம்மை முற்றிலுமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, தேவனுக்கு தமது சித்தத்தை கீழ்ப்படுத்தி மரணபரியந்தம் அதில் நிலைத்திருப்பதற்கான ஒரு அடையாளமாகும். ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாக அமைய வேண்டும். (1 பேதுரு 3:21)

ஆனால், சிலர் பரிசுத்த ஆவியினால் கொடுப்பதே சரியான ஞானஸ்நானம், தண்ணீரினால் கொடுப்பது ஞானஸ்நானமல்ல என்று கூறுகிறார்கள். நமது கர்த்தரின் வார்த்தையை (மத்தேயு 28: 18-20) அவர்கள் சரியாய் கவனிக்கிறதில்லை. சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் யாருக்காவது ஞானஸ்நானம் கொடுக்க முடிந்ததா? நிச்சயமாக இது தேவனால் அருளப்படக்கூடிய ஒரு காரியம். போதித்து, வெளியரங்கமான தண்ணீர் ஞானஸ்நானத்தைத்தான் நாம் கொடுக்கமுடியுமே தவிர



பிறருக்காக நாம் விசுவாசிக்கவோ அல்லது விசுவாசிக்கச் செய்யவோ நம்மால் முடியாது. அதேபோல் அவர்களுக்காக நாம் ஞானஸ்நானம் எடுக்கவோ, அல்லது அவர்களை ஞானஸ்நானம் எடுக்க வைக்கவோ முடியாது. நாம் அவர்களுக்கு போதிக்க மட்டுமே முடியும். அவர்கள் விசுவாசித்து தேவனுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தால், நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கலாம். இந்த செய்கை மூலம் அவர்கள் கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் தங்களது விசுவாசத்தை உறுதி செய்து, உலகத்திற்கு மரித்து கர்த்தருக்கென்று ஜீவிக்கிறார்கள். ஏற்றக் காலத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள்.

சிலர் ஞானஸ்நானம் நியாயப்பிரமாணத்தின் கட்டளை என்கின்றனர். இதற்கு யோவான் ஸ்நானகன் கொடுத்து வந்த ஞானஸ்நானத்தை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள். ஆனால் அவர்கள், "நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" (மத்தேயு 28;19) என்று நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகம் எழுந்தருளுவதற்கு முன்பு சீஷர்களிடம் கூறியதைக் கவனிக்கிறதில்லை. யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்பதற்காக மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தை இஸ்ரயேலருக்கு மட்டுமே கொடுத்து வந்தான். (அப்போஸ்தலர் 19:4: 13:24)

நமது ஆண்டவர், முதலாவது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், அதன் பிறகு அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்ற விரும்புகிற விசுவாசிகளுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கவும் கட்டளை கொடுத்தார். (மத்தேயு 28:19; மாற்கு 16:16) இதை அப்போஸ்தலர்களும் கடைப்பிடித்தனர். ஆனால், அவர்கள் அவிசுவாசிகளுக்கோ, குழந்தைகளுக்கோ, பேதைகளுக்கோ ஞானஸ்நானம் கொடுத்ததாக வேதத்திலே ஆதாரம் கிடையாது. குடும்பத்தோடு ஞானஸ்நானம் பெற்றதாக வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு, அந்தக் குடும்பத்தில் அவிசுவாசிகளாகிய குழந்தைகளும் இருந்திருக்கலாமே, அவர்களும் ஞானஸ்நானம்

பெற்றிருப்பார்களே எனக் கூறுவோரும் உண்டு, ஆனால் கிறிஸ்து அவிசுவாசிகளுக்கோ, குழந்தைகளுக்கோ (விசவாசம் என்பது என்னவென்று தெரியாதவர்களுக்கோ) ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லி கட்டளைக் கொடுக்காமல், சகல ஜாதிகளையும் சீஷராக்கி (விசுவாசிகளாக்கி) ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லி கட்டளையிட்டார். (மத்.28:19) அப்போஸ்தலர்கள் அதைக் கடைப்பிடிக்காமல் இருந்திருப்பார்களா? நிச்சயமாக கடைப்பிடித்திருப்பார்கள். ஆகையால் அப்போஸ்தலர்கள் குடும்பம் அனைத்திற்கும் ஞானஸ்நானம் கொடுத்திருந்தாலும், அதிலுள்ள விசுவாசிகளுக்கு மட்டுமே (குழந்தைகளும், அவிசுவாசிகளும் நீங்கலாக) ஞானஸ்நானம் கொடுத்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

குழந்தை ஞானஸ்நானத்தையும், தெளித்தல் ஞானஸ்நானத்தையும் கடைப்பிடிக்கின்ற சில சபைகள் தண்ணீர் ஞானஸ்நானம்தான் சபையில் சேருவதற்கு வழியென்றும், ஞானஸ்நானம் எடுக்காமல் மரிக்கின்றவர்கள் நித்திய ஆக்கினையாகிய நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றும் போதிக்கின்றன. இது வேத வெளிச்சம் குறைவாயிருந்த இருண்ட காலத்தில் ஏற்பட்ட தவறான போதனைகளில் ஒன்று. மேலும் பல பெற்றோர்கள் தமது குழந்தைகள் தெளித்தல் ஞானஸ்நானம் இல்லாமல் இறந்துவிட்டால் நரகத்திற்கு போய் விடுவார்கள் என்று இன்றும் கூட நம்புகின்றனர். மேலும் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால் ஜென்மப் பாவம் நீங்கும் என்கின்றனர். ஞானஸ்நானம் பெற்றிருக்கும் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் ஜென்மப் பாவம் இருக்காதே. அந்தக் குழந்தைகள் ஏன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று கேட்டால் அவர்களால் பதில் சொல்ல முடிவதில்லை. ஆகவே விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப்போஸ்தலர் 8:12; 18:8) என்று வேதம் கூறுவதால் குழந்தை ஞானஸ்நானம் வேதத்துக்கு விரோதமானது.

அப்படியானால், ரோமன் கத்தோலிக்க சபையில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் தெளித்தல் ஞானஸ்நானம் எப்படி வந்தது



என ஆராயும்போது, சபையின் சரித்திரத்தை நாம் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆதி சபையிலே முழுக்கு ஞானஸ்நானமே நடைமுறையிலிருந்து வந்தது என்று பொதுவாக வேத ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக் கொள்கின்றனர். மூன்றாம் நூற்றாண்டிலே அநேக குழப்பங்கள் ஏற்பட்டு அநேக தப்பறைகள் சபையில் நுழைந்தன. இந்தத் தப்பறைகளில் தெளித்தல் ஞானஸ்நானமும் ஒன்றாகும். எனவே வேதத்தின்படியும் சரி; சபைச் சரித்திரத்தின்படியும் சரி, முழுக்கு ஞானஸ்நானம்தான் சரியான ஞானஸ்நானம் ஆகும். சிலர் எண்ணுகிறபடி உள்ளான ஞானஸ்நானம் தான் முக்கியம் என்பது எப்படி தவறாகும் என்றால் உள்ளான ஞானஸ்நானத்தினை தேவன் மட்டுமே அறிய வழியுண்டு. அதை நம் கிரியை, பேச்சு, சொல் முதலிய எல்லாவற்றாலும் சாட்சி பகர நமக்கு கடமையுண்டு. அதுவே "எல்லா நீதியையும் நிறைவேற்றுவது ஆகும்." தண்ணீரை எக்காலத்திலும் விலக்கலாகாது.

சிலர், நான் மரணபரியந்தம் என்னை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படி இருக்கும்போது நான் ஏன் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்? இந்த ஒரு சிறிய காரியத்திற்காக கர்த்தர் என்னை தள்ளி விடுவாரோ என்று கூறுகிறார்கள். கிறிஸ்துவின் பாதையில் நடக்கிறவர்களை கீழ்ப்படியவேண்டும் என்று தேவன் பலவந்தப்படுத்தவோ கட்டளையிடவோ மாட்டார். இஸ்ரயேலர்கள் அனைவரும் ஊழியக்காரர்கள். ஆகையால் அவர்களை நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியச் சொல்லி கட்டளையிட்டார். ஆனால் நாமோ தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோம். ஆகையால் நம் பிதா நமக்குக் கட்டளையிட வேண்டும் என்று எண்ணாமல் சுயாதீனமாகவே அவரது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். நாம் நமது சித்தத்தை அவருக்குக் கீழாக்கியது உண்மையானால் நம்மை அவருக்கு முற்றிலுமாக ஒப்புக் கொடுத்தது உண்மையானால், அவருடைய சித்தமாகிய தண்ணீர் ஞானஸ்நானத்தை ஏன் எடுக்க வேண்டும் என்று கேள்வி கேட்க மாட்டோம். இந்தச் சிறிய

காரியத்தில் கூட தேவனுக்குக் கீழ்ப்படியாதவன் எப்படி பெரிய காரியங்களில் கீழ்ப்படிவான்? ஏனெனில் கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவன். (லூக்கா 16:10) மேலும், கொர்நேலியு வீட்டில், பேதுரு சத்தியத்தைக் குறித்து பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தை கேட்டவர்கள் மேல், பரிசுத்த ஆவி இறங்கியது. பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்கள் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு தண்ணீரை விலக்கலாமா? என்று கூறி பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். எனவே தண்ணீர் ஞானஸ்நானம் அவசியமானதாகும்.

ஆகவே நாம் மனந்திரும்பி, பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறவேண்டும். அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வோம். (அப் 2:38) கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்தானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைப் பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறோம். எல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம். (கலாத்தியர் 3;27-29)

*************



# 5. மரித்தோர் எங்கே?

"மனுஷனோ வென்றால் செத்தபின் ஒழிந்து போகிறான்.
மனுபுத்திரன் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே?" (யோபு 14:10)

மரித்தோர் எங்கே? என்ற இந்த கேள்விக்கு ஒவ்வொரு மனிதனும் உண்மை பதிலைக் கண்டறிய மிகவும் ஆவலுள்ளவனாய் இருக்கிறான். ஏனெனில் மரணம் என்பது எல்லோரையும் ஆட்கொள்ளக் கூடிய ஒன்றாகவே இருக்கிறது.

"மனுஷன் மிருகத்தைப் போலச் செத்து அழிந்து போகிறான்" என்று சிலர் பதிலளிக்கின்றார்கள். புறமதஸ்தர்கள், "மனிதன் மரித்தவுடன் இந்த ஜீவிய காலத்தில் அவன் செய்த கிரியைகளுக்கு ஏற்ற உயர்ந்த அல்லது தாழ்ந்த பிறவியை எடுக்கிறான். அதாவது, இந்த ஜீவியத்தில் நன்மை செய்தால், மேன்மையான பிறப்பை அடையலாம். தீமை செய்தால், மரணத்திற்குப்பின், இழிகுல ஜந்துவாகப் பிறப்போம்" என்கின்றனர். வேறு சிலர், "நல்லவர்களாக ஜீவித்து மரித்தவர்கள் ஆவிகள் உலகத்தில் உல்லாசமாக வாழ்கிறார்கள் என்றும், பொல்லாதவர்கள் பலவிதமான வேதனைகளை அடையக்கூடிய நரகத்திற்குப் போவார்கள்" என்றும் கூறுகின்றார்கள். இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது என்று கேட்டால், அதற்கு அவர்கள், "பரம்பரையாகக் கிடைத்தவைகள். எங்கள் முன்னோர்கள் நம்பினார்கள். நாங்களும் நம்புகிறோம். இவைகள் எங்கே உற்பத்தியாகியது? என்று தெரியாது. வெகு காலத்திற்கு முன்பே ஞானிகள் இதை எங்களுக்கு ஒப்புவித்திருக்கிறார்கள். நாங்களும் அவைகளை அப்படியே நம்பிக் கொண்டிருக்கிறோம்" என்கின்றனர்.

கிறிஸ்தவ மண்டலத்தில் பெரும்பான்மையினராகிய ரோமன் கத்தோலிக்கர்கள், "மனிதன் மரிக்கும்போது மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்திற்குப் போகிறான். அதாவது பரிசுத்தவான்கள், மரணம் வந்த மறு நிமிடத்திலே பரலோகத்திற்கு, தேவனுடைய சந்நிதானத்திற்கு (மோட்சத்திற்கு) போகிறார்கள் என்றும், சாவான பாவம் செய்து மரித்தவர்கள் நரகம் என்கிற சதாகாலங்களிலும் வேதனை அடைகிற

இடத்திற்குப் போகிறார்கள் என்றும்; அற்ப பாவம் செய்தவர்கள் உத்திரிக்கும் ஸ்தலத்திற்குப் போகிறார்கள்" என்றும் கூறுகிறார்கள். உத்திரிக்கும் ஸ்தலத்திலே பெறுகிற தண்டனை மூலம், பாவம் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கப்பட்டுக் கடைசியில் மோட்சத்திற்கு போகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

இந்த உத்திரிக்கும் ஸ்தலத்தில் படும் சித்ரவதைகளைக் குறித்து தாந்தே (Dante) என்ற கத்தோலிக்க கவிஞரின் இன்பெர்னோ (Inferno) காவியமானது மிகவும் விபரமாக விளக்குவதாகக் கூறுகிறார்கள். டோரே (Dore) என்ற கத்தோலிக்க சித்திராசிரியர் தாந்தேயின் காவியத்தை சித்திரமாக வரைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். செங்குத்தான மலை உச்சியிலிருந்து கொதிக்கிற நீரில் விழுகிற வரையில் பிசாசுகள் துரத்துகிறதாயும், வேறு சிலரைத் தலைகீழாகத் தொங்க வைக்கிறதாயும், சிலரை கால்களை குழிகளில் புகுத்தி எரிக்கிறதாயும், சிலரை சர்ப்பங்கள் கடிக்கிறதாயும் அந்த படங்கள் காட்டுகின்றன. இதெல்லாம் வேதத்திற்கு இசைவாயிராமல் மனிதனின் கற்பனை ஓவியமாகவே இருக்கிறது. மேலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத புற மதஸ்தர்களுக்கு நரகம் மட்டுமே கிடைக்கும் என்கின்றனர்.

புரட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள், ரோமன் கத்தோலிக்கர் கூறுமிடங்களில் ஒன்றான உத்திரிக்கும் ஸ்தலத்தை நீக்கிவிட்டு, நல்லவர்கள் மோட்சத்திற்கும், தீயவர்கள் நரகத்திற்கும் போகிறார்கள் என்று கூறுகின்றனர். புரட்டஸ்டன்ட் அல்லாதாருக்கு நரகமே கிடைக்கும் என்கின்றனர். மேலே சொல்லப்பட்ட கிறிஸ்துவ சபைகளின் கருத்துக்களைப் பார்க்கும்போது புறமதஸ்தருக்கு, நரகம் மட்டுமே கிடைக்கும் என்று கூறுவதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்காக மட்டுமல்ல; ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார். (எபிரேயர் 2:9) கிறிஸ்து நம்முடைய (கிறிஸ்தவர்களுடைய) பாவங்களை மட்டுமல்ல; சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (I யோவான் 2:2) கிறிஸ்தவ மார்க்கங்கள் (ரோமன் கத்தோலிக்கர், புரட்டஸ்டன்ட்) போதிக்கிற



இந்த போதனைகள் எல்லாம் இருண்ட யுகங்கள் என்று சொல்லப்படுகிற (சத்திய வெளிச்சம் மிகக் குறைவாக இருந்த) காலத்தில் ஏற்பட்டவைகளாகும். ஆனால், தற்காலம் சத்திய வெளிச்சம் அதிகமாகப் பிரகாசிக்கிற காலமாக இருக்கிறது. புறமதத்தவருக்கும் சத்தியம் தற்போது அதிகமாக போதிக்கப்படுகிறது.

வேத வெளிச்சம் அதிகமாகப் பிரகாசிக்கிற இக்காலத்தில் நாம் வேதத்தை ஆராய்ந்து மரித்தோர் எங்கே என்ற கேள்விக்கு பதில் காண்போம்.

மனிதன் மரித்தவுடனேயே மோட்சத்திற்கோ, நரகத்திற்கோ...... போகிறான் என்ற கொள்கை, மரணம் என்பது உண்மையாகவே சாவு இல்லை; மரணத்திற்குப் பிறகு வேறொரு ஜீவியத்தில் (மோட்சத்திலோ, நரகத்திலோ) நுழைந்து விடுகிறார்கள் என்று கூறுகிறதாக இருக்கிறது. இது HúRu úRôhPj §p Nôj Rôu HY ô° Pm "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று கூறிய பொய்யை நிலைநாட்டுவதாக இருக்கிறது. சாத்தான் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். (யோவான் 8:44)

நாம் வேதவாக்கியங்களை ஆராயும்போது, நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவைத் தவிர பரலோகத்திற்கு யாரும், தாவீதும் கூடப் போகவில்லை எனத் தெரிகிறது. (யோவான் 3:13; அப்போஸ்தலர் 2:34)

மனிதன் மரித்தவுடனேயே, மோட்சத்திற்கோ, நரகத்திற்கோ போகிறான் என்றால், உயிர்த்தெழுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. உயிர்த்தெழுதல் இல்லையென்றால், கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், தேவன் அவரை உயிர்த்தெழுப்பினார் என்று நாம் தேவனுக்காக பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகக் காணப்படுவோம். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. (I கொரிந்தியர் 15:13-18)

உயிர்த்தெழுதலுக்கு என்று தேவன் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். (யோவான் 11:24) நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின்தான் உயிர்த்தெழுதல் நடக்கும்.

ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (I கொரிந்தியர் 15:22, 23; யோவான் 5:28, 29; தானியேல் 12:1, 2; அப்போஸ்தலர் 24:15)

உயிர்தெழுதலுக்குப்பின்தான் நியாயத்தீர்ப்பு நடக்கும். அப்படியானால், மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் இடையிலுள்ள காலத்தில் மரித்தோர் எங்கேயிருக்கிறார்கள்? இதுதான் நம்முடைய கேள்வியாக உள்ளது. இதற்கான விடையை கீழே கொடுத்துள்ள வசனங்களை தியானித்து அறிந்து கொள்வோம்.

சங்கீதம் 71:20 "என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னை பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்."

யோபு 14:10 "மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்து போகிறான். மனுபுத்திரன் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே?"

பிரசங்கி 9:5 "........மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்."

யோபு 14:21 "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும், உணரான். அவர்கள் சிறுமைப்பட்டாலும், அவர்களைக் கவனியான்."

"பிரசங்கி 9:10 ".......நீ போகிற பாதாளத்திலே செய்கையும், வித்தையும் அறிவும், ஞானமும் இல்லையே."

"சங்கீதம் 6:5 "மரணத்தில் உம்மை நினைவு கூருவதில்லை; பாதாளத்தில் உம்மை துதிப்பவன் யார்?"

யோபு 17:1 "என் சுவாசம் ஒழிகிறது; என் நாட்கள் முடிகிறது. பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது."

யோபு 17:16 "அது பாதாளத்தின் காவலுக்குள் இறங்கும், அப்போது தூளில் (மண்ணில்) இளைப்பாறுவோம்."

ஏசாயா 38:18 "பாதாளம் உம்மைத் துதியாது; மரணம் உம்மைப் போற்றாது. குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை."

சங்கீதம் 146:4 "அவனுடைய ஆவி பிரியும்; அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே, அவன் யோசனைகள் அழிந்துபோம்."



இதுவரை நாம் தியானித்த வசனங்களிலிருந்து மரித்தவர்கள், பாதாளம் என்கிற பிரேதக்குழியில், கல்லறையில்தான் இருக்கின்றார்கள் என்று தெரிகிறது. அங்கே அவர்கள் நித்திரையாயிருக்கிறார்கள். (தானியேல் 12:2; அப்போஸ்தலர் 7:60; ஏசாயா 51:2) அதாவது ஒன்றும் அறியாத நிலையிலிருக்கிறார்கள். இப்படியிருக்க அநேக கிறிஸ்தவ சபைகள் மரித்தவர்களுக்காக ஜெபிப்பதும் (உத்திரிக்கிற ஆத்துமாக்கள் திருவிழா), மரித்தவர்களிடம் (மேரி மாதா, பரிசுத்தவான்களிடம்) ஜெபிப்பதும் வேதத்திற்கு விரோதமான செயலாகும்.

"பாவத்தின் சம்பளம் மரணம்." (ரோமர் 6:23) "நீ மண்ணாய் இருக்கிறாய்; மண்ணுக்குத் திரும்புவாய்." (ஆதியாகமம் 3:19) இதுதான் பாவத்திற்கு கொடுக்கப்பட்ட தண்டனை. பாவத்தின் சம்பளம் நித்திய வேதனையாகிய நரகமானால், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மை அதிலிருந்து விடுவிக்கும்படி நமக்காக நித்திய வேதனையை அநுபவிக்க வேண்டியதாயிருந்திருக்குமே! ஆனால், கிறிஸ்து நமக்காக மரித்து பாதாளத்தில் இருந்தார் என்றே வேதம் கூறுகிறது. (I கொரிந்தியர் 15:3)

இயேசு மரித்த லாருவை உயிரோடு எழுப்பும்போது, அவன் கல்லறையிலிருந்துதான் வெளியே வந்தான். (யோவான் 11:43,44) அவன் பரலோகத்திலிருந்தோ, உத்திரிக்கும் ஸ்தலத்திலிருந்தோ வரவில்லை. ஆகையால், இந்த லாசருவைப் போலவே மரித்த ஒவ்வொருவரும் நமது ஆண்டவரின் சத்தத்தைக் கேட்டு, பிரேதக் குழிகளிலிருந்து எழுந்து வருவார்கள். (யோவான் 5:28,29)

எனவே, மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து மரித்தவர்கள் மோட்சத்திலோ, நரகத்திலோ, உத்திரிக்கிற ஸ்தலத்திலோ இல்லாமல் உயிர்த்தெழும் காலம் வரை பாதாளம் என்கிற கல்லறையில், அதாவது பிரேதக்குழியில் தான் இருக்கிறார்கள் என்று வேதம் தெள்ளத் தெளிவாக போதிக்கிறது.

**********

## 6. உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும்

மரணத்தின் துவக்கமும் முடிவும்

உலகில் மனிதன் பிறக்கிறான். சில காலம் வாழ்கிறான். பின் மரித்துப் போகிறான். இவ்வாறு மரிப்பதற்காகவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டானா? இல்லை. சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படிந்து சதாகாலங்களிலும் ஜீவிக்கவே சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால், மனிதனோ, சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படியாமல், பாவத்தில் விழுந்து, மரணத்தைத் தேடிக் கொண்டான். தேவன் அவனை அப்படியே விட்டுவிடாமல், மனிதனை மரணத்திலிருந்து விடுவிக்க, தனது ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பினார்.

மனுஷனால் (ஆதாமினால்) மரணம் உண்டானபடியால், மனுஷனால் (கிறிஸ்துவினால்) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (I கொரி. 15:21,22) மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், நம்முடைய விசுவாசமும் வீணாயிருக்கும், நாம் இன்னும் நம் பாவங்களில் இருப்போம். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள். (I கொரி 15:16-18)

### எல்லாரும் உயிர்த்தெழுந்தே ஆகவேண்டும் (தானி. 12:1)

நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், நம்மை அறியாமலேயே ஆதாமின் பாவத்தினால் நமக்கு மரணம் சம்பவிக்கிறது. அதேபோல், இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகரால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தேவ கிருபையால் ஒவ்வொருவரும் உயிர்த்தெழுப்பப்படுவோம். ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23) பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி



எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை (நியாயத் தீர்ப்பு) அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (யோவா 5:28.29) ஆகையால், சிலர் கூறுவது போல, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, அனைத்து மானுடரும் உயிர்த்தெழுவார்கள்.

### உன்னதமான ஒரே உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுந்தவர்களில் முதற் பலன் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவுக்கு முன் யாரும் உயிர்த்தெழுந்ததில்லை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்தான் அவருடையவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். (யோவா. 3:13; I கொரி 15:20,23) அதன்பின், மற்றவர்கள் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டு, தன்தன் வரிசையிலே உயிர்த்தெழுந்திருப்பார்கள், அப்படியானால், இதுவரை மரித்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. மரித்தோரெல்லாம் பாதாளத்தில் (குழி, நரகம்) நித்திரையிலிருக்கிறார்கள். இதுவரை யாரும் மோட்சத்திற்கோ, சதாகாலங்களிலும் எரிவதாகக் கூறப்படுகிற நரகத்திற்கோ செல்லவில்லை. நரகம் என்னப்படுகின்ற பாதாளத்திலே, நித்திரையாயிருக்கிறார்கள். ஆகையால், மரித்தோரெல்லாம் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டு உயிர்த்தெழுவார்கள்.

முதலாம் உயிர்த்தெழுதல், இரண்டாம் உயிர்த்தெழுதல் என இரு வகை உயிர்த்தெழுதலைக் குறித்து வேதம் கூறுகிறது. முதலாம் உயிர்த்தெழுதல்தான் மேன்மையான உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன், பாக்கியவானும், பரிசுத்தவானுமாய் இருக்கிறான். இவர்கள் தான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முதலாவது எழுந்திருப்பார்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவோடு கூட இவ்வுலகை ஆயிர வருஷம் ஆளத் தகுதியுள்ளவர்கள். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் இயேசு கிறஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் செய்யப்பட்டவர்கள். (வெளி. 20:4, 6)

முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுபவர்கள், ஆவிக்குரிய சரீரத்தை (வானவருடைய சாயல்), அதாவது தெய்வீக சரீரத்தைப் பெறுவார்கள். இவர்கள் உலகத்தை மாத்திரமல்ல, தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள். (I கொரி.15: 42-49; 6:2,3) இந்தத் தூதர்கள் நோவாவின் காலத்தில் தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்டவர்கள். (II பேது. 2:4; யூதா.6) இவர்களையும் சீருக்குக் கொண்டு வரும்படியேதான் இயேசு மரணத்திலிருந்து, ஆவியின் சரீரத்தில் எழுப்பப்பட்டபின், அந்த ஆவியிலே போய்க் காவலிலுள்ள ஆவிகளாகிய இவர்களுக்குப் பிரசங்கித்தார். (I பேது. 3:19,20) முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்களைத் தான் மணவாட்டி என்றும், சிறுமந்தை என்றும், வேதம் அழைக்கிறது. (லூக். 12:32; வெளி 21:9;22:17) சுவிசேஷ யுகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகள் மட்டுமே இந்த மணவாட்டிக்கு தகுதி படைத்தவர்கள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் யாரும் சிறுமந்தையில் அங்கமாக முடியாது. யோவான் ஸ்நானகனுக்கும் கூட இதில் பங்கில்லை.(மத். 11:11,12)

பொதுவான உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் அனைவரும் (சிறுமந்தையைத் தவிர மற்றவர்கள்) மாம்ச சரீரத்தைப் பெறுவார்கள். இவர்கள் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு நியாயத்தீர்ப்படைவார்கள். ஆனால் முதலாம் உயித்தெழுதலில் பங்கு பெறுபவர்கள், இந்தப் பூமியிலே மரிப்பதற்கு முன்பே நியாயத்தீர்ப்பு அடைந்திருப்பார்கள். (I பேது. 4:17)

**நியாயத்தீர்ப்பு எப்போது, எப்படி, யாரால்?**

மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே, அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். (அப். 17:31) இந்த ஒரு நாள் என்பது கடைசி நாள். இந்தக் கடைசி நாளில் தான் உயிர்த்தெழுதல் நடக்கும். (யோவான் 11:24) இதே கடைசி நாளில் தான் நியாயத்தீர்ப்பும் நடக்கும். (யோவான் 12:48) ஒரு நாள் என்பது ஆயிரம் வருடத்தைக் குறிக்கிறது. (II பேது. 3:8) இந்த ஆயிர வருட காலத்தில் தான் கிறிஸ்துவின் ஆளுகையும், நியாயத் தீர்ப்பும் பூமியிலே நடக்கும். (வெளி 20:4)



இந்த ஆயிர வருட அரசாட்சியின், நியாயத்தீர்ப்பின் காலத்தில் சகலத்தையும் முந்தின சீருக்குக் கொண்டு வந்து, ஆதாமில் இழந்து போனவைகளைத் திரும்பக் கொடுப்பதே முக்கிய நோக்கமாக இருக்கிறது. கிறிஸ்து தன் முதல் வருகையில் உலகமனைத்தின் பாவத்திற்கும், தம்மை ஈடுபலியாக ஒப்புக் கொடுத்தார். தமது இரண்டாம் வருகையில் இராஜாதி இராஜாவாக இருந்து, மகிமை பொருந்தினவராய் ஜனங்களை நீதியோடும், நியாயத்தோடும் அரசாளுவார். (சங்.72;1,2) அவர்தம் கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்பு செய்வார். (ஏசா.11:4)

இந்த ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்பத்திலே (நியாயத் தீர்ப்பின் நாளில்) சாத்தான் யாரையும் மோசம் போக்கக் கூடாதபடிக்குக் கட்டப்படுவான். (வெளி. 20:1,2) இந்த உலகத்திலே பாவம் செய்கிற யாவரும், "சாத்தான்தான் பாவம் செய்யத் தூண்டுகிறான். அவனைவிட பலவீனனானபடியால் நான் பாவம் செய்கிறேன்" என்று கூறுகிறார்கள். இப்படி சாத்தானை காரணம் காட்ட ஏதுவில்லாதபடி நியாயத் தீர்ப்பின் நாளிலே ஆயிர வருஷம் முடியுமளவும் சாத்தான் கட்டப்பட்டிருப்பான். அப்போது பாவம் செய்தால், அதற்கு முழுப்பொறுப்பும் அவர்களே.

சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது, மரணமும், பாதாளமும், தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன, யாவரும் அவரவர்களுடைய கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள் (வெளி.20:13) என்று வேதம் கூறுவதற்கேற்ப யார் யார் எங்கெங்கே மரித்தார்களோ ஆங்காங்கேயிருந்து உயிர்த்தெழுந்து வருவார்கள். தங்கள் கிரியைகளின்படி தண்டனையையும், அதே சமயத்தில் சீர்த்திருந்துவதற்குத் தேவையான படிப்பினையையும் பெறுவார்கள்.

கிறிஸ்துதான் உலகத்தில் வந்த ஒவ்வொரு மனுஷனையும், பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி. முதல் வருகையில் அவர் வந்தபோது, எல்லா மனுஷரும் அவரது ஒளியினால் பிரகாசிப்பிக்கப்படவில்லை. அவரது இரண்டாம் வருகையில், ஆயிரவருட அரசாட்சியில்தான்,

ஒவ்வொரு மனிதனையும் அவர் பிரகாசிப்பிக்கிறார். அவரது ஆட்சியில் பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசா. 11:9; ஆபகூக் 2:14) தேவன், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், சித்தமுள்ளவராயிருக்கிறார். அந்த சத்தியம் தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்பதே. அவர் தான் தம்மை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசு. (1 தீமோ. 2,5,6) இவ்வுலக வாழ்க்கையிலே சத்தியத்தை அறிய வாய்ப்புப் பெறாதவர்களுக்கும், விசேஷமாகக் கிறிஸ்துவுக்கு முன்னுள்ள மானுடருக்கும் புற மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் குருடர்களுக்கும் சத்திய அறிவு ஆயிர வருட அரசாட்சியிலே போதிக்கப்படும்.

### நித்திய நிரந்தர தீர்ப்பின் முடிவு - நன்மை

நியாயத் தீர்ப்பிலே புஸ்தகங்கள் திறக்கப்படும். ஒன்று சத்தியம், மற்றொன்று ஜீவப்புத்தகம். சத்தியத்தின்படி நியாயந்தீர்ப்பு அடைவார்கள். (வெளி.20:12) சத்தியம் போதிக்கப்பட்டு, சீர் திருந்தியவர்களின் பேர் ஜீவப் புத்தகத்தில் எழுதப்படும். ஜீவப்புத்தகத்தில் பேர் எழுதப்பட்டவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் அளிக்கப்படும்.

### தீமைக்கு ஒரு முற்றுப்புள்ளி

துன்மார்க்கருக்கு முடிவு அழிவே. இவர்களுக்குத் தயை செய்தாலும் நீதியை கற்றுக்கொள்ளமாட்டார்கள். நீதியுள்ள தேசத்திலும் (கிறிஸ்துவின் அரசாட்சியில்) அவர்கள் அநியாயம் செய்து, கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாது போகிறார்கள். (ஏசா. 26:10) ஆயிர வருட அரசாட்சியின் முடிவிலே சாத்தான் கொஞ்சகாலம் விடுதலையாகி, துன்மார்க்கரை, கிறிஸ்துவின் இராஜ்யத்திலும் சீர்திருந்தாதவர்களை கூட்டிச்சேர்ப்பான். வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்கள் எல்லோரையும் அழித்துப் போடும். (வெளி. 20:7-9) சாத்தான், கள்ளத் தீர்க்கதரிசிகள், அவிசுவாசிகள் எல்லோரும் அக்கினிக் கடலிலே பங்கடைவார்கள். மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்படும். இதுதான் இரண்டாம் மரணமாகும். (வெளி.20:10,14,15;21:8) சாத்தானையும், துன்மார்க்கர்களையும், பாதாளத்தையும், மரணத்தையும்



அழித்த பிறகு, கிறிஸ்து அவரது இராஜ்யத்தை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரி.15:24-28)

### துக்கத்தின் முடிவும் முடிவில்லா இன்பத்தின் தொடக்கமும்

இனி கண்ணீர் இல்லை, துக்கம், மரணமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. (வெளி.21:4) ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும்; கன்றுக் குட்டியும் பாலசிங்கமும், காளையும் ஒருமித்து இருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான், பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப் போல வைக்கோல் தின்னும், பால் குடிக்குங் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதம் எங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசா.11:6-9) வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப் போல செழிக்கும். (ஏசா. 35:1) அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப் போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வானாந்தரத்திலே தண்ணீர்களும் கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும். வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும், நாணலும் உண்டாகும். அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும், திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை. துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணபடவுமாட்டாது. மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும், மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம். (ஏசா. 35:5-10)

# 7. வேதம் கூறுகிற நரகம் எது?

நரகம் என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே கிறிஸ்தவர்கள் "அது பற்பல பயங்கரங்கள் நிறைந்த ஆழமான படுகுழி; அங்கே அக்கினி எரிந்து கொண்டேயிருக்கும்; அங்கே துன்மார்க்கர் சதா காலங்களிலும் சாகாமல் வெந்து கொண்டேயிருப்பார்கள்" என்று கூறுவார்கள். வேதம் தான் நமக்கு சட்டப் புத்தகம். வேதமே நமது விசுவாசத்திற்கும், நமது நம்பிக்கைக்கும் மூலாதாரமாக இருக்க வேண்டும். ஆகையால், தேவனால் அருளப்பட்ட வேதம் என்ன கூறுகிறது என்று தியானிக்கலாம்.

பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் மனிதன் மரித்தவுடன், மோட்சத்திற்கோ, நரகத்திற்கோ, போவதாக கூறுகின்றன. ஆனால் மனிதன் மரித்தவுடன் "பாதாளத்திற்கு" போகிறான் என்று வேதம் கூறுகிறது. "நீ போகிற பாதாளத்திலே, செய்கையும், வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே." (பிரசங்கி 9:10) "பாதாளம்" என்ற வார்த்தை "ஷியோல் (SHEOL)என்ற எபிரேயு வார்த்தையிலிருந்து பழைய ஏற்பாட்டில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 65 தடவை வரும் "ஷியோல்" என்ற இந்த எபிரேய பதம், தமிழ் வேதாகமத்தில் 3 தடவை மட்டும் நரகம் என்றும் 62 தடவை பாதாளம் என்றும், ஆங்கில வேதாகமத்தில் 31 தடவை பிரேதக்குழி (Grave) என்றும், 31 தடவை நரகம் (HELL) என்றும், 3 தடவை குழி (PIT) என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில புதுமொழி பெயர்ப்பில் (Revised Standard Version) ஷியோல் என்ற இந்த எபிரேய வார்த்தை 15 தடவை நரகம் (HELL) என்றும், 15 தடவை பிரேதக்குழி (Grave) என்றும், 5 தடவை குழி (PIT) என்றும், 30 தடவை ஷியோல் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் திருத்திய மொழி பெயர்ப்பில் எல்லா இடங்களிலும் "பாதாளம்" என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மேலும் மொழி பெயர்ப்பாளர்கள "ஷியோல்" என்ற இந்த வார்த்தை நல்லவர்களுக்கு வரும்போது, அதை "பாதாளம்" என்றும், துன்மார்க்கர்களுக்கு வரும் போது, அதை "நரகம்" என்றும் மொழி பெயர்த்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக, யோபு 14:13; சங்கீதம் 9:17 ஆகிய இரு வசனங்களிலும் "ஷியோல்" என்ற ஒரே



வார்த்தையே வருகிறது. யோபு நீதிமான் என்பதால், இந்த வசனத்தில் "பாதாளம்" என்றும், சங். 9:17-ல் "ஷியோல்" என்ற வார்த்தை துன்மார்க்கருக்கு வருவதால், அதை "நரகம்" என்றும் மொழி பெயர்த்துவிட்டனர்.

"ஷியோல்" என்ற வார்த்தையுடைய பழைய ஏற்பாட்டு வாக்கியங்களை அப்போஸ்தலர்கள், புதிய ஏற்பாட்டில் எடுத்துக் கூறும்போது "ஷியோல்" என்ற எபிரேயு வார்த்தைக்கு "ஹாதேஸ்" (Hades) என்ற கிரேக்க வார்த்தையை உபயோகிக்கிறார்கள். உதாரணமாக, ஓசியா 13:14-ல் கூறப்பட்டதையே அப்.பவுல் I கொரி. 15:54,55ல் "பாதாளமே! உன் ஜெயம் எங்கே" என்று குறிப்பிடுகிறார். (பழைய ஏற்பாட்டில் ஷியோல் - பாதாளம்; புதிய ஏற்பாட்டில் ஹாதேஸ் - பாதாளம்). ஆகையால் "ஷியோல்" என்ற எபிரேய பதமும், "ஹாதேஸ்" என்ற கிரேக்க பதமும் ஒரே கருத்துடையவைகள் என்று தெளிவாகிறது. புதிய ஏற்பாட்டில் "ஹாதேஸ்" என்ற பதம் 11 இடங்களில் வருகிறது. அதில் 10 இடங்களில் பாதாளம் என்றும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் மரணம் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

பாதாளம் என்பது அவியாத அக்கினியுள்ள ஓர் இடமல்ல; அது இருள் சூழ்ந்த இடம். (யோபு 17:13) அது உணர்ச்சியற்ற, வேதனை இல்லாத இடம்; (பிர.9:5,10) அது மரித்தவர்கள் இருக்கும் இடம்; (நீதி. 9:18) - அது நல்லவர்களும் போகும் இடம். (ஆதி. 42:38) மரித்த நீதிமான்கள், துன்மார்க்கர் அனைவரும் உயிர்த்தெழுதல் நடைபெறும் காலம் வரை இருக்கும் இடம் தான் பாதாளம் ஆகும். (யோபு. 14:13; வெளி.20:13)

மற்றொரு காரியத்தை நாம் இங்கு முக்கியமாக சிந்திக்க வேண்டும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து, பாதாளத்தில் இறங்கி, (ரோமர் 10:7) மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உமது பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று சங். 16:10ல் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்தே இப்படி எழுதப்பட்டதாக வேதம் அப். 2:27, 31ல் கூறுகிறது. இந்த இரு வசனங்களிலும் (சங். 16:10; அப். 2:27,31)

பாதாளம் என்பதற்கு ஆங்கில பைபிளில் HELL (நரகம்) என்று போடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து நரகத்திற்கு சென்றார், நரகத்திலிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று சொல்வது எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆகையால் இயேசு கிறிஸ்து மூன்று நாட்கள் இருந்தது அவியாத அக்கினியுள்ள நரகமல்ல; பாதாளம் என்கிற நரகம். இந்த நரகத்திலிருந்து விடுதலை அதாவது உயிர்த்தெழுதல் உண்டு. ஆகையால் "நரகம்" என்று பழைய ஏற்பாட்டில் வருகிற வார்த்தை மரண நிலைமையை, ஒன்றும் அறியாத நிலைமையை, நித்திரை நிலைமையைக் குறிக்கிறது.

மேலும் புதிய ஏற்பாட்டில் 12 இடங்களிலும் வரும் "கெஹென்னா" என்ற கிரேக்க பதம் எல்லா இடங்களிலும், நரகம், எரிநரகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (மத் 5:22,29,30; 18:9; 23;15,33; 10:28: மாற்கு 9:43,45,47; லூக்கா 12:5; யாக்.3:6) "கெஹென்னா" என்ற கிரேக்க பதம் பழைய ஏற்பாட்டில் எபிரேயு பாஷையில் "கெஹின்னோம்" (GE-HINNOM) என்று சொல்லப்படுகிறது. "இன்னோம் பள்ளத்தாக்கு" என்பது இதன் பொருள். (யோசுவா 15:8; எரே. 7:31,32) பழைய எருசலேமுக்கு வெளியேயுள்ள இந்த பெரிய பள்ளத்தாக்கில் குப்பைக்கூளங்களும், இறந்த பிராணிகளின் உடல்களும் நியாயப்பிரமாணத்தின்படி மரண தண்டனைக்குட்பட்ட குற்றவாளிகளின் உடல்களும் எறிந்துவிடப்படும். உயிருள்ள எந்த ஜீவராசியும் இதில் எறியப்படுவதில்லை. அங்கே (கெஹன்னாவில்) போடப்பட்ட சடலங்களை முற்றிலும் அழிப்பதற்காக கந்தகத்தினால் அக்கினி உண்டாக்குவார்கள். கந்தகம் போடப்பட்ட இடங்களில் அவைகள் அக்கினியினால் அழியும்; கந்தகம் போடப்படாத இடங்களில் புழுக்கள் தோன்றி குப்பைகளையும், அழுகிய உடல்களையும் அழிக்கும். அதாவது. அந்த பள்ளதாக்கிலே ஒரு பக்கம் அக்கினி எரிந்து கொண்டிருக்கும். வேறொரு பக்கம் புழுக்கள் தோன்றியிருக்கும். இதைத்தான் வேதம் "அங்கே (கெஹென்னாவில்) அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும்" (மாற்கு 9:44,46,48; ஏசா. 66:24) என்று கூறகிறது. இதைப் போலவே, நித்திய ஜீவனுக்கு அபாத்திரர்கள் இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்



என்பதை உணர்த்துவதற்காகவே கெஹென்னா என்ற இந்த பள்ளத்தாக்கை இயேசு கிறிஸ்து உருவகமாக குறிப்பிடுகிறார். ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் இதை சரியாக அறிந்து கொள்ளாமல், புழு சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும் என்ற வசனத்தை, துன்மார்க்கர்கள் சதாகாலங்களிலும் சாகாமல் வெந்து கொண்டேயிருப்பார்கள் என்ற அவைகளது போதனைக்கு ஆதாரமாக கூறுகின்றன. ஆனால் இங்கே உயிருள்ள எந்த ஜீவராசிகளும் எறியப்படவில்லை என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

ஆகையால் தான் வேதம், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், .......அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி.21:8) என்றும் இந்த இரண்டாம் மரணத்தை உருவகமாக அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல் என்றும் கூறுகிறது. மேலும் வெளி. 20:14ல் "அப்போது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்" என்றும் வாசிக்கிறோம்.

ஆகவே, இதையெல்லாம் நாம் தியானித்துப் பார்க்கும்போது ஷியோல், ஹாதேஸ்-நரகம்-பாதாளம்-பிரேதக்குழி-குழி என்பவைகள் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதன் இருக்கும், மரண நிலைமையை, ஒன்றும் அறியாத நித்திரை நிலைமையை முதல் மரணத்தைக் குறிக்கிறது என்றும், புதிய ஏற்பாட்டில் கெஹென்னா-நரகம்-எரிநரகம் என்பவைகள் உயிர்த்தெழுதலே இல்லாத மரணத்தை, நித்திய அழிவை அதாவது இரண்டாம் மரணத்தைக் குறிக்கிறது என்றும் அறிந்து கொள்கிறோம்.

இந்த உலக நீதிமன்றங்கள் மனிதனுக்கு கொடுக்கிற அதிக பட்ச தண்டனை மரணம் தான். மனிதனே செய்ய நினைக்காத-சாகாமல் அக்கினியில் சதா காலங்களிலும் வெந்து கொண்டிருக்கிற - தண்டனையை கொஞ்ச காலங்கள் மாத்திரமே வாழ்ந்து பாவம் செய்த மனிதர்களுக்கு தேவன் கொடுப்பாரா? மனிதன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? (யோபு 4:17) என்பதை சிந்தித்துப் பார்க்க

வேண்டும். ஏனெனில், "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்றும், (1யோவா. 4:8) "அவருடைய கோபம் ஒரு நிமிஷம்" என்றும் (சங்.30:5) "தேவன் எப்பொழுதும் கடிந்து கொள்ளார், என்றைக்கும் கோபம் கொண்டிரார்" என்றும் (சங்.103:8,9) வேதம் கூறுகிறது. இப்படி அன்பே உருவான தேவன் அவியாத அக்கினியில் மனிதனை சதா காலங்களிலும் வேக வைப்பாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். பூமியைப் பார்க்கிலும், வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே மனிதனின் வழிகளைப்பார்க்கிலும், தேவனுடைய வழிகளும், மனிதனுடைய நினைவுகளைப்பார்க்கிலும், தேவனுடைய நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசா.55:9) இஸ்ரயேலர் மோளேகைத் தொழுதுகொண்டு தங்கள் பிள்ளைகளை அக்கினியில் சித்திரவதை செய்வதை தம்முடைய இருதயத்தில் தோன்றியிராத அருவருப்பு என்று அவர்களை குற்றப்படுத்தி கண்டித்து, அப்படி செய்யக்கூடாதென்று அவர்களை தடுத்த தேவன், (லேவி. 18:21; எரே. 19:5; 32:34,35) துன்மார்க்கரை அவியாத அக்கினியில் சதா காலங்களிலும் வதைத்துக் கொண்டிருப்பாரா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வேதம் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்று தான் கூறுகிறதே தவிர, நரகம் என்றல்ல. "நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி. 3:19) என்று தான் தேவன் சொன்னாரே தவிர நித்திய வேதனை என்று சொல்லவில்லை. மேலும் பாவத்தின் சம்பளம் மரணமாயில்லாமல், நரக வேதனையாயிருந்தால். இயேசுவும் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராய் நித்திய வேதனை அடைந்திருக்க வேண்டியதாயிருந்திருக்கும். ஆனால் அவர் நித்திய வேதனை அடையாமல் மரணத்தை ருசி பார்த்தார். (I கொரி.15:3; எபி.2:9)

எனவே பழைய ஏற்பாட்டில் சொல்லப்பபட்ட நரகம் முதல் மரணத்தையும், (இதற்குப் பின் உயிர்த்தெழுதல் உண்டு) புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட "நரகம்" இரண்டாம் மரணத்தையும் அதாவது இனி உயிர்த்தெழுதலே இல்லாத அழிவையும் குறிக்கிறது.

மேலும் இந்த இடத்தில் நாம் இன்னொரு வசனத்தை தியானித்தே



ஆக வேண்டும். "பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து........." (II பேதுரு. 2:4) நோவா காலத்தில் பாவம் செய்த தூதர்கள் நியாயத்தீர்ப்புக்காக நரகத்திலே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். இங்கு நியாயத்தீர்க்கப்படாத தூதர்கள் நரகத்தில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால் நரகம் பாவத்தின் சம்பளமாக இருக்குமென்றால் நியாயத்தீர்ப்பு வழங்குவதற்கு முன் எப்படி நரகத்திலே தள்ள முடியும்? அப்படியானால் தேவன் அநீதியுள்ளவரா? அல்லவே, எனவே இங்கு வரக்கூடிய நரகம் என்ற சொல், அவியாத அக்கினியுள்ள இடத்தை குறிக்காதபடிக்கு நியாயத்தீர்ப்புக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஒரு இடத்தை குறிப்பிடுகிறதாயிருக்கிறது. நியாயத்தீர்ப்பின் காலத்திலே அவர்கள் இந்த நரகத்திலிருந்து விடுதலையாகி அவர்களுக்கு கொடுக்கப்படுகிற தீர்ப்புக்கேற்றவாறு பலனை அடைவார்கள். இந்த காவலிலுள்ள ஆவிகளுக்குத்தான் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தவுடனே போய் பிரசங்கித்தார். (I பேதுரு 3:19) எனவே இந்த ஆவிகள் இந்த நரகத்திலே காவலில் இருக்கும் போது அவர்கள் உணர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்த காவலிலுள்ள ஆவிகள் இருக்ககூடிய "நரகமும்" நாம் இதுவரை பழைய, புதிய ஏற்பாட்டில் பார்த்த "பாதாளமும்" ஒன்றே என்று நாம் நினைத்து விடக்கூடாது. புதிய ஏற்பாட்டின் கிரேக்க மூலத்தில் பாதாளம் என்கிற நரகத்திற்கு ஹாதேஸ் (HA-DES) என்ற கிரேக்க பதம் இருப்பதை நாம் முன்பே பார்த்தோம். காவலிலுள்ள ஆவிகள் இருக்கிற நரகத்திற்கு "டார்டரு" (TARTAROO) என்ற கிரேக்க பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

யோனா என்ற தீர்க்கதரிசி மீனின் வயிற்றில் இராப்பகல் மூன்று நாள் இருந்ததாக வேதத்தில் படிக்கிறோம். இந்த மீனின் வயிற்றை ஆங்கில வேதாகமத்தில் நரகத்தின் வயிறு (BELLY OF HELL) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யோனா 1:17;2:2) யோனா மூன்று நாட்கள் இருந்தது அவியாத அக்கினியுள்ள நரகத்திலல்ல, மீனின் வயிற்றில்தான் இருந்தார். இங்கே மீனின் வயிறு பாதாளத்திற்கு ஒப்பிட்டு

சொல்லப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

ஆகையால் நரகத்தில் நித்திய வேதனை என்கிற போதனை வேதம் போதிக்கிற போதனை அல்ல. இது மனித போதனை. இது சத்திய அறிவு குறைவாயிருந்த காலமான கி.பி.4ம் நூற்றாண்டில் ஏற்பட்ட போதனை. இது மனிதனின் கற்பனையாயிருக்கிறது. ஆகையால் தான் வேதம் "..........அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (ஏசாயா 29:13) என்றும் "மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மாற்கு 7:7) என்றும் கூறுகிறது.

நாம் இதுவரை தியானித்ததிலிருந்து நரகத்தைக் குறித்து, எவ்வளவு தவறான எண்ணங்கொண்டிருந்தோம் பாருங்கள்! இதுவரை நரகம் என்றவுடன் அவியாத அக்கினியுள்ள இடம்தான் நம் கண் முன்னால் வந்து கொண்டிருந்தது. ஆனால் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் "நரகம்" என்பது "முதல் மரணத்தையும்," புதிய ஏற்பாட்டில் "நரகம்" என்பது "இரண்டாம் மரணத்தையுமே" குறிப்பிடுகிறது என்பதை இப்போது அறிந்து கொள்கிறோம். ஆகையால் இந்த கடைசி காலத்திலாவது மனுஷராலே போதிக்கப்பட்ட தவறான உபதேசங்களிலிருந்தும், பாரம்பரியங்களிலிருந்தும் முற்றிலுமாக விடுபட்டு மெய்யான சத்தியத்திற்கு செவி கொடுப்போமாக!.

**********



# 8. ஆவி, ஆத்துமா, சரீரம்

உலகில் அநேகமாக எல்லா மதங்களுமே மனிதனுக்குள் சாகாத ஆத்துமா ஒன்று உண்டு என்று போதிக்கின்றன. மனிதன் மரித்தவுடன் ஆத்துமா மோட்சத்திற்கோ நரகத்திற்கோ போகிறது என்றோ அல்லது புதிதாய் பிறக்கும் குழந்தைகளின் உடலுக்குள் மறுபிறவியாகப் பிரவேசிக்கிறது என்றோ அல்லது சாந்தியடையாத ஆத்துமா அலைந்து திரிந்து கொண்டிருக்கிறது என்றோ போதிக்கின்றன; மேலும் மனிதனுக்கு மட்டுமே ஆத்துமா உண்டு என்றும் மற்ற ஜீவராசிகளுக்கு ஆத்துமா இல்லை என்றும் கூறுகின்றன; ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் சேர்ந்துதான் மனிதன் உண்டாகின்றான் என்றும் ஆத்துமாவை ஆக்கவோ அழிக்கவோ இயலாது என்றும் கூறுகின்றன; இன்னும் ஆத்துமா ஏழு பிறவி எடுக்கிறது என்றும் கூறுகின்றன.

அநேக கிறிஸ்துவ சபைகள், ஆத்துமா அழிவதில்லை என்றும் மனிதன் மரித்தவுடன் ஆத்துமா மோட்சத்திற்கோ, நரகத்திற்கோ, உத்தரிக்கிற ஸ்தலத்திற்கோ போகிறது என்றும் போதிக்கின்றன. இவைகள் எல்லாம் வேதத்திற்கும் புத்தியுக்திக்கும் இசைவாயிருக்கின்றதா என்பதைக் குறித்து தியானிப்போம்.

ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய இம்மூன்றும் சேர்ந்த மனிதன் தன் வாழ்நாளில் பாவமோ, புண்ணியமோ செய்யும்போது, மரணத்திற்குப் பிறகு ஆத்துமாவை மட்டும் மோட்சத்திற்கோ நரகத்திற்கோ அனுப்புவது நீதியாகுமா? ஏனெனில், ஆத்துமா மட்டுமே தனித்து பாவமோ புண்ணியமோ செய்ய முடியாதே. மேலும் ஆத்துமாவை அழிக்க முடியாது என்பது ஆத்துமாவை படைத்த கடவுளின் வல்லமையைக் குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது. மிருகங்களுக்கு ஆத்துமா இல்லை என்று சொல்லுகிறவர்கள், மனித ஆத்துமா எப்படி மற்ற ஜீவராசிகளாக (ஏழு) பிறவி எடுக்கிறது என்பது குறித்து சிந்திப்பதில்லை. மேலும் ஆத்துமாவை அழிக்கவோ, ஆக்கவோ முடியாது என்றால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ள ஆத்துமாக்கள் எப்படி எண்ணிக்கையில பெருகுகிறது. அதாவது ஜனத்தொகை எப்படி பெருகுகிறது?

இதையெல்லாம் நாம் தியானிக்கும்போது ஆத்துமாவைக் குறித்து பிற மதங்களும், அநேக கிறிஸ்தவ சபைகளும் கொண்டுள்ள கொள்கைகள் தவறு என்று தெரிகிறது.

ஆத்துமாவைப்பற்றி வேதம் கூறுகிறதாவது; தேவனாகிய கர்த்தர் (யேகோவா) மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான். (ஆதியாகமம் 2:7) அதாவது மண் (சரீரம்)+ஜீவசுவாசம் (ஆவி)=ஜீவாத்துமா (ஞானம், அறிவு, உணர்ச்சியுள்ள ஜீவி). அதாவது மண்ணும் (சரீரமும்) ஜீவசுவாசமும் (ஆவியும்) சேர்ந்து ஜீவாத்துமா உருவாகிறது. எனவே கிரியை செய்யக்கூடிய உயிருள்ள மனிதனையே ஜீவாத்துமா என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. மேலும் ஆத்துமா என்ற பொருளைத் தனியே மனிதனுக்குள் வைத்து தேவன் மனிதனை சிருஷ்டிக்கவில்லை.

அதேபோல் மனிதன் மரிக்கும்போது கூட மண்ணானது (சரீரமானது) தான் முன்னிருந்த பூமிக்கும், ஆவியாகிய ஜீவ சுவாசம் தன்னைத் தந்த தேவனிடத்திற்கும் போய்விடுகிறதாக வேதம் கூறுகிறது. (பிர.12:7) ஆத்துமா என்பது இல்லாமலே போய் விடுகிறது. உதாரணமாக ஆக்ஸிஜனும் ஹைடிரஜனும் சேர்ந்து நீர் உண்டாகிறது. ஆக்ஸிஜனையும் ஹைடிரஜனையும் பிரிக்கும்போது நீர் இல்லாமலே போகிறது. அதேபோல் மனிதன் மரித்தவுடனே ஆத்துமா என்பதே இல்லாமல் போகிறது.

எனவே ஆவி, சரீரம் இரண்டும் சேர்ந்துதான் ஆத்துமா (ஜீவனுள்ள மனிதன்) உருவாகிறான் என்றும், மனிதன் மரிக்கும்போது ஆத்துமா ஒன்றுமில்லாமல் போகிறது என்றும் பார்க்கிறோம். வேதமும் "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" என்று கூறுகிறது. எசே. 18:4,20. மேலும் மனிதனே ஆத்துமா என்றும் வேதம் கூறுகிறது. யாத். 12:4; யாத்.1:5 (ஆங்கில வேதாகமம் காண்க).

### தாழ்ந்த விலங்குகளும் ஆத்துமாக்களே

வேதாகமத்தில் ஆத்துமா என்ற பதம் "nephesh" என்ற எபிரேய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நெபேஷ் என்ற வார்த்தை விலங்குகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.



ஆதி. 2:7- ஜீவாத்துமா - நெபேஷ் - *Living Soul*

ஆதி. 1:20,21,24, ஜீவ ஜந்து - நெபேஷ் - Living Creature

ஆதி. 2:19;9:3,10,12,15 ஜீவ ஜந்து- நெபேஷ் - Living Creature

ஆதி. 9:16 மாம்ச ஜீவன்கள் - நெபேஷ் - Living Creature of Flesh

எண். 31:28 -பிராணி - நெபேஷ் - Soul

எனவே மிருகங்களும் ஆத்துமாக்களே.

மேலும் மிருகங்கள் சாகிறது போல மனிதர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே. (பிர. 3:19-21) மிருகங்களுக்குத் தேவையான சுவாசம், தண்ணீர், உணவு ஆகியவைகளே மனிதனுக்கும் தேவை. மிருகங்கள் இன விருத்தி செய்வது போல மனிதனும் செய்கிறான். அப்படியானால், மனிதனுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசம் இல்லையா என்று கேட்கலாம். மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வித்தியாசம் அவர்களுக்குள்ள ஜீவனிலும் சுவாசத்திலும் இராமல், சரீர அமைப்பிலே மனிதன் விசேஷித்தவனாயிருக்கிறான். மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டபடியால் தேவனுக்குரியவைகளாகிய நீதி, அன்பு, ஞானம், வல்லமை முதலிய பகுத்தறிவு பண்புகளும் உடையவனாக இருக்கக் கூடிய சரீர அமைப்பை பெற்றவனாயிருக்கிறான். தேவனை அறியவும், அவரை நேசித்துக் கனம் பண்ணும்படியும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். தேவன் தம் வாக்குத்தத்தங்களில் வெளியிட்டிருக்கிறபடி மனுஷனுடைய பிற்கால ஜீவியத்திற்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார். மிருகங்களுக்கோ அப்படிப்பட்ட பிற்கால ஜீவியத்திற்கான நியமம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

UWQ j §p B ®Ùm, NÃWØ m ©¬k Õ, "ஆத்துமா" என்பதே இல்லாமல் போகிறது என்று (பிர. 12:7) முன்பே பார்த்தோம். பிரிந்த இந்த ஆவியை சரீரத்தோடு இணைக்க தேவன் வல்லவராயிருக்கிறார். அந்த வல்லமையை தேவன் இயேசு கிறிஸ்துவுக்கும் தந்தருளியிருக்கிறார். ஆகையினால் தான் தேவனுடைய பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலின் மூலமாய்

பிற்கால ஜீவியத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இயேசு கிறிஸ்து கூட தாம் ஜீவனை விடும்போது, "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறி ஜீவனை விட்டார். (லூக். 23:46) சீஷனாகிய ஸ்தேவானும் கூட தாம் ஜீவனை விடும்போது, "இயேசுவே என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" (அப்.7:59) என்று கூறினான். உயிர்த்தெழுதல் மூலம் தேவன் பிற்கால ஜீவியத்திற்கு ஏற்பாடு செய்யாதிருப்பாரானால், மனுக்குலத்தின் எல்லா நம்பிக்கைகளும் மரணத்தோடே முடிந்து போயிருக்கும். (I கொரி. 15:13-18)

மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுதலும், பிற்கால ஜீவியமும் இருப்பதால் தான் வேதம் மரணத்தை நித்திரை என்று கூறுகிறது. லாசருவின் மரணத்தைக் குறித்து பேசும்போது கிறிஸ்து "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்றார். சீஷர்கள் இதைப் புரிந்து கொள்ளாததினால் இயேசு, "லாசரு மரித்துப்போனான்" என்று திரும்ப வெளிப்படையாகச் சொன்னார். (யோவா. 11:11,14) மரணத்திற்குப்பின் மரித்தோர் சுய நினைவோடிருப்பது உண்மையானால். (அதாவது ஆத்துமா அழியாது என்பது உண்மையானால்) லாசரு தான் மரித்திருந்த நான்கு நாட்களில் தான் அடைந்த அனுபவத்தைப்பற்றி சொல்லியிருப்பானே! வேதனை நிறைந்த நரகமென்றே ஓர் இடத்தில் அந்த 4 நாட்கள் இருந்திருப்பான் என்று யாரும் சொல்ல துணிய மாட்டார்கள். ஏனென்றால் அவன் நமது ஆண்டவரின் சிநேகிதன். அவன் பரலோக ஆசீர்வாதத்தை அடைந்து கொள்ளப் போயிருந்தால் நமது ஆண்டவர் அவ்விடத்திலிருந்து அவனை வரும்படி கூப்பிடமாட்டார். ஏனெனில் அப்படிச் செய்வது (அதாவது பரலோக ஆசீர்வாதம் பெற்றவனை பாவ உலகிற்கு மறுபடியும் கொண்டு வருவது) ஒரு நல்ல காரியமாக இருந்திருக்காது. ஆனால் நமது ஆண்டவர் சொன்னபடி லாசரு நித்திரை செய்தான். இன்னும் அநேக இடங்களில் வேதம் மரணத்தை நித்திரை என்று கூறுகிறது.

(உதாரணம்) ஸ்தேவான் "நித்திரையடைந்தான்." அப்.7:60



தாவீது..........."நித்திரையடைந்தான்." அப்.13:36

பிதாக்கள்...."நித்திரை அடைந்தார்கள்." 2 பேது 3:4

கிறிஸ்துவோ "நித்திரை அடைந்தவர்களில்" முதற்பலன். I கொரி. 15:20

மானிட சரீரத்தையும், ஆவியையும், ஆத்துமாவையும் மிகவும் சுலபமாய் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு பொருளைக் கொண்டு உதாரண விளக்கங்களுடன் காட்டுவோம். ஒரு மெழுகுவர்த்தி உயிரில்லாத மானிட சரீரத்திற்கு ஒப்பானதாகும். மெழுகுவர்த்தியைக் கொளுத்துவது தேவன் ஆதியில் கொடுத்த ஜீவசுடருக்கு ஒப்பானதாகும். ஜுவாலையுடன் கூடிய மெழுகுவர்த்தி ஞானேந்திரிய ஜீவியாகிய உணர்ச்சியுள்ள ஆளுக்கு - ஆத்துமாவுக்கு ஒப்பாகிறது. மெழுகுவர்த்தியின் திரியோடு சேருகிற பிராணவாயு ஜீவசுவாசத்திற்கு (ஜீவ ஆவிக்கு) ஒப்பானதாகும். மெழுகுவர்த்திக்கு அழியக் கூடிய ஒரு அபாயம் ஏற்படுமானால், பிஜுவாலையானது மெய்யாகவே ஒழிந்து போகிறது. இதேபோல் மானிட சரீரமானது நாசத்திற்கு உட்பட்டு அழிக்கப்படுமானால் ஆத்துமா ஒழிந்து போய்விடுகிறது.

இன்னும் எரிகிற மெழுகுவர்த்திக்கு மேலும் எரியத் தேவையான காற்றை (ஆக்ஸிஜன்) தடை செய்தால் மெழுகுவர்த்தியானது சேதம் அடையாமல் இருந்த போதிலும் கூட ஜுவாலையானது ஒழிந்து போகிறது. இதே போல மனிதனுக்கும் விஷவாயு செலுத்தியோ அல்லது தண்ணீருக்குள் அமிழ்த்தியோ பிராணவாயு தடை செய்யப்பட்டால் சரீரம் சேதமடையாமல் இருந்தால் கூட ஆத்துமா அழிந்து விடுகிறது. சரீரமும் செயலற்றுப் போய் விடுகிறது.

அநுகூலமான நிலைமையிருந்தால் எரிகிற மெழுகுவர்த்தியைக் கொண்டு இன்னும் அநேக மெழுகுவர்த்திகளை கொளுத்தலாம். ஆனால் அணைக்கப்பட்ட மெழுகுவர்த்தியானது தன்னைத்தானே மறுபடியும் பற்றவைத்துக் கொள்ளவோ அல்லது அதைக் கொண்டு மற்ற மெழுகுவர்த்திகளைப் பற்றவைக்கவோ முடியாது. அதைப்போலவே சரீரமும் உயிரோடிருக்கையில், ஜீவாத்துமாவாயிருக்கிறபடியால், அது மற்ற

ஆத்துமாக்களை (ஆட்களை) ஜெநிபித்துப் பிறப்பிக்கக்கூடும். ஆனால் ஜீவசுடர் எடுப்பட்டதும், ஆத்துமா ஒழிந்து போவதுடன், நினைக்கவும், உணரவும், ஜெநிப்பிக்கவும் கூடிய எல்லா சக்திகளும் நின்று போய்விடுகின்றன.

எனவே இவைகளிலிருந்து ஆத்துமா என்ற தனிப்பட்ட பொருள் ஏதும் மனிதனுக்குள் இல்லை; சரீரமும் ஆவியும் சேர்ந்த மனிதனே ஆத்துமாவாயிருக்கிறான் என்பதையும், மனிதன் மரிக்கும்போது ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்கும், சரீரம் தான் முன்னிருந்த மண்ணுக்கும் திரும்புகிறது என்பதையும் அறிந்து கொண்டோம். பாவம் செய்கிற ஆத்துமாவே (மனிதனே) சாகும் என்றும், உயிர்த்தெழுதலின் போது மனிதனை தேவன், இயேசு கிறிஸ்து மூலமாக புதிய சரீரத்தில் எழுப்புகிறார் என்பதையும் அறிந்து கொண்டோம்.

ஆதியிலே சாத்தான் ஆதிப் பெற்றோரை வஞ்சிக்கும்போது கூறிய பொய்யாகிய "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற கூற்றை மெய்யென்று நிரூபிக்கவே சாத்தான் "ஆத்துமா அழியாது" என்ற இந்த கொள்கையை பிற மதங்களிலும் அநேக கிறிஸ்தவ சபைகளிலும் புகுத்தி மக்களை ஏமாற்றி வருகிறான்.ஆகவே இப்படிப்பட்ட தவறான உபதேசங்களிலிருந்து விடுபட்டு மெய்ச் சத்தியத்திற்குள் வருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**********



# 9. அற்புத சுகமளிக்கும் வரம்

"நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள்." (யோவான் 4:48)

தற்காலத்தில், குருடர் காண்கிறார்கள்; செவிடர் கேட்கிறார்கள்; ஊமையர் பேசுகிறார்கள்; வியாதியஸ்தர்கள் குணமடைகிறார்கள்; பிசாசுகள் விரட்டப்படுகின்றன; அற்புத சுகமளிக்கும் கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள் என்கிற செய்திகளை, செய்தித்தாள்களிலும், சுவரொட்டிகளிலும் காண்கிறோம். சில கிறிஸ்தவ சபைகளில் மாத்திரமல்ல. புற மதஸ்தர்களிடமும் அநேக அற்புத அடையாளங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். ஆனால் இவைகளெல்லாம் ஒரே மெய்த்தேவனால் கொடுக்கப்பட்ட ஒரே வேதமாகிய பைபிளுக்கு இசைந்திருக்கிறதா என்பதை எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? இல்லையென்றால் இதோ சிந்திக்க ஒரு சந்தர்ப்பம்.

அற்புத அடையாளங்கள் ஏன் செய்யப்பட்டன, அதனுடைய அவசியம் என்ன என்பதைக் குறித்து முதலில் தியானிப்போம். இயேசு கிறிஸ்து, இழந்தவைகளைத் திரும்பக் கொடுக்கும் காலங்களாகிய ஆயிர வருஷ யுகத்தில் சாபத்தை நீக்கி, வியாதி, துயர், கண்ணீர், மரணம், அங்கஹீனம் ஆகியவைகளை நீக்குவதற்கு முன்னடையாளமாக தமது முதலாம் வருகையில் அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார்; தான் தேவனுடைய குமாரனென்பதையும், அவரால் அனுப்பப்பட்டவர் என்பதையும் நிரூபிப்பதற்காக தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியினால் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். மேலும் அற்புதம் செய்யும் வரம் கிறிஸ்துவுக்கு பிறகு அப்போஸ்தலர்களுக்கும் அருளப்பட்டது. இந்த வரத்தை தேவன் அப்போஸ்தலர்களுக்கு கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்றால்:

1. சபையை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்த (ரோமர் 1:10);
2. இவர்கள்தான் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய நியமிக்கப்பட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்த;

3. இவர்கள் உபதேசிக்கும் சுவிசேஷம் தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதை நிரூபிக்க (ஏனெனில் இவர்களது உபதேசம் உண்மைச்சத்தியம் தானா என்று சோதித்து அறிய, அப்போது புதிய ஏற்பாடு கொடுக்கப்படவில்லை).

மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து, அற்புத அடையாளங்கள் ஏன் செய்யப்பட்டன என்றும், அதனுடைய அவசியம் என்னவென்றும் அறிகிறோம். அடுத்து எப்படிப்பட்ட அற்புத அடையாளங்கள் கிறிஸ்துவினாலும், அப்போஸ்தலர்களாலும் நடந்தன என்பதைப்பற்றி பார்க்கலாம்.

இயேசுகிறிஸ்து இறந்தவர்களை உயிர்தெழுப்பினார்; பிறவிக் குருடர்களுடைய கண்களைத் திறந்தார்; சப்பாணிகளையும் திமிர்வாதக்காரனையும் குணப்படுத்தினார்; குஷ்டரோகிகளை குணப்படுத்தினார்; அசுத்த ஆவிகளை விரட்டினார். மேலும் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டமாத்திரத்தில் வியாதிகள் குணமடைந்தன. (மத். 9.23-25; யோவான் 11:38-44; மத் 11:5; மாற்கு 8:22-25; யோவா. 9:1-7; மத்.9:6,7; 8:1-3; 8:6; 17;14-18; லூக்கா 8:43-47)

அப்போஸ்தலர்களும் கூட, இப்படிப்பட்ட அநேக அற்புதங்களைச் செய்தனர். அப்போஸ்தலர்களுடைய நிழல்கள்பட்டு வியாதிகள் குணமாயின; அசுத்த ஆவிகள் ஓடின; அப்போஸ்தலனாகிய பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதியஸ்தர்மேல் போட வியாதிகள் குணமாயின. (அப் 9:40-41; 3:1-8; 14:8-10; 9:32-34; 5:15-16; 19:11,12; மத் 10:8)

இந்த அற்புத அடையாளம் செய்யும் வரமானது பரிசுத்த ஆவியைப் பெற்ற அனைவருக்கும் கிடைக்கவில்லை என்பதும் அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் இந்த வரத்தை யாருக்கு அருளினார்களோ, அவர்களுக்கும் மட்டுமே இருந்தது என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதை எவ்வாறு அறியலாமென்றால், அப்போஸ்தலர் நடபடிகள் 6வது அதிகாரத்தில் 5-6 வசனங்களிலும், 8வது அதிகாரத்தில் 13 முதல் 17 வசனங்கள் வரை சொல்லப்பட்டுள்ளபடி,



விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்த ஏழு சீஷர்களை அப்போஸ்தலர்கள் தேர்ந்தெடுத்து, அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபிக்க, அந்த ஏழு பேருக்கும் அற்புத அடையாளம் செய்யும் வரம் கிடைத்தது. அந்த ஏழு பேரில் ஒருவன் பிலிப்பு. இவன் சமாரியா பட்டணத்தில் பிரசங்கம் செய்து, அநேக அற்புத அடையாளங்களைச் செய்து வந்தான். இவன் மூலமாக விசுவாசத்திற்குள் வந்த சமாரியா பட்டணத்தார் ஞானஸ்நானம் பெற்றும், யாரும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையாதலால், அப்போஸ்தலர்கள் சமாரியாவுக்கு வந்து அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபித்த பிறகே பரிசுத்த ஆவியை அவர்களால் பெற முடிந்தது. இதிலிருந்து அற்புத அடையாளம் செய்யும் வரத்தைப் பெற்றிருந்த பிலிப்புவினால் கூட அந்தச் சமாரியா பட்டணத்தாருக்கு (அற்புத அடையாளம் செய்யும் வரமடங்கிய) பரிசுத்த ஆவியை அருள இயலவில்லை என்பதை நீங்கள் இந்த இடத்தில் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அப்போஸ்தலர்களால் மட்டுமே இந்த அற்புத அடையாளம் செய்யும் விசேஷித்த வரத்தை மற்றவர்களுக்கு கொடுக்க முடிந்தது என்று மேலே பார்த்தோம். ஆனால் இப்போதும் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள் என்று கூறி இக்காலத்தில் சில சபைகளில், தங்கள் சபை மூப்பர்களை அப்போஸ்தலர் என அழைக்கின்றனர். ஆனால் அப்போஸ்தலர் மொத்தம் 12 பேர் தான் என்று வேதம் திட்டமும் தெளிவுமாக கூறுகிறது. (வெளி 21:14) இதில் விழுந்துபோன யூதாசுக்கு பதிலாக தேவனால் அப்போஸ்தலனாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பவுல். (1 கொரி. 1:1; ரோமர் 1:1) மேலும் அப்போஸ்தலர்கள் என்ற நாமம் மனிதர்களால் சூட்டப்படுவதுமல்ல; அப்போஸ்தலர்கள் மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களும் அல்ல; தேவனாலும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறஸ்துவினாலும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லூக்கா 6:13;1 தீமோ 1:1)

இவ்வாறு நடைபெற்று வந்த அற்புத அடையாளங்களெல்லாம். சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, புதிய ஏற்பாடு முழுமையாக கொடுக்கப்பட்டு

வேதம் நிறைவடைந்த பிறகு, அப்போஸ்தலர்களும், அவர்கள் யாருக்கு இந்த வரத்தை அருளினார்களோ அவர்களும் மரித்த பிறகு ஒழிந்து போய்விட்டது. நிறைவானது வரும்போது (வேதம் முழுமையாக கொடுக்கப்பட்ட பிறகு) குறைவானது (அற்புத அடையாளம் முதலானவைகள்) ஒழிந்துபோம் (1 கொரி. 13:8-10) என்று வேதம் கூறுவதற்கேற்ப, இந்த வரமானது இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு முற்றிலுமாக ஒழிந்து போயிற்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், தேவனால் அருளப்பட்ட இந்த அற்புத அடையாளங்களெல்லாம் முடிவுபெற்ற போதிலும், உலகத்தில் இன்றைய வரைக்கும் அற்புத அடையாளங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இவ்வாறு நடைபெறக்கூடிய அற்புத அடையாளங்கள் எல்லாம், இயேசு கிறிஸ்துவினாலும், அப்போஸ்தலர்களாலும் நிகழ்த்தப்பட்ட அற்புத அடையாளங்களுக்கு ஒத்திருக்கிறதா என்பதை நிதானியுங்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் மூன்றாவது அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில், பிறவியிலேயே சப்பாணியாயிருந்த ஒரு மனுஷன், அப்போஸ்தலர்களாகிய பேதுரு, யோவானிடத்தில் பிச்சை கேட்கிறான். அவர்களோ தங்களிடத்தில் அவனுக்கு கொடுப்பதற்கு வெள்ளியோ, பொன்னோ இல்லை என்று கூறி, நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டார்கள். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டு, குதித்து எழுந்து நடந்தான் என்று வாசிக்கிறோம். இங்கே அப்போஸ்தலர்கள் ஜெபிக்கவும் இல்லை; சப்பாணி விசுவாசிக்கவும் இல்லை; குணமாவான் என்று, அவன் எதிர்பார்க்கவும் இல்லை. அவன் கேட்டதெல்லாம் பிச்சைதான். ஆனால், இப்பொழுது அற்புத அடையாளங்கள் செய்கிறவர்கள் இவ்வாறு செய்கிறார்களா? என்று சிந்தித்துப் பாருங்கள். மேலும் இப்பொழுதோ குணமாக வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள்; குணமாகாவிட்டால் உனக்கு விசுவாசம் இல்லையென்று கூறிவிடுகிறார்கள்.



இப்பொழுது நடத்தப்படுகிற அற்புத சுகமளிக்கும் கூட்டங்களில், வெளியரங்கமான அங்கஹீனம் சுகமாகிறதா? பிறவிக் குருடர் பார்வையடைகிறார்களா? பிறவிச் சப்பாணிகள் நடக்கிறார்களா? குஷ்டரோகம் நீங்குகிறதா? மரித்தோர் உயிர்பெற்று எழுகிறார்களா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்தப்படியாக சிலர் மாற்கு 16:17,18 வசனங்களை எடுத்துக் கொண்டு இப்போதும் அற்புத அடையாளங்கள் பரிசுத்த ஆவியால் நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். அப்போஸ்தலர்களுடைய காலத்தில், வேதம் முழுமையடையாத காரணத்தினால் அப்போஸ்தலர்கள் சொல்லக்கூடிய வசனங்கள் அனைத்தும், தேவனுடைய வசனங்கள் என்பதை உறுதிப்படுத்தவே இப்படிப்பட்ட வரங்கள் கொடுக்கப்பட்டன என்று மாற்கு 16:20ல் அறிந்துகொள்கிறோம். வேதம் முழுமையடைந்த பிறகு (புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்ட பிறகு), அற்புத அடையாளம் மூலமாக வசனத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாகிறது. மேலும் சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது என்று வசனம் கூறுகிறபடி, இக்காலத்தில் அற்புத அடையாளம் செய்பவர்களால் இப்படிச் செய்ய இயலுமா? என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

யோவான் 14:12 வசனத்தை எடுத்துக் கொண்டு சிலர் இப்பொழுதும் அற்புத அடையாளம் உண்டு என்று கூறுகின்றனர். இந்த வசனம் கிறிஸ்துவிற்கு பிறகு அப்போஸ்தலர்களாலும், அவர்கள் மூலமாக வரத்தைப் பெற்றவர்களாலும் செய்யப்பட்ட காரியங்களைத்தான் குறிக்கிறதேயல்லாமல், இப்பொழுதும் அவ்வசனத்தின்படி அற்புத அடையாளங்கள் நடைபெறுகிறது என்று கூற முடியாது. ஏனென்றால் இப்பொழுது அற்புத அடையாளங்கள் செய்கிறவர்கள் இயேசுகிறிஸ்து செய்ததைப் போலவோ, அல்லது அதைவிட பெரிய காரியங்களையோ செய்யவில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது.

இக்காலத்தில், அற்புத அடையாளம் செய்கிறவர்கள் வேதத்தை ஆராயாதபடி பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்யாமல் இயேசுவை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறார்கள்; இவர்கள் அந்நாளில் (நியாயத் தீர்ப்புநாளில்) இயேசுவை நோக்கி

கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்போது கிறிஸ்து: நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்பார். (மத்.7:21-23)

ஏனென்றால் தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் எல்லாம் சாத்தானின் வல்லமையினால் நடைபெறக்கூடிய பொய்யான அற்புத அடையாளங்களாகும். (2 தெச. 2:9,10) ஆகையினால் தான் வேதம் கடைசிக் காலத்தில், கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. (மாற்கு 13:22, 23; மத்.24:24)

மேலும் அப்போஸ்தலர் என்று பெயர் வைத்துக் கொண்டு அற்புத அடையாளங்கள் செய்கிறவர்களை வேதம்: கள்ள அப்போஸ்தலர்கள் என்றும், கபடமுள்ள வேலையாட்கள் என்றும், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்கள் என்றும் கூறுகிறது. அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைக் தரித்துக் கொள்வானே. (2 கொரி.11:13,14) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நடைபெறக் கூடிய அற்புத அடையாளங்கள் இப்பொழுதும் இருக்குமானால், இப்படிப்பட்ட எச்சரிப்பைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லையே, எனவே, தற்காலத்தில் கிறிஸ்துவ போர்வைக்குள்ளாக இருந்து கொண்டு, கிறிஸ்துவின் நாமத்தினாலேயே அற்புத அடையாளங்களைச் செய்து காண்பித்து, அநேக மக்களை நம்பவைத்து பிசாசானவன் மோசம் போக்கிவருகிறான். சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்காதபடி (2 தீமோ. 2:15) சாத்தானால் மனக்கண்கள் குருடாக்கப்பட்டிருக்கிற (2 கொரி. 4:4) சில பேர்ச்சபைகளில் மட்டுமே தற்காலத்தில் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்கள் நடைபெறுகின்றன.



மேலும் புறமதங்களில் நடைபெறக்கூடிய அற்புத அடையாளங்கள் அனைத்தும் சாத்தானுடைய வல்லமையினால் நடைபெறுகிறது என்பதை எல்லா கிறிஸ்தவர்களும் எந்தவித கருத்து வேற்றுமையின்றி ஏற்றுக் கொள்வார்கள். இதைக் குறித்து வேதமும் நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும், அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவர்கள் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும் அவர்கள் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக என்று வேதம் கூறுகிறது. (உபாகமம் 13:1-3) உதாரணமாக, மோசே தன்னுடைய கோலை பார்வோனுக்கு முன்பாக கீழே போட்டவுடன் தேவனுடைய வல்லமையினால் அது சர்ப்பமாக மாறிய பொழுது, பார்வோனின் மந்திரவாதிகளும், அவர்களுடைய கோலை கீழே போட்டபொழுது அவைகளும் (சாத்தானுடைய வல்லமையினால்) சர்ப்பமாக மாறின என்றும், மோசேயின் கோலினாலுண்டான சர்ப்பம் மந்திரவாதியின் கோலினால் உண்டான சர்ப்பங்களை விழுங்கிற்று என்றும் அறிகிறோம். (யாத்: 7:9-12) இதிலிருந்து, சாத்தானாலும் அற்புத அடையாளங்களை நிகழ்த்த முடியும் என்றும், அவனுடைய வல்லமையினாலேயே புறமதங்களில் அற்புத அடையாளங்கள் நடைபெற்று வருகின்றன என்றும், தேவ வல்லமையே, அதனிலும் பெரியது என்றும் அறிந்து கொள்கிறோம்.

அப்போஸ்தலர்களின் காலம், கண்டு விசுவாசிக்கும் காலமாயிருந்தது. ஆனால் இக்காலமோ, காணாமல் விசுவாசிக்கும் காலமாக இருக்கிறது. கண்டு விசுவாசிப்பதைக் காட்டிலும் காணாமல் விசுவாசிப்பவனே பாக்கியவான். (யோவான் 20:29) மேலும் அடையாளத்தைத் தேடுகிறவர்களை கிறிஸ்து பொல்லாத விபச்சார சந்ததியினர் என்று கூறுகிறார். (மத். 12:39)

எனவே, அற்புத அடையாளம் செய்யும் வரம் தற்போது இல்லையென்பது தெளிவாகிறது. ஆகையால் நாம் (அற்புத அடையாளங்களை) தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போமாக. (2 கொரி. 5:6).

# 10. அந்நிய பாஷை வரம்

*"அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்க் தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்...."* (1 கொரி. 13:8)

இக்காலத்தில் சில கிறிஸ்துவ சபைகளில் அந்நிய பாஷை பேசி வருகிறார்கள். அந்நிய பாஷைதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றதற்கு அடையாளம் என்றும், அந்நியபாஷை பேசவில்லை என்றால் பரிசுத்த ஆவியை பெறவில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால் வேதமோ, அந்நிய பாஷைகள் ஓய்ந்துபோம் என்று கூறுகிறது. அப்படியானால் அந்நிய பாஷை எதற்காக, எப்படிப் பேசப்பட்டது? இப்போது ஓய்ந்துவிட்டதா? அப்படியானால் ஏன், எப்போது ஓய்ந்தது? இக்காலத்தில் பேசப்படும் அந்நிய பாஷைகளெல்லாம் வேதத்திற்கு இசைந்திருக்கிறதா என்பதைக் குறித்து நாம் ஆராய்வோம்.

சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் பலவிதமான பாஷைகளை பேசுகிற இஸ்ரயேலர்களுக்கும், புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேகரை விசுவாசததிற்குள் கொண்டுவந்து சபையை ஸ்தாபித்து, ஸ்திரப்படுத்த அந்நிய பாஷை வரம் மிகவும் அவசியமாக இருந்தது. மேலும் கல்வி அறிவு பெருகாத அக்காலத்தில் பேசுகின்ற ஒரே ஒரு மொழியைத் தவிர, மற்ற மொழியறியாத மற்ற பாஷைகாரர்களுக்கு, சுவிசேஷத்தை அறிவிக்க இந்த விசேஷ வரமானது மிக மிக அவசியமாக இருந்தது.

வேதம் அந்நிய பாஷையை இரண்டு விதமாக விளக்குகிறது. ஒன்று, ஒருவர் அவருடைய ஜென்ம பாஷையில்பேச, அச்செய்தியை கூடி வந்திருக்கிற மற்றவர்கள் அவரவர்களுடைய ஜென்ம பாஷையில் கேட்பது. உதாரணமாக பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே அந்நிய பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்து பிரமித்து, ஆச்சரியப்பட்டு ஒருவரையொருவர் பார்த்து, இதோ, பேசுகிற இவர்களெல்லாரும்



கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறாமோ இதெப்படி? என்று அங்கே கூடி வந்திருந்த 18 விதமான பாஷைக்காரர்களும், நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசக் கேட்கிறோமே என்றார்கள். (அப். 2:1-11)

மற்றொன்று, ஒருவன் அந்நிய பாஷையில் பேச வேறொருவன் அர்த்தத்தை சொல்லுதல். (1 கொரி. 14:27) மேலும் இவ்விதமான அந்நிய பாஷை சபையில் எப்படிப் பேசப்பட வேண்டும் என்பதைக் குறித்து வேதம் கூறுகிறதாவது:

1. சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி வந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேசுவது கூடாதென்றும், (1 கொரி.14:23).

2. அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அதன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சோல்லுகிறவனில்லாவிட்டால் சபையிலே பேச வேண்டாம் என்றும், (1 கொரி. 14:27.28)

3. அந்நிய பாஷை பேசப்படுகின்ற பொழுது மற்றவர்கள் நிதானிக்க கடவர்கள் என்றும், (1 கொரி 14:29)

சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது என்றும் கூறுகிறது. (1 கொரி 14:40)

அந்நிய பாஷை வரம் இரண்டு முறை மட்டுமே நேரடியாக தேவனால் அருளப்பட்டது.

1. இஸ்ரயேலர்களுக்கு (அப்போஸ்தலர்களுக்கு) பெந்தெகொஸ்தே நாளில் (அப் 2:1-11);

2. புறஜாதியருக்கு. (கொர்நேலியு வீட்டில்) (அப் 10:44-47)

மற்ற எல்லா சமயங்களிலும் இந்த விசேஷ வரம் அப்போஸ்தலர்களால் மட்டுமே கைகளை வைத்து ஜெபம் பண்ணி மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டது. (அப். 19:1-6; 8:14-17)

அப்போஸ்தலர்களும், அவர்கள் யாருக்கு இந்த வரத்தைக் கொடுத்தார்களோ அவர்களும் மரித்த பிறகு இந்த வரம் முடிவடைந்தது.

ஆனால் இப்போதும் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்களென்று கூறி (அவர்கள் சபையார் மேல் கைகளை வைத்து ஜெபிக்க, அந்நிய பாஷை பேசக்கூடிய வரம் அருளப்படுகிறது என்று கூறி) இக்காலச் சபைகளில் சிலர் தங்கள் சபை மூப்பர்களை அப்போஸ்தலர் என அழைக்கின்றனர். ஆனால் அப்போஸ்தலர் மொத்தம் 12 பேர் தான் என்று வேதம் திட்டமும் தெளிவுமாகவும் கூறுகிறது. (வெளி. 21 : 14) இதில் விழுந்துபோன யூதாசுக்கு பதிலாக தேவனால் அப்போஸ்தலனாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பவுல் ஆகும். (1 கொரி. 1:1; ரோமர் 1:1) மேலும் அப்போஸ்தலர் என்ற நாமம் மனிதர்களால் சூட்டப்படுவதுமல்ல; அப்போஸ்தலர்கள் மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுமல்ல; தேவனாலும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லூக்கா 6:13; 1 தீமோ. 1:1) இதிலிருந்தே இப்போது தேவனால் நியமனம் செய்யப்பட்ட அப்போஸ்தலர்கள் யாரும் இல்லை என்பது தெளிவாகிறது.

சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, புதிய ஏற்பாடு முழுமையாக கொடுக்கப்பட்டு வேதம் நிறைவடைந்த பிறகு, மேலே சொல்லப்பட்ட ஒழுங்கு முறைகளோடு நடைபெற்றுவந்த அந்நியபாஷை வரமானது, ஓய்ந்துபோயிற்று. நிறைவானதாகிய புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்ட பிறகு குறைவானதாகிய அந்நியபாஷை வரம் ஓய்ந்துவிட்டது. (1 கொரி. 13:8-10) மேலும் வேதம் இப்போது எல்லா நாட்டு தேசிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. வேதம் இப்போது சுமார் 1800 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆகையினால், இப்போது அந்நிய பாஷை வரத்திற்கு அவசியமில்லாமல் போயிற்று.

மேலும் சபை குழந்தையாக இருந்தபொழுது குழந்தைக் கேற்றவைகளாகிய அந்நிய பாஷை போன்ற வரங்கள் இருந்தன. சபை வளர்ந்து புருஷனைப் போல ஆன பிறகு குழந்தைக் கேற்றவைகளாகிய அந்நிய பாஷை போன்ற வரங்கள் ஒழிந்துவிட்டது என்று



அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (1 கொரி. 13:11) மேலும் அந்நிய பாஷையைக் குறித்து ரோமர், எபேசியர், பேதுரு, யூதா, யோவான் போன்ற புத்தகங்களில் குறிப்பிடப்படவில்லை. அந்தகாலக் கட்டத்தில் அந்நிய பாஷை பேசுகிற வரம் குறைந்து கொண்டே வந்ததே அதற்கு காரணமாகும்.

ஆனால் தேவனால் அருளப்பட்ட அந்நிய பாஷை வரம் முடிவுபெற்ற போதிலும், உலகத்தில் இன்றைக்கும் கூட அந்நிய பாஷைகள் சில சபைகளில் பேசப்படுகிறது. அப்போஸ்தலர்கள் பெந்தெகோஸ்தே நாளில் பேசியதைப் போன்ற அந்நிய பாஷை இப்போது எங்கேயும், யாராலும் பேசப்படவில்லை என்பது நிச்சயம்; மேலும் அப்.பவுல் 1 கொரி. 14ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஒழுங்குகளுக்கேற்ப இப்போது பேசப்படுகிறதா? இல்லை, அவர்களை அறியாமலேயே ஆவி வந்து அவர்கள் அந்நிய பாஷையில் பேசுகிறதாகக் கூறுகிறார்கள். ஆனால் வேதமோ, தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் அவர்களுக்கு அடங்கியிருக்கிறது என்று கூறுகிறது. (1 கொரி. 14:32)

அடுத்து யாராவது அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் அல்லது மூன்று பேருக்குள் அடங்க வேண்டும் என்றும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேச வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. ஆனால் இப்போது அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள் அவர்களையும் மீறி கூச்சலிடுகிறார்கள்; எழும்பி, எழும்பி குதிக்கிறார்கள்; உணர்ச்சி வசப்பட்டவர்களாகவும் சுயாதீன மற்றவர்களாகவும், பேசி முடித்தவுடன் சோர்வடைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இது எவ்வகையிலாவது வேதத்திற்கு ஒத்திருக்கிறதா என்று நிதானித்துப் பாருங்கள். மேலும் இவ்வாறு அந்நிய பாஷை பேசுகிறவர்களை அருகிலுள்ள புறஜாதிகளும், கல்லாதவர்களும் அவிசுவாசிகளும் பைத்தியக்காரர்கள் என்று எண்ணுகிறார்கள். வேதமும் அவ்வாறே கூறுகிறது. (1 கொரி. 14:23) எழுதியிருக்கிறபடி தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே அவர்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே. (ரோமர் 2:24)

இவ்வாறு சபையார் ஏகமாய்த் கூடிவந்து அந்நிய பாஷை பேசக்கூடிய நேரங்களில் பெண்களின் ஆடைகள் சரிந்து அருவருப்பை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் வேதமோ பெண்கள் முக்காடிட்டுக்கொண்டு அமைதலாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். (1 கொரி.14:33) தேவன் இப்படிப்பட்ட அருவருப்புகளுக்கும் ஒழுங்கீனங்களுக்கும், கலகத்திற்கும் தம்முடைய ஆவியைக் கொடுக்காமல், ஒழுங்குக்கும், சாந்தத்திற்கும், சமாதானத்திற்குமே கொடுத்திருக்கிறார். ஆகையினால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறவர்கள் எந்த ஆவியை பெற்றிருக்கிறார்கள் என்பதை நிதானித்துப் பாருங்கள்.

அர்த்தம் சொல்லுகிறவனில்லாவிட்டால் சபையில் அந்நிய பாஷை பேச வேண்டாம் என்று வேதம் கூறுகிறது. (1 கொரி 14:28) ஆனால் இக்காலச் சபைகளில் அர்த்தம் சொல்லப்படாமலேயே, அந்நிய பாஷைகள் பேசப்படுகின்றன. மேலும் இப்பொழுது அந்நிய பாஷை பேசுகிறவர்களுக்கு அவர்கள் பேசியதின் அர்த்தம் அவர்களுக்கும் புரியவில்லை. கூடிவந்துள்ள சபையாருக்கும் புரியவில்லை. கேட்டால் நாங்கள் தேவனோடு பேசுகிறோம் என்று கூறுகிறார்கள். அப்படியானால், இவர்கள் ஏன் சபையிலே வேதத்திற்கு முரணாக பேசுகிறார்கள்? (1 கொரி. 14:2, 28) சிந்தித்துப் பாருங்கள்.

சில சபைகளில் சிலர் ஜெபம் செய்யும்பொழுதே இடையில் உணர்ச்சி வசப்பட்டு, உரத்த சத்தமாய் கூச்சலிட்டு அந்நிய பாஷையில் பேசுவது போல பேசுகிறார்கள். இது வேதத்திற்கு இசைந்திருக்கிறதா? என்று நிதானியுங்கள். இதைக்குறித்து வேதமும், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே. நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய். ஆகிலும் மற்றவன் பக்தி விருத்தியடையமாட்டானே என்று கூறுகிறது. (1 கொரி. 14:16,17)



மேலும் இக்காலத்தில் அந்நிய பாஷை பேச, அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் பரிசுத்த ஆவி வந்து இறங்க வேண்டும் என்று கருதி, அவர்கள் சபை கூடி வருகின்ற ஒவ்வொரு முறையும், பரிசுத்த ஆவியைப் பெற்று அந்நிய பாஷையில் பேச, சங்கீதங்களை முழக்கி, வாத்தியக் கருவிகளை அளவுக்கு மீறி இசைக்கிறார்கள்; அப்பொழுது உணர்ச்சிவசப்பட்டு சபையில் கூடிவந்திருக்கிற அனைவரும் ஏகமாய் கூச்சலிடுகிறார்கள். இதெல்லாம் வேதத்திற்கு எவ்வளவு விரோதமாய் இருக்கிறது பாருங்கள்.

அந்நிய பாஷை பேசுதல் பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்று, அந்நிய பாஷை பேசினால்தான் பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளம் என்று சில சபைகளில் பிரசங்கிக்கப்படுகிறது. அப்படியல்ல. பரிசுத்த ஆவியைப் பெற்ற அனைவருமே அந்நிய பாஷை பேசவில்லை. வரங்களிலேயே கடைசியாக உள்ளது, இந்த அந்நிய பாஷை வரம் தான். (1கொரி. 12:28,29) எல்லாருக்கும் எல்லா வரமும் கொடுக்கப்படாமல், தேவன் அவருடைய சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். (1கொரி. 12:28-11, 30) மேலும் அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. (1 கொரி.14:22) சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே அதிக விருப்பமானது என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (1 கொரி. 14:19)

எனவே, மேலே செல்லப்பட்டவைகளிலிருந்து, இப்போது பேசப்படுகிற அந்நிய பாஷைகள் எல்லாம் வேதத்திற்கு இசைவானதாயில்லை என்றும் இவைகளெல்லாம் வஞ்சக ஆவியால் நடப்பவை என்றும் அறிந்து கொள்ளுகிறோம். ஆகையால் பிரியமானவர்களே உலகத்தில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.

(1 யோவான் 4:1) மேலும் இப்போது அப்போஸ்தலர் யாரும் இல்லை. அப்படியிருந்தால் அவர்கள் கள்ள அப்போஸ்தலராகத்தான் இருக்கவேண்டும். சாத்தானும் ஒளியின் தூதனுடைய (கிறிஸ்து) வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. (2 கொரி. 11:13-15)

பிற்காலத்தில் மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினால் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள் என்ற சத்திய வசனத்திற்கேற்ப (1 தீமோ. 4:1), இக்காலத்தில் பலர் வேதத்தை சரியாக ஆராயாமல் வஞ்சிக்கிற ஆவிகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு உண்மைச் சத்தியத்தை உணர்ந்து சத்திய ஜீவபாதைக்குள்ளாக வரும்படி அன்புடன் அழைக்கிறோம். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போமாக. (2 கொரி. 5:6)

**********



# 11. மூன்று உலகங்கள்

உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜெபிப்பதுண்டு. ஆனால் இந்த தேவ ராஜ்யம் எப்போது வரும்? அதன் சிறப்பு அம்சம் என்ன? இப்போதிருக்கிற ராஜ்யம் யாருடையது? இது எப்போது முடிவுக்கு வரும் என்று எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? இல்லையேல் இதோ இப்போதே இது குறித்து சிந்திக்க ஒரு சந்தர்ப்பம்.

நாம் வேதத்தை ஆராய்ந்து பார்ப்போமேயானால் மூன்று உலகங்கள் (யுகங்கள்) குறித்து வேதம் கூறுவதை அறிந்து கொள்ளலாம். அப்.பேதுரு கூறுகிறதாவது: "அப்போதிருந்த உலகம் ஜலப் பிரளயத்தினால் அழிந்தது." (2 பேதுரு 3:6) "இப்போதிக்கிற வானங்களும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது." (2 பேதுரு 3:7) "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும், புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." (2 பேதுரு 3:13) இப்படியாக முதல் உலகத்தை அப்போது இருந்த உலகம் என்றும் இரண்டாம் உலகத்தை இப்போது இருக்கிற உலகம் என்றும் மூன்றாம் உலகத்தை புதிய வானம், புதிய பூமி என்றும் வேதம் சொல்கிறது.

## முதல் உலகம்

தேவன் நம் ஆதி பெற்றோராகிய ஆதாம் ஏவாளை தமது சாயலாக சிருஷ்டித்து அவர்களை ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தார். அங்கே அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார். தேவன் மனிதனிடம் தோட்டத்திலுள்ள எல்லா விருட்சத்தின் கனிகளையும் புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின கனியை புசிக்க வேண்டாம். அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டிருந்தார். (ஆதி 2:17)

ஆனால் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாகிய சாத்தான் நமது ஆதிப் பெற்றோரை வஞ்சித்து நன்மை தீமை அறியத்தக்க கனியைப்

புசிக்கச் செய்தான். (ஆதி.3:4-6) ஆகையால் தேவன் ஆதாமை நோக்கி, "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய்; அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர் வகைகளைப் புசிப்பாய்; நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்கு திரும்பும் மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்கு திரும்புவாய் என்றார். (ஆதி. 3:17-19) இந்த சாபத்தினாலேயே பூமியிலுள்ள எல்லோருக்கும் மரணம் வந்தது. ஆதிப் பெற்றோர்கள் ஜீவ விருட்சத்தின் கனியை பறித்து புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடிக்கு செய்ய வேண்டும் என்பதற்காக தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டு ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியை காவல் செய்ய கேருபீன்களையும் வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (ஆதி.3:22-24) அவர்கள் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறி பூமியின் மற்ற பகுதியிலே வாழ்ந்து வந்தார்கள்.

அந்த முதல் உலகத்தை தேவன் தூதர்களுக்கு கீழ்ப்படுத்தி யிருந்தார். (எபி. 2:5) பூமியிலே மனுஷர் பெருகத் துவங்கின போது, தேவ குமாரர்கள் (தேவ தூதர்கள்) மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தர்யம் உள்ளவர்கள் என்று கண்டு அவர்களுக்குள் தங்களுக்கு பெண்களைத் தெரிந்து கொண்டார்கள். தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளோடு கூடுகிறதினால் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்ற போது அவர்கள் பூமியிலே பேர் பெற்ற மனுஷராகிய பலவான் களானார்கள். இவர்கள் மூலமாக பூமியிலே அக்கிரமம் பெருகினது. (ஆதி 6:1-5) இதனால் முதல் உலகம் கெட்டுப்போனது.

ஆகையால் இந்த பூமியை (உலகத்தை) அழிக்க தேவன் சித்தம் கொண்டார். 40 நாட்களுக்கு இரவும் பகலும் மழை பெய்தது. வானத்தின் மதகுகள் திறவுண்டன. மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. (ஆதி. 7:11,12,20) தேவன் நோவா முதலான எட்டு பேரை மட்டும் பேழை மூலம் காப்பாற்றி அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த பூமியை ஜலத்தினால் அழித்தார். இப்படியாக தேவன் அப்போதிருந்த முதல் உலகத்தை ஜலப் பிரளயத்தினால் அழித்தார்; பாவம் செய்த தூதர்களை



சங்கிலியினால் கட்டி நரகத்தினால் தள்ளி நியாயத்தீர்ப்புக் கென்று வைத்திருக்கிறார். (2 பேதுரு 2:4,5) இயேசு கிறிஸ்து கொலையுண்டு ஆவியிலே உயிர்த்தெழுந்தவுடன் இந்த காவலிலுள்ள ஆவிகளுக்குத் தான் பிரசங்கித்தார். (1 பேதுரு 3:18,19)

எனவே முதல் உலகம் என்பது, ஆதாம் முதல் நோவா காலத்தின் ஜலப் பிரளயம் முடிய உள்ள காலத்திலிருந்த உலகமாகும். இதன் பிறகு பூமியிலுள்ள ஜனங்கள் எல்லாம் நோவா குடும்பத்தார் மூலம் உண்டானவர்கள்தான்.

**இரண்டாம் உலகம்**

இரண்டாம் உலகம் இப்போதிருக்கிற உலகமாகும். இந்த உலகம் சாத்தானுக்குள் கிடக்கிறது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சாத்தானை இந்த உலகத்தின் அதிபதி என்கிறார். (யோவான் 16:30) அப்.பவுல் சாத்தானை இப்பிரபஞ்சத்தின் தேவன் என்றழைக்கிறார். (2 கொரி. 4:4) இயேசு கிறிஸ்து தமது முதலாம் வருகையில் வந்திருந்த போது ஞானஸ்நானம் பெற்றவுடன் 40 நாட்கள் உபவாசமிருந்தார். உபவாசம் முடிந்தவுடன் சாத்தான் அவரை சோதிக்கிறான். அப்போது அவன் நமது ஆண்டவரை ஒரு மலையின் உச்சியில் நிறுத்தி இந்த உலகத்தைக் காண்பித்து, "நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை பணிந்து கொண்டால் இந்த ராஜ்யத்தை நான் உனக்கு தருவேன்" என்கிறான். (மத்.4:8,9) இதிலிருந்து இந்த உலகம் சாத்தானின் ஆளுகையிலிருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம்.

எனவே தான் இந்த உலகத்தில், அநீதி, அவபக்தி, அவிசுவாசம், கொலை, கொள்ளை போன்ற அக்கிரமங்கள் நிறைந்திருக்கின்றன. தேவன் ஆதாம் ஏவாளைப் படைத்த போது இந்த உலகத்தின் மிருகங்கள், மச்சங்கள், பறவைகள் முதலானவைகளை ஆண்டு கொள்ளுங்கள் என்றார். (ஆதி. 1:28) ஆனால் ஆதி பெற்றோர் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டதால் அவனுக்கு கீழ்ப்பட்டுப் போயினர். ஆகையால் உலகமும், மனு மக்களும் சாத்தானுக்குள் கிடக்கிறார்கள். இயேசு கிறிஸ்து கூட "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியது அல்ல" என்று கூறுகிறார். (யோவான் 18:36) மனிதனின் பாவத்தினால், பூமி சபிக்கப்பட்டது; அது முள்ளும் குருக்கும் முளைப்பித்தது. ஜலப் பிரளயத்திற்கு பின் சீதோஷ்ண

நிலை மாறியது. தாவர உணவை உண்ட மனிதனும் மிருகங்களும் மாமிச உணவை உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மனிதனுக்கும் மிருகத்திற்கும் பகைமை ஏற்பட்டது. பாஷைகள் பிரிந்தன. மனிதனின் ஆயுசு நாட்கள் குறைந்தது. மண்ணால் உண்டான மனுஷன் கடைசியில் மண்ணுக்கே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. (ஆதி. 3:17, 18:8:22;9:2,3;11:1,7,8)

ஆனாலும் மனுக்குலத்தை இரட்சிக்க தேவன் ஒரு தெய்வீக திட்டத்தை வைத்து இருந்தார். ஆதாமுக்கு ஈடுபலியாக கிறிஸ்துவை பலியிட்டு மரணத்திற்குள் சென்று கொண்டிருக்கும் மனுக்குலத்தை ஜீவனுக்குள் கொண்டுவர சித்தம் கொண்டார். இந்த இரண்டாம் உலகத்தில் தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டு "உன் சந்ததிக்குள்ளாக பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தார். (ஆதி. 22:18) அந்த சந்ததி கிறிஸ்து என்று வேதம் கூறுகிறது.(கலா. 3:16) கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்தானம் பெற்றவர்கள் அனைவரும் கிறிஸ்துவை தரித்து கொண்டவர்கள் என்றும், ஆபிரகாமின் சந்ததியார் என்றும் வேதம் கூறுகிறது. (கலா. 3:27,29) இவர்களே திருச்சபையார் ஆகும். இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறார்கள். (1 கொரி.12:27) கிறிஸ்துவின் சரீரமாகும் இந்த வாய்ப்பு இந்த இரண்டாம் உலகத்தில் கிறிஸ்துவுக்குப் பின் (சுவிசேஷ யுகத்தில்) வாழும் மனுக்குலத்துக்கு மட்டுமே உரியதாய் இருக்கிறது.

இந்த இரண்டாம் உலகத்தின் முடிவில் பெரிய ஆபத்துக் காலம் வருமென்று வேதம் கூறுகிறது. உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவத்திராததும். இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். (மத் 24:21) இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அக்கினியினால் அழிக்கப்பட போகிறது. இப்படியாக இந்த இரண்டாவது பொல்லாத உலகம் அழியும். பின்பு கிறிஸ்து முதலில் திருச்சபையாரை ஆவியின் சரீரத்தில் உயிர்த்து எழுப்புவார். அதன் பிறகு மற்ற அனைவரையும் மாம்சீக சரீரத்தில் உயிர்த்து எழுப்புவார். இயேசு கிறிஸ்து திருச்சபையாருடன் இந்த உலகை நியாயந்தீர்த்து ஆதாமின் சாபத்தினிமித்தமாக மனுக்குலம் இழந்து போனவைகளை திரும்பக் கொடுத்து உலகை ஆசீர்வதிப்பார். இது தான் மூன்றாம் உலகம்.



## மூன்றாம் உலகம்

இந்த மூன்றாம் உலகத்தைத் தேவனுடைய ராஜ்யம் என்று வேதம் சொல்லுகிறது. இந்த ராஜ்யத்தை குறித்துத்தான் யோவான் ஸ்நானனும். இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் "தேவனுடைய ராஜ்யம் சமீபத்திருக்கிறது" என்று பிரசங்கித்தார்கள். (மத். 3:2;4:17;10:7)

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதிப்பதே அவர்களது முக்கிய நோக்கமாயிருந்தது. இந்த ராஜ்யம் பூமியிலே ஸ்தாபிக்கப்படும் போது சாத்தான் யாரையும் மோசம் போக்காதபடி ஆயிரம் ஆண்டுகள் கட்டப்படுவான். (வெளி 20:2)

அப்போது இயேசு கிறிஸ்துவும் திருச்சபையாரும் இந்த ராஜ்யத்திலே ராஜாக்களாக இருந்து ஆளுகை செய்வார்கள். உலகை நியாயந்தீர்ப்பார்கள். இந்த ஆளுகை ஆயிர வருடம் நடைபெறும். (வெளி 20:4) ஆகையால் இது 1000 வருடயுகம் என்றும் அழைக்கப்படும். இது நீதி வாசமாயிருக்கிற உலகம் என்று வேதம் கூறுகிறது. (2 பேதுரு 3:13) தேவ ராஜ்யத்தில் "வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப் போல செழிக்கும். குருடரின் கண்கள் திறக்கப்பட்டு செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்போது முடவன் மானைப்போல குதிப்பான். ஊமையன் நாவும் கெம்பீரிக்கும். வனாந்தரத்திலே தண்ணீர்களும் கடு வெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர் தடாகமாகவும் வறண்ட நிலம் நீரூற்றுக்களுமாகவும் மாறும்." (ஏசா.35:1,5-7)

மேலும் ஓனாய் ஆட்டுக்குட்டியோடு தங்கும். புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும். கன்றுக் குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும். அவைகளின் குட்டிகள் ஒருமித்து படுத்துக் கொள்ளும். சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டு விரியன் புற்றிலே தன் கையை வைக்கும். இப்படியாக மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள பகைமை நீங்கும்; மனிதனிடம் மிருகமோ, மிருகத்திடம் மனிதனோ பயப்பட வேண்டியது இல்லை. (ஏசா 11:6-9; ஓசி. 2:18) மிருகங்களும் மாம்சம் உண்பதில்லை.

தேவ ராஜ்யத்தில் வியாதிப்பட்டிருக்கிறேன் என்று யாரும் சொல்வதில்லை. அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும். அவர்கள் பசியாயிருப்பதுமில்லை. தாகமாயிருப்பதுமில்லை. உஷ்ணமாகிலும் வெயிலாகிலும் அவர்கள் மேல் படுவதுமில்லை. (ஏசா. 33:24; 49:10) மேலும், வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருப்பார்கள். திராட்சைத் தோட்டங்களை நாட்டி அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அப்போது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. (ஏசா. 2:4) இப்படியாக யுத்தம் ஒழிக்கப்பட்டு எங்கும் சமாதானம் நிலவும், அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஒரு மனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு தேவன் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாற்றுவார். (செப்.3:9)

ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று வேதம் கூறுகிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற, அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருப்பதினால், இந்த தேவராஜ்யத்தில் பூமியின் குடிகள் அனைவரும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள சத்தியத்தை அறிந்து கொள்வார்கள். (யோவா. 17:3;1 தீமோ.2:4; ஏசா.26:9)

இந்த ஆயிரம் வருஷம் முடியும் போது சாத்தான் கொஞ்ச காலம் விடுதலையாவான். (வெளி. 20:7-9) தேவனுடைய ராஜ்யத்திலும் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத துன்மார்க்கர்களை (ஏசா.26:10) சாத்தான் தன் பக்கம் சேர்த்துக் கொள்ளுவான். ஜீவ புத்தகத்திலே பேரெழுதப்படாத இந்த துன்மார்க்கரையும், சாத்தானையும் தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி அழிப்பார். இதுதான் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல் என்று தீர்க்கதரிசன பாஷையிலே சொல்லப்படுகிற இரண்டாம் மரணமாகும். இந்த இரண்டாம் மரணத்தில் பங்கடைந்தவர்கள் இனி உயிரடைய மாட்டார்கள். மரணமும் பாதாளமும் அக்கினி கடலிலே தள்ளப்படும். (வெளி. 20:14,15: 21.8) இப்படியாக பாவமும் மரணமும் பாவத்திற்கு காரணனாகிய சாத்தானும் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்.



இதுதான் புதிய வானம், புதிய பூமி ஆகும். முந்தினவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை. துக்கமுமில்லை, அலறுதலுமில்லை வருத்தமுமில்லை. (ஏசா. 65:17; வெளி.21;1-4) இந்த தேவ ராஜ்யத்தில் தீங்கு செய்வாருமில்லை. கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல் பூமி தேவனை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஜனங்கள் பேசும்போதே தேவன் கேட்டு அவர்களுக்கு மறு உத்தரவு கொடுப்பார். (ஏசா; 11:9; 65:23)

இப்படியாக இயேசு கிறிஸ்து இந்த பூமியை 1000 வருடம் ஆட்சி செய்து எல்லாவற்றையும் முந்தின சீருக்குக் கொண்டு வந்து தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு ராஜ்யத்தை அவருக்கு ஒப்புக் கொடுத்து அவருக்குக் கீழ்பட்டிருப்பார். (1 கொரி. 15: 24-28)

நாம் இதுவரை முதல் உலகம் எப்படி இருந்தது. அது ஏன் அழிந்தது என்பதையும், இப்போதிருக்கிற பொல்லாத உலகம் எப்படிப்பட்டதாக இருக்கிறது, இது எப்படி அழியும் என்பதையும், அதன் பிறகு புதிய உலகம் - மூன்றாம் உலகம் எப்படி ஸ்தாபிக்கப்படும், அது எப்படி ஆசீர்வதிக்கபட்டதாக இருக்கும் என்பதையும் அறிந்து கொண்டோம். எனவே இனியாவது ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அறிந்தவனாக “உம்முடைய ராஜ்யம் வருவதாக” என்று ஜெபிப்பானாக. இந்த மூன்றாம் உலகத்தில்தான் தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறும்; இயேசு கிறிஸ்துவும் திருச்சபையாரும் பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார்கள். இந்த மூன்றாம் உலகை ஆசீர்வதிக்கக்கூடிய மேலான சிலாக்கியத்திற்காக அழைக்கப்பட்ட வர்களாகிய உங்களை நல்வழிக்கு வர அன்புடன் அழைக்கிறோம்.

*********

## 12. வெளியாக்கப்பட்ட இரகசியம்

"ஆதி காலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்போது அவரது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம் ....." கொலோ. 1:25

வேதத்திலே அநேக தேவ ரகசியங்கள் மறைந்து கிடக்கின்றன. உலகத்தோற்ற முதல் மறைபொருளானவைகளும் அநேகம் உண்டு. தீர்க்கதரிசனங்கள் எல்லாம் முத்திரைப் போடப்பட்டிருக்கின்றன. இந்த முத்திரைகளையெல்லாம் இந்த கடைசிக்காலத்தில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உடைத்து மறைபொருளாயிருக்கிற தேவ இரகசியங்களையெல்லாம் வெளியரங்கமாக்கிக் கொண்டிருக்கிறார். சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு புடமிடப்பட்டவர்களாய் விளங்கும் பரிசுத்தவான்கள் மட்டுமே இதை உணர்ந்து கொள்வார்கள். துன்மார்க்கரோ உணரமாட்டார்கள். வெளியாக்கப்பட்ட தேவ இரகசியங்களை வேத வசனத்தின் துணை கொண்டு நாம் இங்கு ஆராய்வோம். (மத். 13:35; தானி. 12;4,9,10; வெளி. 5:5; மாற். 4:22)

வானத்திலும் பூமியிலும் அநேக ஜீவராசிகளையும் சிருஷ்டிகளையும் காண்கிறோம். அவைகளையெல்லாம் உண்டாக்கி வழி நடத்தி வருகிறவர் தேவன். அவரது நாமம் "யேகோவா" என்பது. அவருக்கு ஆரம்பமும் இல்லை; முடிவும் இல்லை; பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை; சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர். அதாவது சாகாமை உடையவர். அவருக்கு ஆதி (ஆரம்பம்) இல்லாததால் அவரை "**அநாதி தேவன்**" என்று வேதம் சொல்கிறது. அவருக்கு முன் வானமோ, பூமியோ, ஜீவராசிகளோ, கிரகங்களோ, அண்ட சராசரங்களோ இருந்ததில்லை. இவர் ஒருவரே தேவன், வேறொருவர் இல்லை. இவர் மனிதனால் காண முடியாத தெய்வீக ஜீவியாக (Divine Nature) இருக்கிறார். (யாத். 6:2:3; சங். 83:17; 90:2; யாத். 33:20; யோவான் 1:18; 4:24)

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.



அப்படியானால் இந்த ஆதிக்கு முன்னதாக வானமும் பூமியும் இருந்ததில்லை. இந்த ஆதிக்கு முன்னதாக ஒரு ஆதி இருந்ததாக வேதம் சொல்கிறது. ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனோடிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். இந்த வார்த்தைதான் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார். நம் ஆண்டவராகிய இயேசுகிறஸ்து தான் இந்த வார்த்தையானவர். இவருக்கு ஆரம்பம் (ஆதி) உண்டு. இந்த ஆதிக்கு முன்னதாக வார்த்தையானவர் இருந்ததில்லை. சகலமும் இவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் இவராலேயல்லாமல் உண்டாகவில்லை. இவர் சிருஷ்டிகளுக்கெல்லாம் முதன்மையானவர். இவரே யேகோவா தேவனின் முதல் சிருஷ்டி, நேரடி சிருஷ்டி. எனவே தான் இவர் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார் என்று வேதம் சொல்கிறது. மற்ற சிருஷ்டிகளையெல்லாம் யேகோவா தேவன் இந்த வார்த்தையானவரைக் கொண்டு தான் சிருஷ்டித்தார். இவரைக் கொண்டு தான் லூசிபர், கேருபீன்கள், சேராபீன்கள், தேவதூதர்கள் போன்ற ஆவிக்குரிய ஜீவிகளையும் தேவன் சிருஷ்டித்தார். (ஆதி. 1:1; யோவா. 1:1–3, 14; வெளி. 3:14; கொலோ. 1:15, 16)

ஆவிக்குரிய ஜீவிகளுக்குப் பின்னர் தான் வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டன. ஏனெனில் பூமியை அஸ்திபாரப்படுத்தினபோது ஆவிக்குரிய ஜீவிகளாகிய விடியற்காலத்து நட்சத்திரங்கள், தேவபுத்திரர் (தேவதூதர்கள்) அனைவரும் கெம்பீரித்தார்கள் என்று வேதம் சொல்கிறது. அதன்பின் தான் சிருஷ்டிப்பின் நாட்கள் என்று சொல்லக்கூடிய அந்த ஆறு நாட்களில் தேவன் பூமியை மனித குடியிருப்புக்கு தகுதியானதாக மாற்றினார். ஆறாவது நாளின் பிற்பகுதியில் தான் நமது முதல் பெற்றோர் ஆதாம், ஏவாளை மாம்சீக சரீரத்தில் தேவன் சிருஷ்டித்தார். (யோபு 38:4–7; ஆதி. 1:2; ஏசா. 45:18; ஆதி. 1:26, 27)

நமது ஆதி பெற்றோரை தேவன் ஏதேன் தோட்டத்திலே வைத்தார். அவர்களை காப்பதற்காக ஏதேனில் அபிஷேகம் பண்ணி வைக்கப்பட்ட ஒரு கேரூப்தான் லூசிபர். இந்த லூசிபர் தேவனுக்கு ஒப்பாவேன் என்றும்

ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும் தன் இருதயத்திலே நினைத்ததின் காரணமாக சாத்தான் (விரோதி) ஆனான். அதன் பின் தான் நமது ஆதி பெற்றோர்களான ஆதாம், ஏவாளை வஞ்சித்து நன்மை தீமை அறியதக்க கனியை புசிக்கக் செய்து, அவர்களை பாவத்தில் விழச்செய்தான். தேவன் அவர்களுக்கு முன் எச்சரிக்கையாகச் சொன்னபடி மரண தண்டனையைக் கொடுத்தார். (ஆதி. 2:8; எசே. 28:14; ஏசா. 14:12-15; ஆதி. 2:17; 3:19)

ஏதேன் தோட்டத்தில் உள்ள ஜீவ விருட்சத்தின் கனியை பறித்து, புசித்து என்றென்றைக்கும் உயிரோடு இராதபடிக்கு செய்ய வேண்டும் என்பதற்காக தேவன், அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றி அதை காவல் செய்யும்படி கேருபீன்களையும் சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3:22-24)

மனிதர்கள் பூமியில் பலுகி பெருகினார்கள். சில தேவதூதர்கள் (தேவ குமாரர்கள்) அழகான மனித குமாரத்திகளை திருமணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றார்கள். அவர்கள் பூமியிலே ராட்சதர்கள் போலவும் பலவான்களைப் போலவும் இருந்தனர். இதனால் பூமியிலே அக்கிரமம் பெருகினது. இதனால் தேவன அந்த பூமியிலிருந்த மக்களை ஜலப்பிரளயத்தினால் அழித்தார். நீதிமானும் உத்தமனுமாயிருந்த நோவா, அவரது குடும்பத்தார் மொத்தம் எட்டுப் பேரையும் சில பறவை, மிருக ஜீவன்களையும் பேழை மூலம் காப்பாற்றினார். இவர்கள் மூலம் தான் பூமியிலே மறுபடியும் மனுஷர், பறவைகள், மிருக ஜீவன்கள் பெருகின. (ஆதி. 6:1-6)

பாவம் செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் அந்தகார சங்கிலியினாலே கட்டி நியாயத்தீர்ப்புக்கென்று வைத்திருக்கிறார். சாத்தானும் விழுந்துபோன இந்த தூதர்களும் தான் பூமியில் நடக்கிற எல்லா தீமைகளுக்கும் மற்றும் பில்லி, சூனியம், அஞ்சனம் பார்த்தல், குறி சொல்லுதல் போன்றவைகளுக்கும் இன்று காரணராக இருக்கிறார்கள். (1பேது 3:20; II பேது 2:4,5; யூதா 6; உபா 18:10-12)



தேவன் ஆபிரகாம் என்ற ஒரு விசுவாசமுள்ள மனிதனை தெரிந்துகொண்டார். இந்த ஆபிரகாமின் சந்ததியிலே தான் தம்மிடத்தில் செல்லப்பிள்ளையாயிருந்த ஒரே குமாரனாகிய வார்த்தையானவரை இயேசு என்ற பெயரிலே பிறக்கச் செய்தார். யேகோவா தேவனிடம் ஆவியின் ஜீவியாக இருந்த வார்தையானவர் மாம்ச ஜீவியாக பூமிக்கு வந்தார். (கலா. 3:16; பிலி. 2:7; யோவா. 1:18)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது முதல் வருகையில் மாமிசத்தில் மனிதனாக வந்து தம்மைத் தாமே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். 30 வயதிலே ஞானஸ்நானம் பெற்று 3½ ஆண்டுகள் சுவிசேஷ ஊழியம் செய்து தமது 33½ வயதில் சிலுவையில் உலக மக்களுக்காக தமது ஜீவனை கொடுத்தார். அவர் பூமியிலே வாழ்ந்த போது பாவமில்லாத பரிசுத்த பூரண மனிதனாக வாழ்ந்தார். அவர் மரித்து மூன்றாம் நாள் ஆவியின் ஜீவியாக தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டார். அவர் உயிர்த்து 40 நாட்கள் ஆவியின் ஜீவியாக இருந்துகொண்டு அப்போஸ்தலர்களுக்கும், சீடர்களுக்கும் தரிசனம் கொடுத்து அவர்களை பலப்படுத்தி வந்தார். (1 பேது. 3:18; அப். 1;3)

இயேசு கிறிஸ்து உயிர்த்து 40-ம் நாள் பரலோகம் எழுந்தருளினார். பரலோகம் சென்றபின் தெய்வீக ஜீவியானார். தேவன் அவருக்கு சாகாமையை அருளிச் செய்தார். தற்போது பிதாவாகிய தேவனும், இயேசுகிறிஸ்துவும் மட்டுமே சாகாமை உடையவர்களாக, தம்மில்தாமே ஜீவனை உடையவர்களாக, தெய்வீக ஜீவிகளாக இருக்கிறார்கள். (யோவா.5:26)

சுவிசேஷ யுகத்தில் தேவன் பூமியிலே திருச்சபையின் மக்களைத் தெரிந்து கொண்டு வருகிறார். புறஜாதிகளினின்றும் (யூதரல்லாத மற்ற ஜனங்கள்) தேவன் தமது நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை தெரிந்து கொண்டு வருகிறார். பரம அழைப்புக்கு பாத்திரவான்கள், சிறு மந்தை, பரிசுத்தஜாதி, சொந்த ஜனம், ராஜரீக ஆசாரியக்கூட்டம், தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, பரம எருசலேம், பரிசுத்த நகரம், மணவாட்டி என்று பல நாமங்களைக் கொண்டு வேதம் திருச்சபையாரை அழைக்கிறது.

பெந்தெகொஸ்தே நாளில் தான் திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது. கடந்த இரண்டாயிரம் வருடங்களாக தேவன் திருச்சபையின் அங்கங்களை தெரிந்து கொள்ளும் வேலையை செய்து கொண்டு வருகிறார். அவர்களின் எண்ணிக்கை 1,44,000 பேர் என வேதம் கூறுகிறது. இவர்களின் தேர்வு முடிவடைந்தவுடன் தான் இவ்வுலகம் முடிவுக்கு வரும். அதுவரை இந்த துன்மார்க்க உலக மக்களை அழிக்காமல் தேவன் வைத்து வைப்பார். (அப். 2:1-4; 15:14; எபி. 3:1; லூக். 12:32; 1 பேது. 2:9; வெளி.21:2,9,10; 7:1-4; 14:1,3; 11 பேது. 3:7)

இந்த திருச்சபையாரின் குணநலன்களைப்பற்றி வேதம் கூறுகிறதாவது: இவர்கள் ஸ்தீரிகளால் தங்களை கறைப்படுத்தாமல் இருந்து, ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுகிறவர்கள். இவர்கள் வாயில் கபடமில்லை. இவர்கள் மாசில்லாதவர்கள்; சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு புடமிடப்பட்ட வர்களாய் விளங்குபவர்கள்; மிருகத்தையாவது அதின் சொரூபத்தை யாவது வணங்காமல், நெற்றியிலும் கைகளிலும் அதின் முத்திரையை தரித்துக் கொள்ளாதவர்கள். (வெளி. 14:4.5; தானி. 12:10; வெளி.20:4)

நமது ஆண்டவரின் இரண்டாம் வருகையில் இந்த உலகத்திற்கு அழிவு ஏற்படுகிறது. சாத்தானுடைய ராஜ்யம் நீக்கப்பட்டு கிறிஸ்துவின் ராஜயம் ஸ்தாபிக்கப்படுகிறது. மரித்த திருச்சபையார் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று **சாகாமையை தரித்துக் கொள்வார்கள்.** உயிரோடிருக்கும் திருச்சபையின் அங்கங்களும் மறு ரூபமாக்கப்பட்டு **சாகாமையை தரித்துக்** கொள்வார்கள். அதாவது தெய்வீக ஜீவியாக மாற்றப்பட்டு கிறிஸ்துவைப் போன்ற தெய்வீக சரீரத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த மணவாட்டி வகுப்பார் உயிர்த்து கிறிஸ்துவுடன் இந்த உலகத்தை 1000 வருடம் அரசாளுவார்கள். (மத். 24:3; 21:22; வெளி. 11:15; 20:4,6; 1கொரி. 15:52-54; 1 தெச. 4:16,17; 1 யோவா. 3:2)

திரள் கூட்டம் என்கிற ஒரு தோழி வகுப்பாரைக் குறித்தும் வேதம் சொல்கிறது. இவர்கள் எண்ணக்கூடாத திரள் கூட்டம்; இவர்கள் மிகுந்த



உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; தங்களது அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்கள்; இவர்களை புத்தியில்லாத கன்னிகைகள் என்று கூறி, தோழிகளாகிய கன்னிகைகள் என்றும் கூறுகிறது. மணவாட்டி வகுப்பாரையோ முற்றும் ஜெயங்கொள்கிறவர்கள் என்று வேதம் கூறுகிறது. இந்த தோழி வகுப்பாருக்கு சிங்காசனத்தில் இடமில்லை. ஆனால் சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து கொண்டு தேவதூதரைப்போல தேவனை சேவிப்பார்கள். ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்று தேவதூதரைப் போல நித்திய ஜீவனோடு இருப்பார்கள். (வெளி. 7:9-17; மத். 25:1-12; சங். 45:14; ரோமர் 8:14)

மற்ற ஜனங்கள் மாம்ச சரீரத்தில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். திருச்சபையார் கிறிஸ்துவோடு கூட இந்த உலகை ஆயிரம் வருடம் நியாயம் தீர்த்து ஆளுகை செய்வார்கள், பாவம் செய்த தூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள். சாத்தான் அந்த 1000 வருடம் முடியுமட்டும் யாரையும் மோசம் போக்காதபடி கட்டப்பட்டிருப்பான்.

அனைத்து மக்களுக்கும் சத்தியம் போதிக்கப்படும். சத்தியத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படும். ஆயிரம் வருஷ யுக முடிவிலே சாத்தான் கொஞ்சகாலம் விடுதலையாவான். சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத அவிசுவாசிகளை சாத்தான் ஒன்று சேர்த்து தேவனுடைய பிள்ளைகளுக்கெதிராக செல்வான். அப்போது தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி அவர்களை அழிப்பார். (1 கொரி. 15;44;6;2;3; வெளி. 20;2; ஏசா. 26:9,10; வெளி. 20:7-9)

இரட்சிக்கப்பட்ட மனிதர்கள் மட்டுமே புதிய பூமியிலிருப்பார்கள். அங்கே இனி கண்ணீர் இல்லை, கவலை இல்லை, பசி இல்லை, பட்டினி இல்லை, வியாதி இல்லை, மரணமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, முந்தினைவைகள் ஒழிந்து போய் எல்லாம் புதிதாக்கப்படும். கிறிஸ்து 1000 வருட ஆட்சி முடிந்தவுடன் இந்த ராஜ்யத்தை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து அவருக்கு கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரி. 15:22: வெளி. 21:1,4; ஏசா. 33:24; 35:5-10; 49:10; 1 கொரி; 15:24,28)

# வெளியாக்கப்பட்ட ரகசியம்

| | காலம் | தெய்வீக ஜீவிகள் | ஆவியின் ஜீவிகள் | | மாம்ச ஜீவிகள் | வேத ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அநாதி காலம் | யேகோவா தேவன் | - | | | சங் 83:17<br>சங் 90:2 |
| 2. | ஆதி | யேகோவா தேவன் | தேவனுடைய வார்த்தை<br>(இயேசு கிறிஸ்து) | | - | யோவா 1:1. 14 |
| 3. | தூதர்களின் ஆதி | யேகோவா தேவன் | வார்த்தையானவர்<br>லூசிபர், தூதர்கள் | | - | யோபு 38:4-7<br>கொலோ 1:6; யோவா 1:3 |
| 4. | மாம்ச ஜீவிகளின் ஆதி | யேகோவா தேவன் | வார்த்தையானவர்<br>லூசிபர், தூதர்கள் | | பறவைகள், மிருகங்கள்,<br>மனிதர்கள் (ஆதாம், ஏவாள்) | ஆதி 1:20 - 27<br>எசே 28:12-14 |
| 5. | ஏதேன் தோட்டம் | யேகோவா தேவன் | வார்த்தையானவர்<br>தூதர்கள் | சாத்தான்<br>(லூசிபர்) | பறவைகள், மிருகங்கள்,<br>மனிதர்கள் (ஆதாம், ஏவாள்) பாவிகள் | ஏசா 14:12-15<br>எசே 28:12-15<br>ஆதி 2:17 ; 3:19 |
| 6. | நோவா காலம் முதல் கிறிஸ்து பிறப்பு வரை<br>கி.மு. | யேகோவா தேவன் | வார்த்தையானவர்<br>தூதர்கள் | சாத்தான்<br>விழுந்துபோன<br>தூதர்கள் | பறவைகள், மிருகங்கள்<br>பாவ மனிதர்கள் | ஆதி 6:1-6, I பேதுரு 3:20,<br>II பேதுரு 2:4,5;யூதா 6 |
| 7. | கி.பி.<br>சுவிசேஷ யுகம் | யேகோவா தேவன் | தூதர்கள் | சாத்தான்<br>விழுந்துபோன<br>தூதர்கள் | இயேசு கிறிஸ்து, பாவ மனிதர்கள்<br>மிருகங்கள், பறவைகள் | லூக் 2:11, யோவான் 1:14,<br>பிலி 2:7 |
| 8. | | யேகோவா தேவன் | தூதர்கள்,<br>உயிர்ப்பிக்கப்பட்ட<br>கிறிஸ்து (40நாட்கள்) | சாத்தான்<br>விழுந்துபோன<br>தூதர்கள் | பாவ மனிதர்கள்,<br>மிருகங்கள், பறவைகள் | அப் 1:3<br>1 பேதுரு 3:18 |
| 9. | | யேகோவா தேவன்<br>இயேசு கிறிஸ்து<br>(பரலோகம் சென்ற பின்) | தூதர்கள் | சாத்தான்<br>விழுந்துபோன<br>தூதர்கள் | திருச்சபையார், பாவ மனிதர்கள்,<br>மிருகங்கள், பறவைகள் | அப் 1:9, எபே.1:19:21<br>யோவான் 5:26 |
| 10. | ஆயிரம் வருட ஆட்சி | யேகோவா தேவன்<br>கிறிஸ்து, திருச்சபை | தூதர்கள்<br>திரள் கூட்டம்<br>(தோழி வகுப்பார்) | சாத்தான்<br>விழுந்துபோன<br>தூதர்கள் | நியாயத் தீர்ப்புக்குட்பட்ட மனிதர்கள்,<br>மிருகங்கள், பறவைகள் | 1 கொரி. 15:51, 52<br>1 தெச 4:16,17<br>ஏசா 11:4-8; வெளி 7 அதி |
| 11. | ஆயிரம் வருட ஆட்சிக்குப்பின் | யேகோவா தேவன்<br>இயேசு கிறிஸ்து, திருச்சபை | தூதர்கள்,<br>திரள் கூட்டம் | | இரட்சிக்கப்பட்ட மனிதர்கள்,<br>மிருகங்கள், பறவைகள் | வெளி 20:7-9 |

வெளியாக்கப்பட்டிருக்கிற இந்த சத்தியங்களை எல்லாம், "நீ தரிசனத்தை எழுதி அதைக்கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை" என்று (ஆப:2:2) வேதம் கூறுகிறபடி அட்டவணையிலே சுலபமாக புரிந்து கொள்கிற அளவுக்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

பிதாவாகிய தேவன் ஒருவர் மாத்திரமே தெய்வீக ஜீவியாக இருந்தார். அதன் பிறகு தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் சாகாமையை அருளிச் செய்து தெய்வீக ஜீவியாக்கினார். தற்போது பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டு முற்றிலும் ஜெயம் கொண்ட திருச்சபையாருக்கும் சாகாமையை அருளிச் செய்து, திவ்ய சுபாவத்தை தரப்போகிறார். பூமியிலே அற்பமாக எண்ணப்பட்ட புற ஜாதியாராகிய நம்மையும் திருச்சபையின் அங்கங்களாக அழைத்து தெய்வீக ஜீவியாக உயர்த்தப்போகிறார். அவரது தெய்வீக குடும்பத்தில் நாமும் சேரப்போகிறோம். இது எவ்வளவு பெரிய மேன்மையான சிலாக்கியம்! தேவன் நம்மை உலகத்தோற்றத்திற்கு முன்னதாக தெரிந்து கொண்டார் என்பது இன்னும் எவ்வளவு பெரிய மேன்மை! ஆதி காலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து தற்போது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்டிருக்கிற ரசகியம் என்ன? கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக புற ஜாதியாராகிய நமக்குள் இருப்பதே அந்த ரகசியம்! ஆம், புறஜாதியாராகிய நாம் முற்றிலும் ஜெயம் கொண்டவர்களாக தெய்வீக ஜீவியாக உயர்த்தப்படுவோம் என்பதே அந்த ரகசியம்! எனவே கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருவோமாக, ஆமென். (2 பேது. 1:4; எபே. 1:4; கொலோ. 1:25,27; பிலி. 3:14)

************



# 13. கிறிஸ்து (மஸ்) பிறந்த நாள்

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 25ம் நாள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாளாக "கிறிஸ்துமஸ் பண்டிகை" கொண்டாடப்பட்டு வருகிறது. மெய்யாகவே இயேசுவின் பிறந்த நாள் டிசம்பர் 25-ஆம் தேதிதானா? இதை ஏன் டிசம்பர் 25-ஆம் தேதி கொண்டாடி வருகிறார்கள்? இதன் அவசியம் என்ன? இதன் அடிப்படை காரணம் என்ன? என்று அறிந்து கொள்ள அநேகர் முயற்சி செய்வதில்லை. எந்த ஒரு காரியமாய் இருந்தாலும் அதை நன்றாய் ஆராய்ந்தறிந்து, பகுத்து, தெளிவடைந்து கைக்கொள்வதே நன்று. நமது முன்னோர்கள் செய்துவரும் பாரம்பரிய வழக்கத்தின்படியே, பண்டிகைகளையும், தேர் திருவிழாக்களையும் கொண்டாடி வருகிறோம். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்ற பரிசுத்த பவுல் அறிவுரையின்படி கிறிஸ்துமஸ் பண்டிகை வேதத்திற்கு இசைவான காரியம்தானா? என்பதை நமது திருமறையான பைபிள் அடிப்படையில் சில காரியங்களை கவனிக்கலாம்.

**முதலாவது ரூபகாரம்**: இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியான யோவான் ஸ்நானகன் என்ற ஸ்நானக அருளப்பர் வயதிலே இயேசுவுக்கு ஆறு மாதங்களுக்கு மூத்தவர். எப்படியெனில் காபிரியேல் தூதர் இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு வாழ்த்துதல் கூறும்போது யோவான் ஸ்நானகனின் தாயாகிய எலிசபெத்துக்கு இது ஆறாம் மாதம் என்றார். ஆகவே, இயேசுவின் பிறந்த நாளை கண்டுபிடிக்க, யோவான் ஸ்நானகனின் பிறப்பை கவனிப்பது அவசியம். எனவே, லூக்கா 1:5 முதல் 20 வசனங்களை வாசிக்கவும்.

இதில் 5-ம் வசனத்தில் அபியா என்ற ஆசாரிய முறைமையில் (order) சகரியா என்ற ஒருவன் இருந்தான் என்றும் 8, 9 வசனங்களில் சகரியா தன் ஆசாரிய முறைமையின்படி தேவ சந்நிதியிலே தூபங்காட்டுகிறதற்கு சீட்டைப் பெற்றான் என்றும் வாசிக்கிறோம். எனவே யோவான் ஸ்நானகனின் தகப்பனாகிய சகரியா ஆலயத்திலே ஊழியம் செய்த, அந்த அபியாவின் முறை என்னவென்றும், அது எக்காலம்

என்றும் நாம் அறிவது அவசியம். அதாவது தாவீது அரசனின் காலத்தில் ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்ய, முறைமை வகுக்கப்பட்டது. எப்படியெனில், ஆசாரிய ஊழியம் செய்ய 24 ஆசாரியர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு மாதத்திற்கு இரண்டு இரண்டு பேராக 12 மாதத்திற்கும் 24 ஆசாரியர்களாக முறைப்படுத்தப்பட்டனர். ஒரு மாதத்தின் முதல் 15 நாட்களுக்கு ஒரு ஆசாரியனும் பின் 15 நாட்களுக்கு ஒரு ஆசாரியனுமாக முறைப்படுத்தப்பட்டு, ஆசாரியர்களின் பெயர்களை எழுதி சீட்டுப்போட்டு யார் யார் எப்போது ஆலயத்திலே ஊழியம் செய்யவேண்டும் என்று, தாவீது அரசன் முறைப்படுத்தி இருந்தான். முதலாம் சீட்டுப் பெற்றவன் முதலாம் மாதம் முன் 15 நாட்களுக்கும், இரண்டாவது சீட்டுப் பெற்றவன் முதலாம் மாதம் பின் 15 நாட்களுக்கும் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டும். அந்தப்படி, எட்டாவதை அபியா என்ற ஆசாரியனுக்கு சீட்டு விழுந்தது. எட்டாவதை எண்ணும்போது அபியாவின் ஊழியகாலம் எபிரேயரின் மாதப்படி 4-ம் மாதமாகிய தம்முஸ் மாதம் பின் 15 நாட்களாகும். இந்த காரியங்களை 1 நாளாகம புஸ்தகம் 24ம் அதிகாரத்தில் பார்க்கலாம். எனவே, சகரியா ஆலயத்தில் ஊழியம் செய்த காலம் அவனது முன்னோரான அபியாவின் முறைமையின்படி எபிரேய மாதமான 4ம் மாதம், தம்மூஸ் மாதத்தின் பின் 15 நாட்களாகும். சகரியாவின் இந்த ஊழியகாலம் நிறைவேறினபின்பு அவன் வீட்டுக்குப்போனான். எந்த ஆசாரியனும் தனது ஆலய ஊழியக்காலத்தில் வீட்டிற்குப் போகமாட்டான். அந்த 15 நாட்களும் ஆலயத்திலே தங்கியிருப்பார்கள். ஊழியகாலம் நிறைவேறினபின்பே தங்கள் வீடுகளுக்குப் போவது வழக்கம். அதன்படி சகரியா தனது ஊழியகாலம் நிறைவேறின பின்பு, தனது வீட்டிற்குப் போனான். அதன் பிறகு அவன் மனைவி கர்ப்பவதியானாள். (லூக். 1:23,24) எனவே, யோவான் ஸ்நானகனின் தாய் எலிசபெத்து கர்ப்பம் தரித்தது எபிரேய மாதப்படி 5ம் மாதமாகிய ஆப் என்னும் மாதம். இது தமிழ் மாதத்திற்கு ஆடிமாதம் ஆங்கில மாதத்திற்கு ஜுலை மாதமாகும். எலிசபெத்தின் ஆறாம் மாதத்தில் காபிரியேல் தூதர் மரியாளிடம் அனுப்பப்பட்டார். (லூக் 1:26-28) ஆகவே, காபிரியேல் மரியாளை சந்தித்து தேவசித்தத்தை தெரிவிக்கவும்,



உன்னதமானவரின் பெலன் நிழலிடவும், மரியாள் கர்ப்பவதியானாள். எனவே மரியாள் கர்ப்பம் தரித்தது எலிசபெத்தின் ஆறாம் மாதத்தில், அதாவது ஆடி மாதத்திலிருந்து ஆறு மாதம் தள்ளி மார்கழி மாதத்தில் ஆகும். இதிலிருந்து பத்தாம் மாதம் இயேசு பிறந்த மாதம் ஆகும். அதாவது மார்கழி 1, தை 2, மாசி 3, பங்குனி 4, சித்திரை 5, வைகாசி 6, ஆனி 7, ஆடி 8, ஆவணி 9, புரட்டாசி 10, புரட்டாசி மாதமே இயேசு பிறந்த மாதம். இது ஆங்கில மாதத்திற்கு அக்டோபர் மாதம் ஆகும். எனவே இயேசு பிறந்தது டிசம்பர் 25ம் தேதியல்ல தமிழ் மாதமாகிய புரட்டாசி கடைசியிலும், ஆங்கில மாதத்திலே அக்டோபர் முதலுக்குமாகும். இது எபிரேய மாதத்திற்கு ஏழாம் மாதமாகிய எத்தானீம் மாதமாகும்.

**மற்றொரு ரூபகாரம்:**

இயேசுவின் மரணநாள் வேதத்தில் திட்டமாக கூறப்பட்டுள்ளது. இது யூதர் முறைப்படியான நீசான் மாதம் 14ம் தேதி. முதல் மாதமாகிய நீசான் மாதம் நமது தமிழ் மாதமான பங்குனி மாதத்திற்கு சமமானது. இது ஆங்கில மாதம் மார்ச் கடைசியிலும் ஏப்ரல் மாதம் ஆரம்பத்திலும் இருக்கும். இயேசு தமது 33½ வயதில் மரித்தார் என்பதை தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தின் வாயிலாக திட்டமாக அறியலாம். (தானி. 9:24-27) இயேசு 33 வயதில் அல்ல 33½ வயதில் மரித்தார். இது மார்ச் மாதக் கடைசியிலோ அல்லது ஏப்ரல் முதலுக்கோ வருகிறது என்றால் அவரது பிறந்த நாள் அதற்கு 6 மாதத்திற்கு முன்னதாக இருக்கவேண்டும். எனவே, மார்ச் மாதத்திலிருந்து பின்நோக்கி 6 மாதம் சென்றால் மார்ச் 1, பிப்ரவரி 2, ஜனவரி 3, டிசம்பர் 4, நவம்பர் 5, அக்டோபர் 6. எனவே இயேசு பிறந்தது டிசம்பர் 25 அல்ல, அக்டோபர் மாதத்தில் என்பது தெளிவு.

இயேசுகிறிஸ்து டிசம்பர் 25ல் பிறக்கவில்லை என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு உண்டு. அதாவது, இயேசுகிறிஸ்து பிறந்தபோது அவரது பிறப்பை தேவ தூதர் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார் என வாசிக்கிறோம். தேவ தூதர் மேய்ப்பர்களுக்கு தரிசனமானபோது அவர்கள்

வயல்வெளிகளில் ஆட்டு மந்தைகளை வைத்திருந்தார்கள். (லூக். 2:8-11) டிசம்பர் மாதத்தில் நம் நாட்டில் இருப்பதுபோல கிஸ்லே என்ற ஒன்பதாம் மாதம் பாலஸ்தீனாவில் கடுங்குளிராக, அடைமழை காலமாக, குளிர்காலமாகவும் இருப்பதால் அக்காலங்களில் மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை வயல்வெளிகளில் நிறுத்த முடியாது. இதை எஸ்றாவின் புத்தகத்திலும், பாலஸ்தீனா சரித்திரங்களிலும் நாம் அறியலாம். (எஸ்றா 10:9, 13) எனவே, மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கியிருந்த காலம் மழைக்காலமாகிய டிசம்பரில் அல்ல, அதற்கு முன்னான காலமாக இருக்க வேண்டும். அக்டோபர் மாதமே மந்தைகளை வயல்வெளிகளில் வைப்பதற்கு ஏற்ற காலம். எனவே, இயேசு பிறந்தது டிசம்பர் மாதத்தில் அல்ல. அது டிசம்பருக்கு முன்னான அக்டோபர் மாதத்தில்தான் என்பதை நிதானித்து பார்க்கும் போது அறிந்து கொள்ளலாம்.

மேலும் சில காரியங்களை கவனிப்போமானால் இந்த கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடும் வழக்கம், திருச்சபையின் ஆரம்ப காலங்களில் இல்லை. சுமார் 4-ம் நூற்றாண்டு காலத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை முதல் முதலாகக் கொண்டாடப்பட்டதாக Encyclopaedia மூலமாக அறியலாம். இதை ஆதி திருச்சபை வரலாறு நமக்குத் தெளிவாக்குகிறது. அதாவது வடஐரோப்பா கண்டத்தில் வாழ்ந்த துத்தானிய ஜாதியினர் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவும் முன்னே, அவர்கள் இயற்கை சக்திகளை வழிபட்டு வந்தார்கள். சூரியனை வணங்கி அதன் கால மாற்றங்களை பண்டிகையாக கொண்டாடி வந்தனர். அதாவது சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தொடர்பில், சூரியன் பூமத்திய ரேகையிலிருந்து வடக்குநோக்கி சஞ்சரித்து டிசம்பர் 22ந்தேதி வட அட்சத்தில் கடகரேகையை அடைகிறது. இது வட ஐரோப்பாவில் சூரியன் தென்படும் உச்சநிலையாகும். இது ஜுலியன் காலண்டர்படி டிசம்பர் 25தேதி என கணிக்கப்பட்டது. ஆகவே அந்த நாளில் அங்கு வாழ்ந்த மக்கள் சூரியனுக்கு ஒரு பெரிய பண்டிகையாக "ஒளித்திருவிழா" (Festival of Fires) என்று கொண்டாடி வந்தனர். இதன் தொடர்ச்சியாக அதிலிருந்து 8ம் நாள் "மகிழ்ச்சி திருவிழா" (Joy Festival)



என்று ஜனவரியில் கொண்டாடி வந்தனர். ஜெர்மானிய துத்தானிய ஜாதியினரான இவர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக மாறியும் தங்கள் பழைய பழக்கவழக்கங்களை விட்டுவிட மனம் இல்லாததால் டிசம்பர் 25 கிறிஸ்து பிறந்த நாளாகவும் அதிலிருந்து 8ம் நாள் ஜனவரி முதல் தேதி இயேசுவின் விருத்தசேதன நாளாகவும் பிரகடனப்படுத்தி விட்டனர். மேலும் கிறிஸ்துமஸ் பண்டிகையன்று நடைபெறும் "கிறிஸ்துமஸ் மரம்" வைத்தல் "கிறிஸ்துமஸ் தாத்தா" கிறிஸ்துமஸ் கேக் வெட்டுதல், வாத்து புசித்தல் போன்ற சடங்குகள் புராதன நகரமான பாபிலோனிலிருந்து வந்தது என்பதை The world book encyclopaedia, The Encyclopaedia of Religion and Ethics, The Encyclopaedia Americana போன்ற புத்தகங்களால் அறியலாம்.

இயேசுவின் பிறந்தநாளை கொண்டாடும்படி வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. சீடர்களும் கொண்டாடவில்லை. ஆனால் கிறிஸ்துவின் மரண நாளை நினைவுகூறும்படி கற்பிக்கப்பட்டுள்ளது. (லூக். 22:19) கர்த்தரின் ஞாபகார்த்த பஸ்காவாகிய இராப்போஜன பண்டிகையே அவரது மரணத்தை நினைவுகூரும் நாளாயிருக்கிறது. (1 கொரி. 11:22-26) கிறிஸ்துமஸ் பண்டிகை நாளன்று நடைபெறும் காரியங்களை பார்க்கும் போது மிகவும் அருவருக்கத்தக்கதாய் இருக்கிறது. கிறிஸ்துமஸ் நாளை மகிழ்ச்சியாக கொண்டாடுகிறேன் என்று கூறிக்கொண்டு குடிவெறியாலும், நல்ல உணவுகளை தயாரித்து உண்டு பெருந்தீனியினாலும், சினிமா டிராமா பாட்டுக்கச்சேரி போன்ற களியாட்டங்களினாலும் விளையாட்டு விழா போன்ற காரியங்களில் நேரத்தை செலவிட்டு என் வசனத்தைக் கைக்கொண்டு நடவுங்கள் என்ற கட்டளையை அவமாக்குகிறார்கள். ஆகவே பிரியமானவர்களே பாரம்பரிய சடங்காச்சாரங்களையும் வேதத்தில் சொல்லப்படாத பண்டிகை நாட்களையும் தவிர்த்து தேவனுக்கு உகந்த பிள்ளைகளாக ஜீவிப்போமாக.

எபிரேய தமிழ், ஆங்கில மாதங்களின் ஒப்பு நோக்குதல்:

(ஆதாரம் : Smith's Bible Dictionary)

| எபிரேய மாதங்கள் | தமிழ் மாதங்கள் | ஆங்கில மாதங்கள் |
|---|---|---|
| 1. ஆபீப்(அ) நீசான் (யாத் 13:4; எஸ்தர்3:7 | பங்குனி | மார்ச் பின் 15 நாள் ஏப்ரல் முன் 15 நாள் |
| 2. சீப் (1 ராஜா 6:1) | சித்திரை | ஏப்ரல்-மே 15 நாள் |
| 3.சீவான் (எஸ்தர் : 8:9) | வைகாசி | மே-ஜுன் 15 நாள் |
| 4. தம்மூஸ் (எசே 8:14) | ஆனி | ஜுன்-ஜுலை 15 நாள் |
| 5. ஆப் (எஸ்றா 7:9) | ஆடி | ஜுலை-ஆகஸ்டு 15 நாள் |
| 6. ஏலூல் (நெகே.6:15) | ஆவணி | ஆகஸ்ட்-செப்டம்பர் 15நாள் |
| 7. எத்தானீம் (1 ராஜா 8:2) | புரட்டாசி | செப்-அக்டோபர் 15 நாள் |
| 8. பூல் (1 ராஜா 6:38) | ஐப்பசி | அக்-நவம் 15 நாள் |
| 9. கிஸ்லே (சக 7:1) | கார்த்திகை | நவம்-டிசம் 15 நாள் |
| 10. தேபேத் எஸ்தர் 2:16 | மார்கழி | டிசம்-ஜனவரி 15 நாள் |
| 11.சேபாத் சக.1:7 | தை | ஜன-பிப்ரவரி 15 நாள் |
| 12. ஆதார் (எஸ்தர் 3:7) | மாசி | பிப்ரவரி - மார்ச் 15 நாள் |



# 14. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி

“வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரேதேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். ஆகிலும் இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை.” (I கொரி 8:5-7) இவ்வுலகில், கடவுளை நம்புகிறவர்களும் நம்பாதவர்களும் இருப்பினும் கடவுளை நம்புகிறவர்களே அதிகம். இந்த கடவுள் நம்பிக்கை உள்ளவர்களில் அநேக பிரிவினைகள் உண்டு. இதில் கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தோரே அதிகம். இந்தக் கிறிஸ்தவ மார்க்கத்திலும் எத்தனையோ சபைகள், மார்க்க பேதங்கள் இருக்கின்றன. பைபிள் என்ற ஒரே நூலையே வேதப் புத்தகமாகக் கொண்ட இந்த கிறிஸ்தவ மார்க்கத்தில் இத்தனைப் பிரிவுகள் ஏன் உண்டாயின? இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன், “உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே” என்று I கொரி. 11:19ல் கூறுகிறார். இப்படி பலவிதமான மார்க்க பேதங்கள் உண்டாகக் காரணம் என்ன?

1. வேத ஆராய்ச்சி குறைவு.

2. மூலபைபிள், பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. இந்த மூல பைபிளை, பிறமொழிகளில் மொழி பெயர்க்கும் போது ஏற்பட்ட சில தவறுகள்.

3. புதிய ஏற்பாட்டில் சுமார் 4000 கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தப் பிரதிகளை மூலப் பிரதிகளிலிருந்து நகல் எடுக்கும்போது சில பிழைகள் ஏற்பட்டிருக்கின்றன.

புதிய ஏற்பாட்டில் இப்போது பூர்வீக பிரதிகளாக இருப்பவைகள்:

a. சிநெயாடிக் (Sinaitic-1844ல் கண்டுபிடிக்கப்பட்டது).

b. வாடிகன் எண். 1209 (Vatican No. 1209-1475ல் கண்டுபிடிக்கப்பட்டது).

c. அலெக்ஸாண்டிரியன் பிரதி (Alexandrine - 1968-ல் கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்கூறிய பிரதிகளில் சிநெயாட்டிக்தான் மிகவும் பூர்வீகமானது. முதல் இரண்டு பிரதிகளும் நான்காம் நூற்றாண்டிலும், அலெக்ஸாண்டிரியன் பிரதி 5-ம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டவைகள். இந்த பிரதிகளுக்கும், இதற்குப் பின்பு எழுதப்பட்ட பிரதிகளுக்கும் சில வித்தியாசங்கள் உள்ளன. இதனால் நம்மிடையே சில சத்திய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

4. ஒரு சிலர் ஓரிரு வசனங்களை மட்டுமே பிடித்துக் கொண்டு, சில கொள்கைகளை வகுத்துக் கொண்டு, ஒரு சபையை ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஒரு விஷயத்தைக் குறித்து ஆராயும்போது, அது சம்பந்தமான எல்லா தேவ வாக்கியங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்; அப்படிச் செய்யாமல், புரியாததை விட்டு விட்டு அல்லது தவறான அர்த்தம் எடுத்துக்கொண்டு புரிந்த சில வசனங்களைக் கொண்டு, ஒரு கொள்கையை வகுத்துக்கொள்கின்றனர். இதற்குக் காரணம் இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (சாத்தான்) அவர்களது மனக்கண்களைக் குருடாக்கி இருப்பதேயாகும். (II கொரி.4:4)

வேதவாக்கியங்களை ஆராயும்பொழுது ஒரு வசனம் மற்ற வசனத்திற்கு முரண்பாடாகத் தோன்றினால், நாம் அந்த வசனங்களின் உண்மைப் பொருளை அதாவது அந்த வசனங்கள் எந்தப் பொருளில் எழுதப்பட்டுள்ளதோ, அந்தப் பொருளை நாம் புரிந்து கொள்ளவில்லை என்பது புலனாகிறது; ஏனெனில் வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டு, ஒன்றுக்கொன்று இசைவாக இருக்கிற தேயல்லாமல், முரண்பாடாக இருக்காது. ஆகையினால்தான், “வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. (யோவான் 5:39)



கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு பிரிவினர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்று தேவர்கள் என்றும், மூவரும் சமம், சம நித்தியர் என்றும், இன்னுமொரு பிரிவினர் திரியேகர் அதாவது மூவரும் ஒரே ஆளாக இருக்கிறார்கள் அல்லது ஒரே ஆள் மூவராக இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். தேவனைப் பற்றி வேதம் என்ன கூறுகிறதென்பதை ஆராயலாம்.

## பிதாவாகிய தேவன்

வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் அநேகர் இருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. இவர் தம்மில் தாமே ஜீவன் உடையவர். இவர் சிருஷ்டிக்கப்பட்டவரல்ல; இவருக்குப் பிறப்பும், இறப்பும், ஆதியும் அந்தமும் கிடையாது. ஆகையால் இவரை அநாதி தேவன் என்று வேதம் கூறுகிறது. (யோவான் 5:26; சங்; 90:2;41:13)

இவர் திரியேக தேவனாக இல்லாமல், ஒருவராய், ஒன்றான மெய் தேவனாக இருக்கிறார். (உபா. 32:39; சங்.136:4; ஏசா. 45:5;6; யோவான் 17:3; I தீமோ, 2:5)

இவர் சாகாமையுள்ளவர்; மரிக்காத தன்மையுள்ளவர்; மரணம் இவரை நெருங்க முடியாது. சதா காலங்களிலும உயிரோடிக்கிறவார். (I தீமோ. 6:16; உபா. 32:40; ஆதி. 21:33; வெளி.10:7)

பிதாவாகிய தேவனையல்லாமல் வேறே தேவன் இல்லை; இவருக்கு ஒப்பானவரோ அல்லது சமமானவரோ யாரும் கிடையாது. (II சாமு. 7:22; I இராஜா. 8:23; ஏசா. 45:5,6;46:9)

வேதத்தில் தேவன் என்று அநேகரைச் சொல்லியிருந்தாலும், அந்த தேவர்களுக்கெல்லாம் தேவன், பிதாவாகிய தேவனே என்று வேதம் கூறுகிறது. (தானி. 2:47; I கொரி. 8:5,6)

இவரே மெய்யான சிருஷ்டிகர்; சகலத்தையும் உண்டாக்கினவர். (ஏசா. 45:12; மல். 2:10; I கொரி. 8:6)

பிதாவாகிய தேவன் அதரிசனமானவர்; மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர், காணக்கூடாதவர். ஒரு மனிதனும் இவரைக் கண்டு உயிரோடிருக்க முடியாது. இவரை ஒருவரும், ஒரு போதும் கண்டதில்லை. யாரும் அவருடைய ரூபத்தைக் கண்டதுமில்லை; அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. (கொலோ. 1:15; I தீமோ. 6:16; யாத். 33:20; யோவா.1:18; I யோவா 4:12; யோவான் 5:37)

இவர் எங்கும் வியாபித்து இருப்பதில்லை. பரலோகம்தான் இவருடைய வாசஸ்தலம். (I இராஜா. 8:30; மத். 6:9; மத். 10:32,33)

இவருடைய நாமம் "யேகோவா" என்பதே. யேகோவா என்பதற்கு "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று பொருளாகும். (யாத். 6:2,3; சங்.83:17; யாத்.3:13,14)

பழைய ஏற்பாட்டில் "கர்த்தர்" என்று தடித்த எழுத்துக்களில் போடப்பட்டிருக்கிற எல்லா இடங்களிலும் "யேகோவா" என்றே வரவேண்டும். ஆங்கில வேதாகமத்தில் "**LORD**" என்று பெரிய எழுத்துக்களில் போடப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் "**JEHOVAH**" என்றே இருக்க வேண்டும். "யேகோவா" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் சுமார் 7,000 தடவைகள் வருகிறது. அத்தியாவசியமான சில இடங்களில் மட்டுமே யேகோவா என்று போட்டுவிட்டு மற்ற இடங்களிளெல்லாம் கர்த்தர் என்றே போட்டிருக்கிறார்கள். (Refer : Strong's Concordance of the Bible)

இவர், சர்வ வல்லமையுள்ள தேவன்; நீதியுள்ளவர், அன்புள்ளவர், பூரண ஞானமுள்ளவர். (ஆதி. 17:1; யாத். 6:3; சங். 11:7; யோவா. 3:16; I யோவா. 4:8-11; யோபு 12:13; ரோம. 16:27; 11:33)

இதுவரை பிதாவாகிய தேவனைக் குறித்துப் பார்த்தோம். இனி அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவைக் குறித்துப் பார்ப்போம்.

## தேவனுடைய குமாரன்- இயேசு கிறிஸ்து

இயேசு என்ற கிரேக்க பதத்திற்கு "இரட்சகர்" என்று பொருள். (மத்.1:21) "மேசியா" என்ற எபிரேய பதம் "கிறிஸ்து" என்று கிரேக்க மொழியில் கூறப்படுகிறது. கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருளாகும்.



பிதாவாகிய தேவனால் இயேசுகிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்ட காரணத்தினாலேயே அவர் தேவனுடைய குமாரனென்று அழைக்கப்படுகிறார். தேவன் சகலத்தையும் சிருஷ்டிப்பதற்கு முன்னதாகவே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சிருஷ்டித்து, இவர் மூலமாகவே சகலத்தையும் சிருஷ்டித்தார். தேவன் நேரடியாக இயேசு கிறிஸ்துவை மட்டுமே சிருஷ்டித்ததினால் இவர் தேவனுடைய நேரடி சிருஷ்டிப்புக்கு ஆதியும், அந்தமுமாயிருக்கிறார். (கொலோ. 1:15,16; வெளி. 3:14 நீதி. 8:22-30; எபி. 2:11; வெளி. 1:8) இவர் தேவனுடைய நேரடி சிருஷ்டியானதால், தேவனுடைய ஒரே பேரான குமாரனென்று அழைக்கப்படுகிறார். (யோவா. 1:18; 3:16; ரோம. 8:32)

பிதாவாகிய தேவன், சசலத்தையும் தம்முடைய குமாரன் மூலமாகவே செய்து வந்தார். அதாவது ஒரு காரியத்தை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமானால், அதைப்பிதாவாகிய தேவன் அறிவிப்பதைப் போலவே, பிரதான தூதனாக இருந்த இயேசுகிறிஸ்து அவர்களுக்கு வெளிப்படுத்துவார். அதாவது கேட்கின்ற செய்திகள் அனைத்தும் பிதாவாகிய தேவனே பேசுவதுபோல் இருக்கும். ஆனால் அந்த வார்த்தைகள், குரல்கள் யாருடையவைகள் என்றால் கிறிஸ்துவினுடையவைகள். ஆகையால்தான் இயேசு கிறிஸ்துவுக்கு "தேவனுடைய வார்த்தை" என்ற நாமம் கொடுக்கப்பட்டுள்ளது. (யோவான் 1:1; I யோவா. 1:1; வெளி. 19:13) இவர் தேவனுடைய வார்த்தையாகவும், கர்த்தருடைய தூதனாகவும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்வாறு பணியாற்றினார் என்பதனைக் கீழே பார்க்கலாம்.

சீனாய் மலையிலே மோசேயுடன் பேசியதும், நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததும் பிதாவாகிய தேவனே என்று யாத். 31:12-18 வசனங்களில் பார்க்கிறோம். ஆனால், யாரும் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதும் இல்லை; அவர் ரூபத்தைக் கண்டதுமில்லையென்று, யோவா. 5:37 கூறுகிறது. அப்படியானால் மோசேயோடு பேசியது யாரென்று பார்க்கும் போது, தூதனானவரே பேசி, நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததாக வேதம் விளக்குகிறது. அப்.

7:38,53) இந்த தூதரைத் தான் தேவன் இஸ்ரயேலரை வழி நடத்த அனுப்பினதாகவும் அவருடைய உள்ளத்தில் தேவனுடைய நாமம் இருப்பதாகவும் வேதம் கூறுகிறது. (யாத். 23:20,21) ரெவிதீமிலே இஸ்ரேல் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காதபோது, இந்தத் தூதனானவர் ஓரேபிலே கன்மலையின் மேல் நிற்க, மோசே கன்மலையை அடிக்க, அங்கிருந்து புறப்பட்ட தண்ணீரைக் குடித்தார்கள். (யாத். 17:6) இவ்வாறு அவர்களோடு கூடச் சென்ற ஞானக்கன்மலை கிறிஸ்துவே என்று அப்போஸ்தலனாகிய பவுல், I கொரி. 10:1-4ல் விளக்குகிறார்.

சிம்சோனின் பெற்றோர்களுக்குக் கர்த்தருடைய தூதனானவர் தரிசனம் கொடுத்தபோது, அவர்கள் அவருடைய நாமத்தைக் கேட்க, அது "அதிசயம்" என்றார். (நியா. 13:18) இந்த "அதிசயம்" என்ற நாமத்தையுடைய கர்த்தருடைய தூதனானவர், கிறிஸ்துவே எனறு ஏசாயா தீர்க்கதரிசி விளக்குகிறார். (ஏசா. 9:6) இதிலிருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கர்த்தருடைய தூதனாகவும், தேவனுடைய வார்த்தையாகவும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பணியாற்றி இருக்கிறாரென்பது ரூபகாரமாகிறது.

இயேசு கிறிஸ்து சுயமாய் எதுவும் பேசாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியும், கட்டளையின்படியும் பேசுகிறார். (உபா. 18:18,19; யோவா. 12:49; 14:10) இயேசு கிறிஸ்து தேவனுடைய தாசனாக (Servant-ஆங்கில பைபிள் காண்க) இருக்கிறார். (ஏசா.42:1; ஏசா. 43:10)

பாவத்தில் விழுந்த மனித குலத்தை இரட்சிக்க தேவனே பூமிக்கு வராமல், தன்னிடத்தில் பிரதான தூதனாக இருந்த தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பினார். (யோவா 3:16; 17.3; I யோவா. 4:9,14) நமக்காக மரித்த கிறிஸ்துவை, தேவனே மரித்தோரிலிருந்து உயிர்த்து எழுப்பினார். (ரோம.10:9; எபி.5:7; கொலோ. 2:12)

இவரே தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார். ஆகையால் தான், நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும்போது இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெபிக்கிறோம். (I தீமோ 2:5,6;யோவான் 16:23)



இயேசு கிறிஸ்து மனிதனாகப் பூமியில் வருவதற்கு முன்பு தேவனுடைய வார்த்தையாக, அவருடைய தூதனாக, ஆவியின் சரீரத்திலிருந்து கிரியை செய்து வந்தார். அவர் ஆவியின் சரீரத்திலிருந்த போது, தேவனுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்பட்டிருந்தார். அவர், என்னைக் குறித்து புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருக்கிறது; (சங். 40:7; லூக். 24:44) உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற வருகிறேன் என்று கூறி தேவ தூதரிலும் சற்று சிறியவராக நம்மைப் போல் மாம்ச சரீரத்தில் வந்தார். இவர் பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளிடத்தில் பிறந்தார். (லூக். 1:35) இவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். (லூக் 2:52) பின்னர் தமது முப்பதாவது வயதில் யோவான் ஸ்நானகனிடத்தில் ஞானஸ்நானம் பெற்று (லூக்.3:21-23) பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டார் (அப். 10:38) பாவமில்லாத இவர் மேல் நம் பாவம் சுமத்தப்பட்டது. நம்முடைய பாவத்தினிமித்தம் இவர் சிலுவையில் அறையப்பட்டு இரத்தஞ்சிந்தி மரித்தார். மரணபரியந்தம் அதாவது தமது சிலுவை மரண பரியந்தம் தேவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தார். (பிலி. 2:8) குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம். (I பேதுரு 1:19)

கிறிஸ்து ஆதாமினுடைய சந்ததியார் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார். இயேசு கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கும் வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. (அப் 4:12) ஆகையால்தான் வேதம், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்றும்; அந்த ஜீவன் தேவகுமாரனில் இருக்கிறது என்றும் கூறுகிறது. (1 யோவா. 5:11,12) இதனால்தான் இயேசு, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று திட்டமும் தெளிவுமாகக் கூறுகிறார். (யோவான் 14:6)

மரித்த இவரை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பி,

எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருக்க அருள் செய்திருக்கிறார். (யோவா. 5:26) இதற்கு முன் அவர் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கவில்லை. அதாவது, சாகாமையைப் பெற்றிருக்கவில்லை. எனவேதான் மனிதனாக வந்து மரிக்க முடிந்தது. இவ்வாறு இவர் சாகாமையைப் பெற்றிருந்தும் கூட, பிதாவாகிய தேவனுக்கு இனிவரும் காலங்களிலும் கூட கீழ்ப்பட்டிருப்பார். அதாவது, ஆயிரவருட யுக முடிவில் இராஜ்ஜியத்தை தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (I கொரி 15:24-28) எனவே இயேசுவை விட தேவன் பெரியவர் என்றும், இயேசுவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. (யோவா.14:28; 10:29; 1 கொரி.11:3)

இதுவரை நாம் பிதாவாகிய தேவனைப் பற்றியும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் விபரமாகப் பார்த்தோம், இனிமேல், இருவரும் ஒரே ஆளல்ல என்பதற்கும், இருவரும் சமமல்ல என்பதற்கும் வேத ஆதாரங்களைப் பார்க்கலாம்.

பிதாவாகிய தேவன் சிருஷ்டிக்கப்படாதவர், சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர், சாகாமையுள்ளவர், தம்மில் தாமே ஜீவனுடையவர், ஆனால், இயேசு கிறிஸ்துவோ, பிதாவாகிய தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர். நம்முடைய பாவங்களுக்காக மரித்தவர், இவருக்கு சாகாமை உயிர்த்தெழுதலுக்குப் பிறகே அருளப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இருவரும் எப்படி ஒருவராயிருக்க முடியும்? சிந்தித்துப் பாருங்கள்.

பிதாவாகிய தேவன் எல்லாவற்றையும் அறிந்தவர், அவருக்குத் தெரியாத காரியங்கள் ஒன்றுமில்லை. இவர் தமது சுயசித்தத்தின்படி எல்லாவற்றையும் செய்கிறவர். ஆனால் இயேசு கிறிஸ்து அறியாத காரியங்கள் உண்டு. இவர் தம்முடைய சுயசித்தத்தின்படி எதையும் செய்யாமல், பிதாவின் சித்தத்தின்படியே செய்கிறவர். (மாற். 13:32; மத். 20:20-23; மாற். 10:40) ஆகையினால்தான் அவர் தம்மை நோக்கிக் கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லாமல், பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்று கூறுகிறார். (மத் 7:21)



பிதாவாகிய தேவன் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தையும், ஒருவனுக்கு ஜீவனைக்கொடுக்கும் அதிகாரத்தையும் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுத்திருக்கிறார். இயேசுவே தேவனென்றால் ஏன் இவருக்கு மற்றொருவர் அதிகாரம் கொடுக்கவேண்டும்? இதிலிருந்து இயேசு கிறிஸ்துவை விட, பிதா பெரியவர் என்பது தெளிவாகிறது. (யோவா. 5:22, 27; யோவா. 10:18; மத். 28:18) பிதாவாகிய தேவனே இயேசுவை, கிறிஸ்துவும், ஆண்டவருமாக்கினார். (அப். 2:36; பிலி. 2:9)

பிதா ஒருவரே தேவன், இயேசு கிறிஸ்து தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தர். ஆகையினால்தான் பிதாவாகிய தேவனை நோக்கி, மத்தியஸ்தராகிய கிறிஸ்து மூலம் நாம் ஜெபிக்கிறோம். தேவன், இயேசு கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தியது, இயேசு கிறிஸ்துவையும் நாம் கனம் பண்ணவேண்டும் என்பதற்காகத்தான், இயேசு கிறிஸ்துவின மூலமாக நாம் ஜெபிக்க வேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அறியாமல் சிலர் இயேசு கிறிஸ்துவையே நோக்கி ஜெபித்து முடிவில் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெபிக்கிறோம் என்று கூறி ஜெபத்தை முடிக்கிறார்கள். (I தீமோ. 2:5 யோவா. 5:23; 16:23) இது எவ்வளவு தூரம் பொருத்தமற்றது என்று பாருங்கள்.

மேலும் பிதாவாகிய தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள வித்தியாசங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பிதாவாகிய தேவன் | இயேசு கிறிஸ்து |
|---|---|
| 1. பிதா-ஜீவனைக்கொடுப்பவர் | குமாரன் ஜீவனைப்பெறுபவர் (யோவா.5;26;6:57) |
| 2. இராஜா | இராஜகுமாரன் (மத் 22:1,2) |
| 3. தோட்டக்காரர் | திராட்சைக்கொடி (யோவா 15:1) |
| 4. எஜமான் | தோட்டக்காரர் (லூக் 13;6-9) |
| 5. நியாயாதிபதி (Judge) | மத்தியஸ்தர் (Mediator) I தீமோ 2:5,6 I யோவான் 2:1) |
| 6. அபிஷேகம் செய்தவர் | அபிஷேகம் செய்யப்பட்டவர் (சங் 2:6; நீதி8-23;அப் 10:38) |
| 7. ஆலயத்தில் வசிப்பவர் | ஆலயத்துக்கு மூலைக்கல் (ஏசா 28:16; எபே. 2:20). |

இதுவரை பிதாவாகிய தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள வித்தியாசங்களைப் பார்த்தோம். இனிமேல் தேவனும், இயேசு கிறிஸ்துவும் ஒரே ஆள் என்பதற்கு ஆதாரமாகச் சொல்லப்படும் வசனங்களுக்கான விளக்கத்தைப் பார்க்கலாம்.

### 1. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (I தீமோ. 3:16).

பிதாவே, கிறிஸ்துவாக மாம்ச சரீரத்தில் வந்திருந்தால் சாகாமையுடைய தேவன் மரித்திருக்க முடியாது; மரிக்கவில்லையென்றால் உயிர்த்தெழுந்திருக்கவும் இல்லை; கிறிஸ்து உயிர்த்தெழவில்லை யென்றால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் இல்லை; நம்முடைய விசுவாசமும், பிரசங்கமும் விருதா, நித்திய ஜீவனும் கிடையாது. ஆகையால், தேவன் மாம்சத்திலே வந்திருக்க முடியாது. மேலும், ஆங்கில வேதாகமத்தில் “God was Manifest in the Flesh” அதாவது, தேவன் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார் என்றிருக்கிறது. அப்படியானால், யார் யாரால் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார்? இயேசு கிறிஸ்து, பிதாவாகிய தேவனால் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார்.

இயேசுவையும் தேவன் என்று சொல்லியிருக்கிறதே என்று சிலர் கூறலாம். ஆம், இயேசுவும் ஒரு தேவன்தான். தேவன் என்றால் வல்லமையுள்ளவர் என்று பொருள். வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் அநேகர் உண்டு. உதாரணமாக மோசேயை ஆரோனுக்கும், பார்வோனுக்கும் தேவன் என்றும் (யாத். 4:16; 7:1) வேதத்தை அறிந்தவர்கள் தேவர்கள் என்றும் (யோவா. 10.35), சாத்தான் இப்பிரபஞ்சத்தின் தேவன் என்றும் (II கொரி. 4:4), இயேசுவையும் தேவன் என்றும் (யோவா. 1:1) வேதம் கூறுகிறது. இப்படி அநேக தேவர்கள் இருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. (I கொரி. 8:5,6) ஆகையால்தான் வேதம், இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமென்று கூறுகிறதேயல்லாமல், தேவனாக விசுவாசிக்க வேண்டுமென்று கூறவில்லை. (I யோவா. 4:15; 5:5; மத் 16:16)



மேலும், “தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்” என்ற இந்த வசனத்தில் ‘தேவன்’ என்பதற்குப் பதிலாக ‘அவர்’ என்று பூர்விகப் பிரதியாகிய சிநெயாட்டிக்கில் (Sinaitic) இருக்கிறது. ஆகையால்தான் தமிழ் ஒத்துவாக்கிய வேதாகமத்தில் தேவன் என்ற வார்த்தைக்கு, ‘அவர்’ என்று மார்ஜினில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், திருத்திய மொழி பெயர்ப்பிலும், கத்தோலிக்க மொழி பெயர்ப்பிலும், மொபெட் (Moffatt) மொழி பெயர்ப்பிலும், எம்பெடிக் டயகிலாட் (Emphatic Diaglott Word for Word Translation) மொழி பெயர்ப்பிலும், ‘தேவன்’ என்பதற்குப் பதிலாக ‘அவர்’ என்றே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, தமிழில் அந்த வசனத்தின் சரியான மொழி பெயர்ப்பு என்னவென்றால், ‘அவர் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார்’ என்பதே. இதிலிருந்து இயேசு, தேவனால் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டார் என்பது தெளிவாகிறது.

### 2. “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத் திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது” யோவா.1:1

இந்த வசனத்தில் வார்த்தை என்பது தேவனுடைய வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (வெளி. 19:13; யோவா. 1:14) அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்ற பகுதியை எடுத்துக் கொண்டு, கிறிஸ்துதான் தேவனாக இருந்தாரென்றும், தேவனே கிறிஸ்துவாக மாம்சத்தில் வந்தாரென்றும் சிலர் கூறுகின்றனர். ஆதியிலே வார்த்தை இருந்தது என்ற பகுதியை தியானிக்கும் பொழுது வார்த்தைக்கு ஆதி உண்டு. அதாவது ஆரம்பம் உண்டு என்று தெரிகிறது. ஆனால், தேவனுக்கோ ஆரம்பம் கிடையாது; ஏனெனில், அவர் அநாதிதேவன், ஆகையால், வார்த்தை என்பது பிதாவாகிய தேவனைக் குறிக்காது. “அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது” என்பதில் உள்ள தேவன் என்ற வார்த்தைக்கும், “அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்பதில் உள்ள தேவன் என்ற வார்த்தைக்கும் வித்தியாசமான வார்த்தைகள் கிரேக்க மூல பைபிளில் கொடுக்கப்பட்டு இருப்பதையும், இந்த வசனத்தின் எம்பெடிக் டயகிலாட் (EMPHATIC DIAGLOTT-WORD FOR WORD TRANSLATION) மொழி பெயர்ப்பையும் கீழே காணலாம்.

"In a beginning was the word, and the word was with **The God** and a God was the word."

| Greek | English | Tamil | |
|---|---|---|---|
| hotheos | The God | தேவன் | பிதாவாகிய தேவனைக் குறிக்கிறது. |
| theos | a god | (ஒரு) தேவன் | இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. |

இதிலிருந்து இயேசு தான் தேவனென்று கூறமுடியாது என்பது தெளிவாகிறது. ஏனெனில், இயேசுவை ஒரு தேவனென்றும், அதாவது வானத்திலேயும், பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்களில், அவரும் ஒருவர் என்றும் பிதாவாகிய தேவனே, ஒன்றான மெய் தேவன் என்றும் வேதம் கூறுகிறது.

## 3. என்னைக்கண்டவன் பிதாவைக் கண்டான்

(யோவான் 14:9)

இந்த வசனத்தின் மூலம், பிதாவாகிய தேவனும், இயேசு கிறிஸ்துவும் ஒன்று என்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். இந்த கருத்து மற்ற தேவ வசனங்களுக்கு இசைவாக இல்லை. எப்படியெனில், பிதாவாகிய தேவனை ஒருவனும், ஒருக்காலும் கண்டதில்லை; கண்டு ஒரு மனிதனும் உயிரோடிருக்கமுடியாது. ஒருக்காலும் அவருடைய சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவருடைய ரூபத்தைக் கண்டதுமில்லை என்று வேதம் கூறுகிறது. (யோவா. 1:18; I யோவா. 4:12; யாத். 33:20; யோவா. 5:37) ஆனால் இயேசு கிறிஸ்துவையோ உலக மக்கள் கண்டனர். அவர் சத்தத்தைக் கேட்டனர் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும். அப்படியானால், தேவ வசனம் முரணானதா? அல்லவே. அப்படியானால், இதன் பொருள் என்னவென்று பார்க்கும்பொழுது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாயிருக்கிறார். அதாவது அவருடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார். (கொலோ 1:15; II கொரி. 4:4; எபி. 1:3) இவ்வாறு இயேசு கிறிஸ்து தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறதினாலேயே "என்னைக் கண்டவன் பிதாவைக்



கண்டான்" என்று கூறினார். ஆகையால், என்னைக் கண்டவன் என்ற வார்த்தை மாம்சக்கண்களால் 'காணுதல்' என்ற பொருளைக் குறிக்காமல், மனக்கண்களால் குணம், பண்பு இவைகளைக் காணுதல் அதாவது, 'அறிதல்' என்ற பொருளையே குறிப்பதாகும். அதாவது 'என்னை அறிந்தவன் பிதாவை அறிவான்' என்று கூறுகிறார். (யோவா. 8.19) ஆகையினால், இந்த வசனத்தை கொண்டு பிதாவும், குமாரனும் ஒன்று என்று கூறுவது தவறான உபதேசமாகும்.

## 4.நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவான் 10:30)

இந்த வசனத்தை வைத்துக் கொண்டு, பிதாதான் கிறிஸ்து, கிறிஸ்துதான் பிதா என்று அநேகக் கிறிஸ்தவர்கள் விசுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள், கிறிஸ்து நானே பிதா என்று கூறாமல், "நானும், பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (நானும் பிதாவும் என்று கூறும்போதே, அது இரண்டு பேரைக் குறிப்பிடுவதை நாம் கவனிக்கவேண்டும்) என்று கூறுவதை அவர்கள் கவனிக்கிறதில்லை. ஏனெனில், யோவா. 17.21ல் "அவர்களெல்லாரும் (சீஷர்கள்) ஒன்றாயிருக்கவும்....................." நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்" என்று கூறுகிறார். மேலும், அடுத்த வசனத்தில், "நாம் ஒன்றாயிருக்கிறது போல, அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு................" என்று கூறுகிறார். ஆகையால் யோவா.10:30ன்படி பிதாவும், குமாரனும் ஒரே ஆளென்று கூறுவோமேயானால், இங்கே சீஷர்கள் அனைவரும் ஒரே ஆளென்று கூறவேண்டியிருக்கும். இது எவ்வளவு அபத்தமாய் முடியும் பாருங்கள். ஆகையால்,"ஒன்றாயிருக்கிறோம்" என்று ஒருமைப்பாட்டை விளக்கு வதற்காகவே கிறிஸ்து கூறுகிறார். (யோவா. 17:23) அதாவது சீஷர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதில் ஒரே சிந்தை, ஒரே எண்ணம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து ஜெபிக்கிறார். அதேபோல, பிதாவும் குமாரனும் தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரே எண்ணம், ஒரே சிந்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது கிறிஸ்து சுயசித்தமாய் எதையும் செய்யாமல், தேவ சித்தத்தின்படி

எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறார். மேலும் I கொரி. 3:5-8ல் நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் பவுலும், அப்பொல்லோவும் ஒரே ஆளா? அல்லது சமமானவர்களா? என்பதை சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் ஒருமனப்பட்டிருக்கிறார்கள் என்பதே பொருளாகும். அடுத்து மத். 19:5,6; எபே. 5:31ல் உள்ளபடி கணவனும் மனைவியும் ஒரே மாம்சாயிருக்கிறார்கள். இதை வைத்து கணவனும், மனைவியும் ஒரே ஆள் என்றோ அல்லது சமம் என்றோ கூற முடியுமா? அதைப் போலவே, "நானும், பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றால், இருவரும் ஒரே ஆளென்றோ, சமமானவர்கள் என்றோ, பொருள் கொள்ளாமல் இரட்சிப்பின் திட்டத்தில், இருவரும் ஒருமனப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

**5.பிலி.2:6ல் உள்ளபடி,** "தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" என்ற வார்த்தைகளைக் கொண்டு, இயேசு தேவனுக்குச் சமமானவர் என்று சிலர் கூறுகின்றனர். இதுவும் தவறான உபதேசமாகும். இயேசு கிறிஸ்து தேவனாகவோ, அல்லது தேவனுக்குச் சமமானவராகவோ இருப்பது உண்மையென்றால், "கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்" என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த வசனத்தை ஆழ்ந்து சிந்திப்போமேயானால், இயேசு கிறிஸ்து தேவனுக்குச் சமமல்ல என்பது தெளிவாகும். மேலும், King James version மொழி பெயர்ப்பில் பிழையிருப்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த வசனத்தின் பிறமொழி பெயர்ப்புகளைக் கீழே கொடுத்துள்ளோம்.

- **i. "Did not think it a matter to be earnestly desired" - Clarke.**
- **ii. "Did not regard..........as on object of solicitous desire"- Stewart**
- **iii. "Though not.....a thing to be seized"-Sharpe**
- **iv. "Did not eagerly grasp"-Neeland.**
- **v. "Did not violently strive"- Dickenson.**



- **vi. "Did not meditate a usurption"- Turnbull.**
- **vii. "Who, though being in god's form, yet did not meditate a usurpation to be like God, but divested himself, taking a bondman's form"-(Emphatic Diaglott).**

இந்த பல்வேறு மொழி பெயர்ப்புகளிலிருந்து தேவனுக்குச் சமமாயிருப்பது கொள்ளையாடக் கூடிய பொருளல்ல என்றும், அவர் கொள்ளையாடி தேவனுக்குச் சமமாயிருக்க விரும்பவில்லையென்றும் அறிந்து கொள்கிறோம். அதாவது, இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், லூசிபர் (சாத்தான்), தான் தேவனுக்குச் சமமாக வேண்டும் என்று எண்ணியதுபோல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய சாயலைப் (குணநலன்களை) பெற்றிருந்தும்கூட தேவனுக்குச் சமமாக வேண்டுமென்று எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் என்பதே.

மேலே சொல்லப்பட்டவைகளிலிருந்து இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவரென்றும், கிறிஸ்து பிதாவுக்குச் சமமானவரல்ல என்றும், முக்காலத்திலும் கிறிஸ்து தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பாரென்றும் அறிந்து கொள்கிறோம்.

## பரிசுத்த ஆவி

பரிசுத்த ஆவியை, ஆள் தத்துவமுடைய மூன்றாவது தேவனாகப் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கூறி வருகின்றனர். இது மிகவும் தவறான உபதேசமாகும். பரிசுத்த ஆவியைக் குறித்து வேதம் கூறுவதை ஆராயலாம்.

பரிசுத்த ஆவி-உன்னதத்திலிருந்து வரும் பெலன், அது உன்னதமானவருடைய (தேவனுடைய) பலம் (Power) என்று வேதம் கூறுகிறது. (லூக். 1:35; 24:19; அப் 1:8; 2:33; 10:38)

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், பிதாவாகிய தேவனாகவும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவாகவும் கிறிஸ்து பரலோகம் சென்ற பிறகு, பரிசுத்த ஆவியானவராகவும் கடவுள் கிரியை செய்துவருகிறாரென்று

அநேக கிறிஸ்தவர்கள் நம்பி வருகிறார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்து தேவனுடைய தூதனாக, ஊழியக்காரராக, தேவனுடைய வார்த்தையாகப் பணியாற்றி வந்தாரென்பதை முன்னமே பார்த்தோம். பரிசுத்த ஆவியும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தது என்பதைக் குறித்துப் பார்ப்போம். கர்த்தர் தம்முடைய ஆவியை சிம்சோன்மீது இறங்கப் பண்ணினதினால், அவன் பலங்கொண்டு ஒரு சிங்கத்தை, ஒரு ஆட்டிக்குட்டியைக் கிழித்துப் போடுகிறது போலக் கிழித்துப் போட்டான். மேலும், கர்த்தருடைய ஆவி அவன் மீது இறங்கினதினால், அஸ்கலோன் என்னும் ஊரில் 30 பேரைக் கொன்று போட்டான். மேலும், அவன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கின தினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் அறுந்துபோயிற்று. ஒரு கழுதையின் பச்சைத்தாடை எலும்பைக் கொண்டு, 1,000 பேரைக் கொன்று போட்டான். (நியா 14:6, 19;15:14,15) மேலும், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்க தரிசனம் உரைத்த தீர்க்க தரிசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தீர்க்க தரிசனம் உரைத்து, எழுதினார்கள். எனவே, பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை (Power of God) என்று தெரிகிறது.

ஆவி என்ற சொல் 713 முறை வேதத்தில் இடம் பெறுகிறது. ஆவி, ஆவியானவர் என்ற வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் “Ruach” என்னும் எபிரேய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு ‘காற்று’ ‘ஆவி’ என்று பொருள். மேலும், இந்த வார்த்தை கீழ்க்கண்ட வாறும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

| எபிரேய பைபிள் | ஆங்கில பைபிள் | தமிழ் பைபிள் | பழைய ஏற்பாட்டில் வரும் மொத்த இடங்கள் |
|---|---|---|---|
| RUACH | BLAST | சுவாசம் | யாத் 15:8 (4 தடவை) |
| RUACH | BREATH | சுவாசம் | ஆதி 6:17;7:15(28தடவை) |
| RUACH | MIND | மனம் | ஆதி 26:35 (6 தடவை) |
| RUACH | SMELL | முகர்தல் | ஆதி 8:21 (8 தடவை) |
| RUACH | WIND | காற்று | ஆதி 8:1 (91 தடவை) |



புதிய ஏற்பாட்டில் ஆவி, ஆவியானவர் என்ற வார்த்தைகள் PNEUMA என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இதற்கும் காற்று, ஆவி என்றுதான் பொருள். மேலும், இந்த வார்த்தை கீழ்க்கண்டவாறு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

| கிரேக்க பைபிள் | ஆங்கில பைபிள் | தமிழ் பைபிள் | வசனம் |
|---|---|---|---|
| PNEUMA | LIFE | ஆவி | வெளி. 13:15 |
| PNEUMA | WIND | காற்று | யோவா. 3:8 |
| PNEUMA | SPIRITUAL | ஆவி | I கொரி. 14:12 |

RUACH, PNEUMA என்ற இரு வார்த்தைகளும் அஃறினையும் ஒன்றன் பாலுமாகும். (ஆதாரம் : A Critical Lexicon An Concordance To English and Greek New Testament By Ethelbert - W - Bullinger (Page : 728). The-ology of The New Testament By Rudolf Bultmann (Page 153). மூல பைபிளிலிருந்து பார்க்கும் பொழுது ஆவி, ஆவியானவர் என்ற பதங்களுக்கு ஒரே வார்த்தை இருப்பது தெரிய வருகிறது. ஆவி என்று அஃறினையில் மட்டும் மொழி பெயர்த்திருந்தால் இந்த குழப்பம் வந்திருக்காது. தமிழ் வேதாகமத்தில் ஆவியானவர் என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டு, அநேகர் பரிசுத்த ஆவியை ஆள் தத்துவமுடைய தேவனாகக் கருதுகிறார்கள். “ஆவியானவர்” என்பதற்குப் பதிலாக ஆவி என்று தமிழ் வேதாகமத்திலே சரியாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கு மேயானால், இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்காது. உதாரணமாக, யோவான் 14:17ல் Spirit of Truth என்பதற்கு சத்திய ஆவியானவர் என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதே பதம்(Spirit of Truth) I யோவா 4:6ல் வரும்போது, சத்திய ஆவியானவர் என்பதற்குப் பதிலாக, மொழி பெயர்ப்பாளர்கள் சத்திய ஆவி என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஏனெனில், I யோவா. 4:6ல் வரும்போது, சத்திய ஆவியானவர் என்பதற்குப் பதிலாக, மொழி பெயர்ப்பாளர்கள் சத்திய ஆவி என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஏனெனில், I யோவா 4:6ல் Spirit of Error என்ற ஒரு பதம் வருகிறது. Spirit of Truth என்பதை சத்திய ஆவியானவர் என்று மொழிபெயர்த்தால் Spirit of Error என்பதை வஞ்சக

ஆவியானவர் என்று மொழி பெயர்க்க வேண்டும். வஞ்சக ஆவியானவர் என்று மொழி பெயர்த்திருந்தால், அது இன்னொரு சாத்தான் இருப்பதாகப் பொருளாகிவிடும். சாத்தான் ஒருவனே என்ற காரணத்தினால், அந்த இடத்தில் வஞ்சக ஆவியானவர் என்று மொழி பெயர்க்காமல், வஞ்சக ஆவி என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். Spirit of Error என்ற பதத்தை வஞ்சக ஆவி என்றால், Spirit of Truth என்ற பதத்தை சத்திய ஆவி என்றே மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஆகிவிட்டது. ஆகையால், யோவான் 14:17ல் Spirit of Triuth என்பதை சத்திய ஆவி என்றே மொழி பெயர்த்திருக்க வேண்டும். மேலும், ஆவியானவர் என்று இருக்கிற எல்லா இடங்களிலும் 'ஆவி' என்று சரியாக மொழி பெயர்த்திருந்தால், பரிசுத்த ஆவியை, ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கருத இடமிருந்திருக்காது.

யோவான் 14:16,17,26 வசனங்களில் வருகிற 'தேற்றரவாளன்' என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு, பரிசுத்த ஆவியை தேவன் என்று அநேகர் கூறுகிறார்கள். தேற்றரவாளன் (Comfortor) என்ற வார்த்தை PARAKLETOS என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இது பெயர்ச்சொல் அல்ல; Verbal Adjective ஆகும். (ஆதாரம்: An Expository Dictionary of Biblical Words By W.E.. Vine, M.A.,). இது துணைபுரியும் அல்லது பலப்படுத்தும் (help/ encouragement, Assistance, Strengthening) என்ற அர்த்தத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது. இது தேற்றும் ஒன்றாகயிருப்பதால், ஆள் தத்துவமுடைய தேவனைக் குறிப்பிடுகிறது என்று கூறமுடியாது. ஏனெனில் உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும் (சங். 23:4) என்பதிலிருந்து கோலும், தடியும் ஒரு ஆளென்று கூறமுடியுமா? மேலும், உணர்த்துவார், போதிப்பார் என்ற வார்த்தைகளை வைத்துக் கொண்டு, பரிசுத்த ஆவியை ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கூறுகிறார்கள். அப்படியானால், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்ப்பது ஒன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று நமதாண்டவர் கூறியிருக்கிறாரே. (யோவா.12:48) ஆளல்லாத வார்த்தை



எப்படி நியாயந்தீர்க்கும்? மேலும், 'துரு' மனித மாம்சத்தைத் தின்னுமாமே! 'கூலி' கூக்குரலிடுமாமே! (யாக். 5:3,4) இதெல்லாம் எப்படி? 'பூமி' தன் வாயைத் திறந்து தாத்தானையும், அவன் கூட்டத்தாரையும் விழுங்கிப் போட்டதாமே. (எண். 16:30-32) இதெல்லாம் ஆளல்லாத பொருள், ஒரு செயலைச் செய்வதாக அலங்காரமாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறே பரிசுத்த ஆவியும் போதிப்பார், கண்டித்து உணர்த்துவார் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் I யோவா. 2:27ல், யாரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை. நீங்கள் பெற்ற அபிஷேகமே போதிக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பரிசுத்த ஆவியினால் நாம் அபிஷேகம் பெறும்போது, நாம் தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியால் போதிக்கப்படுகிறோம், உணர்த்தப்படுகிறோம். ஆகையால், 'தேற்றரவாளன்' என்ற வார்த்தையைக் கொண்டு, பரிசுத்த ஆவியை ஆள் தத்துவமுள்ள தேவனென்று கூறுமுடியாது.

மேலும், அந்த 'தேற்றரவாளனை' அவர் என்று கூறுவதால், பரிசுத்த ஆவியை ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கூறுகிறார்கள். (யோவா. 16:13,14) ஆனால், இந்த 'அவர்' என்ற வார்த்தை, எந்த கிரேக்க பதத்தின் தமிழாக்கம் என்பதை ஆராய்ந்தால், அதன் உண்மைப்பொருளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். 'அவர்' என்பது 'EKINOS' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 'EKINOS' என்ற வார்த்தையை 'அவர்' என்று மட்டுமல்ல; 'அது' 'அவள்' என்றும் கூட வேதத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் கீழே கொடுக்கப் பட்டதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| கிரேக்க பைபிள் | ஆங்கில பைபிள் | தமிழ் பைபிள் | வசனம் |
|---|---|---|---|
| EKINOS | He | அவர் | யோவான் 16:13,14 |
| EKINOS | That | அந்த | லூக் 10:12 |
| EKINOS | She | அவள் | யோவான் 20:15 |
| EKINOS | It | அதைக் குறித்து | I யோவா 5:16 |
| EKINOS | Same | அந்த நாள் | யோவான் 5:9 |
| EKINOS | Those | அந்தநாட்களில் | லூக் 20:1 |

ஆகையால் ‘அவர்’ என்ற வார்த்தையை ‘அது’ என்றும், மொழி பெயர்த்திருக்கலாம். ஆனால் இது தேவனிடத்திலிருந்து வரும் வல்லமையாகையால், உயர்திணையில் ஆண்பாலாகச் சொல்லப் பட்டிருக்கிறது. தமிழ் இலக்கியத்தில் ‘ஆதவன் உதித்தான்’ என்று சூரியன் உதித்ததைக் கூறுகிறோம். ஆகையால், சூரியன் ஆளென்று கூற முடியுமா? முடியாது. அதைப் போலவே பரிசுத்த ஆவியையும், ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கூற முடியாது.

மேலும், பரிசுத்த ஆவிக்கு ‘தம்முடைய சுயமாய்’ (Himself) என்ற பதம் போடப்பட்டிருப்பதால், தம்முடைய சுயமாய்’ (Himself) என்ற வார்த்தை அஃறிணைப் பொருளுக்கு வராமல், உயர்திணை ஆண்பாலுக்கு மட்டுமே வருவதால், பரிசுத்த ஆவியை, ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கூறுகிறார்கள். (யோவான் 16:13) ஆனால், இந்த ‘தம்முடைய சுயமாய்’ என்ற வார்த்தை, எந்த கிரேக்க பதத்தின் தமிழாக்கம் என்பதை ஆராய்ந்தால் அதன் உண்மைப் பொருளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். ‘தம்முடைய சுயமாய்’ என்பது `HEAUTOU’ என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்த ‘HEAUTOU’ என்ற வார்த்தை ‘தம்முடைய சுயமாய்’ (Himself) என்ற உயர்திணை ஆண்பாலுக்கு மட்டுமல்ல, பெண்பாலுக்கும் (Herself) அஃறிணைக்கும் (Itself) கூட வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கீழே கொடுக்கப்பட்டவைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| கிரேக்க பைபிள் | தமிழ் பைபிள் | ஆங்கில பைபிள் | வசனம் |
|---|---|---|---|
| HEAUTOU | தம்முடைய சுயமாய் | Himself | யோவான் 16:13 |
| HEAUTOU | தன் தலையை | Herhead | I கொரி 11:5 |
| HEAUTOU | தன்னைத் தீர்க்கதரிசியென்று | Herself | வெளி 2:20 |
| HEAUTOU | தற்பொழிவை | Her own | I கொரி 13:5 |
| HEAUTOU | நாமே நம்மை | Ourselves | I கொரி 11:31 |
| HEAUTOU | தங்களை | Themselves | I கொரி 16:15 |
| HEAUTOU | உங்களுக்குள்ளே | Yourselves | லூக் 22:17 |
| HEAUTOU | உங்களுக்குள்ளே | In You | யோவா 6:53 |
| HEAUTOU | தன்னுடைய | Itself | மத் 6:34 |
| HEAUTOU | தானாய் | Itself | யோவான் 15:4 |
| HEAUTOU | தனக்கு | Itself | எபே 4:16 |
| HEAUTOU | தனக்குத்தானே | Itself | மாற் 3:24,25 |



ஆகையால், ‘தம்முடைய சுயமாய்’ என்ற வார்த்தையை உயர்திணை ஆண்பாலில் (Himself) மொழி பெயர்க்காமல், அஃறிணையில் (Itself) மொழி பெயர்க்கப்பட்டிருக்கவேண்டும். இது தேவனிடமிருந்து வருகிற வல்லமையாக இருப்பதாக, அதை உயர்திணை ஆண்பாலில் கூறியிருக்கிறார்கள்.

இதுவரை நாம் பரிசுத்த ஆவி, தேவனுடைய வல்லமை என்பதற்கான ஆதாரங்களைப் பார்த்தோம். இனிமேல், பரிசுத்த ஆவி ஆள் தத்துவம் உள்ள தேவனல்ல என்பதற்கான கீழே கொடுக்கப்பட்டுள்ள ரூபகாரங்களைத் தியானிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## பரிசுத்த ஆவி ஆள் தத்துவமுள்ள தேவனல்ல என்பதற்கு ரூபகாரங்கள்

1. பிதாவுக்கு நாமம் – யேகோவா யாத். 6:2,3
   குமாரனுக்கு நாமம் – இயேசு கிறிஸ்து.
   பரிசுத்த ஆவிக்கு நாமம் என்ன?
   பரிசுத்த ஆவி, ஒரு தேவனாக இருந்திருப்பாரேயானால், அவருக்கு ஒரு நாமம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமே! எனவே, பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய வல்லமையே அல்லாமல் ஒரு தேவனல்ல.
2. வேதத்தில் பிதாவாகிய தேவனுக்கும், அவருடைய குமாரனுக்கும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பரிசுத்த ஆவிக்கு ஸ்துதியும், ஸ்தோத்திரமும் சொல்லப்படவில்லை. ஏன்? பரிசுத்த ஆவி ஒரு தேவனாக இருந்தால், அவருக்கும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் சொல்லப்பட்டிருக்க வேண்டுமே!
3. பிதாவுக்கும், குமாரனுக்கும் சிங்காசனம் இருந்ததாகப் பார்க்கிறோம். (வெளி. 22:1) அதுமட்டுமல்லாமல், வெளி. 4:6ல், நான்கு ஜீவன்களுக்கு சிங்காசனமும், வெளி. 4:4ல் 24 மூப்பர்களுக்குச் சிங்காசனமும், மத். 19:28ல் பரிசுத்தவான்களுக்கு சிங்காசனமும் இருந்ததாகப் பார்க்கிறோம். ஆனால், பரிசுத்த ஆவி ஒரு தேவனாக இருந்திருந்தால், அவருக்கு சிங்காசனம் சொல்லப்பட்டிருக்க வேண்டுமே! ஏன் சொல்லப்படவில்லை?

4. தேவன் தம்மைப் பற்றி பேசியிருக்கிறார் ஏசா. 43, 44 ஆதிகாரங்கள். கிறிஸ்து தம்மைப் பற்றி பேசி இருக்கிறார் யோவான் 10ம் அதிகாரம். பரிசுத்த ஆவியும் ஒரு ஆளாக இருந்திருந்தால், தம்மைப் பற்றி பேசி இருக்கவேண்டுமே. ஆனால், பேசினதாக வேதத்தில் இல்லையே! ஏன்?

5. பரிசுத்த ஆவி, ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாக இருந்தால், எப்படி ஒரு அஃறிணைப் பொருளுக்கு அதாவது, அபிஷேக எண்ணை அல்லது தைலத்திற்கும் (சங். 45:7; 133:2) முத்திரைக்கும் (எபே.4:30), அச்சாரத்திற்கும் (II கொரி.1:22;5:5), ஜீவத் தண்ணீருக்கும் (யோவா 7:38, 39; யோவா 4:14), பனிக்கும் (சங் 133:3), சத்திய ஆவிக்கும் (I யோவா 4:6) அக்கினிக்கும் (அப் 2:3), பொக்கிஷத்திற்கும் (II கொரி 4:7), தேவனுடைய விரலுக்கும் (லூக். 11:20) ஒப்பிட முடியும்?

6. பரிசுத்த ஆவி ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாயிருந்தால், எப்படி அளக்க முடியும்? தேவன் பரிசுத்த ஆவியைக் கிறிஸ்துவுக்கு அளவில்லாமல் கொடுத்து இருக்கிறார். (யோவா.3:34) மற்றவர்களுக்கு அளவோடு கொடுத்திருக்கிறார். (ரோம. 12:3) மேலும், பரிசுத்த ஆவி ஆளாயிருந்தால், ஒருவரிடமுள்ள ஆவியை 70 பேருக்குப் பகிர்ந்து கொடுக்க முடியுமா? (எண்.11:25)

7. பரிசுத்த ஆவி, ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாயிருந்தால், எப்படி அவித்துப் போடமுடியும்? ஊற்றப்பட முடியும்? (I தெச. 5:19; யோயேல் 2:28,29; அப். 10:45,46)

8. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரும் தேவர்கள் என்றால், சமமானவர்கள் என்றால், தேவன் (பிதா), ஒரு தேவனை (இயேசு கிறிஸ்துவை) இன்னொரு தேவனால் (பரிசுத்த ஆவி) ஏன் அபிஷேகம் பண்ண வேண்டும்? (அப். 10:38) பரிசுத்த ஆவி, ஆள் தத்துவமுள்ள தேவனாக இராமல், தேவனுடைய வல்லமையாக இருப்பதால் தான் பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார்.



9. அப்போஸ்தலர்கள் நிருபங்களின் துவக்கத்தில் சபைகளுக்கு ஆசீர்வாதம் கூறும் பொழுது பிதா, குமாரன் பெயர்களால் மட்டுமே கூறுகிறார்கள். பரிசுத்த ஆவியாகிய தேவன் (?) பெயரால் கூறுவதில்லையே, ஏன்?

10. வேதாகமத்தின் முக்கிய நோக்கமே, ஒவ்வொரு மனிதனும் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதுதான். இதற்காகத் தான் பிதாவாகிய தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனென்றும் பாராமல், இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி, பலி கொடுத்தார், நம்முடைய விசுவாசம், ஊழியம், ஓட்டம் எல்லாமே அந்த நித்திய ஜீவனுக்காகத்தான், அந்த நித்திய ஜீவனைப் பெற ஒன்றான மெய் தேவனையும் (யேகோவா) அவரால் அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவையும் அறிந்தால் போதுமென்று வேதம் கூறுகிறது. (யோவா. 17:3) பரிசுத்த ஆவி, ஆள் தத்துவமுள்ள தேவனாயிருந்திருந்தால் அவரையும் அறிந்து கொள்ள வேண்டுமென்று வேதம் கூறியிருக்குமே.

மேலும், வேதத்தில் பல்வேறு இடங்களில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைப் பற்றி சொல்லப்பட்டிருந்தாலும் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு தேவனைப் பற்றிய அறிவை ஒட்டு மொத்தமாக அறிவிக்கும்பொழுது, வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் அநேகர் இருந்தாலும், பிதாவாகிய தேவன் ஒருவரே தேவனென்றும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மட்டுமே கர்த்தரென்றும், தெளிவுபடுத்துகிறார். (I கொரி. 8:5-7) பரிசுத்த ஆவி, ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாயிருந்தால், இந்த இடத்தில் பரிசுத்த ஆவியைப் பற்றிக் கூறியிருக்கவேண்டுமே. ஆனால், கூறப்படவில்லையே ஏன்?

மேலும், இயேசு கிறிஸ்து யாரை விசுவாசிக்க வேண்டுமென்று தம்முடைய சீஷர்களுக்கு போதிக்கும் பொழுது, பிதாவாகிய தேவனையும், தன்னையும் மட்டுமே விசுவாசிக்க வேண்டுமென்று கூறுகிறார். (யோவா. 14:1) பரிசுத்த ஆவி ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாயிருந்திருந்தால்,

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கூறியிருந்திருப்பாரே. மேலும் பரிசுத்த ஆவியை விசுவாசிக்க வேண்டுமென்று வேதத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

இவ்விதமாகவே, கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களிளெல்லாம் பரிசுத்த ஆவியாகிய தேவனைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஏன்?

| | | |
|---|---|---|
| I தீமோ.2:5,6 | II யோவான் 9 வசனம் | I யோவான் 1:3 |
| யோவான் 8:17,18 | வெளி 5:13 | வெளி. 21:22,23 |
| யோவான் 1:18 | நீதி 30:4 | யோவான் 14:23 |
| I யோவான் 2,22 | அப். 7:55 | |

ஆகையால், பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமையென்பது ரூபகாரமாகிறது. இதுவரை நாம் பரிசுத்த ஆவி ஆள் தத்துவமுள்ள தேவனல்ல, அது தேவனுடைய வல்லமையே என்பதற்கான ரூபகாரங்களை தியானித்தோம். இனி திரித்துவத்திற்கு (Trinity) ஆதாரமாகச் சொல்லப்படும் வசனங்களைத் தியானிக்கலாம்.

**1. I யோவான் 5;7:-** "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் பூலோகத்திலே." இந்த வசனம் King James Version-ல் அடைப்புக் குறிக்குள் போடப்பட்டுள்ளது. ஏனெனில், அது மூலப்பிரதிகளில் காணப்படவில்லை. ஆகையால்தான் திருத்திய மொழிபெயர்ப்புகளில் மட்டுமல்ல, நவீன மொழி பெயர்ப்புகளாகிய EMPHATIC DIAGLOTT, YOUNG'S BIBLE TRANSLATION, THE AMERICAN BIBLE UNION TRANSLATION, THE IMPROVED VERSION etc., இவைகளிலிருந்தும் இந்த வசனம் முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டது. ரோமன் கத்தோலிக்க திருத்திய பதிப்பிலிருந்தும் இந்த வசனம் நீக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் மகா பூர்வீகப் பிரதிகளாகிய சிநெயாடிக் (Sinaitic), வாட்டிகன் எண் 1209 (Vatican No. 1209) ஆகியவற்றில் இந்த வசனம் கிடையாது. ஏராஸ்மஸ் (Erasmus) என்பவர் நமது மூன்றாவது பதிப்பில் கி.பி.1523-இல் இந்த வசனத்தைப் புதிய ஏற்பாட்டில் புகுத்தினார். (ஆதாரம்:EMPHATIC DIAGLOTT BY BENJAMIN WILSON ON PAGE 4)



**2.மத்தேயு 28:19:** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள், இந்த வசனத்தில் 'பரிசுத்த ஆவியானவர்' என்று கூறாமல், 'பரிசுத்த ஆவியின்' என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனிடம் உடன்படிக்கை பண்ணி, பரிசுத்த ஆவியைப் பெறுதல் என்று பொருள். (I பேது. 3.21; அப். 2:38) ஆகையால், இந்த வசனத்தை வைத்துக் கொண்டு, தேவன் மூன்று ஆட்களடங்கியவர் (திரியேக தேவன்) எனக்கூற முடியாது. மேலும், மூன்று ஆட்களடங்கிய தேவனாக இருந்தால், 'நாமத்திலே' என்பதற்கு பதிலாக "நாமங்களிலே" என்றிருக்க வேண்டும். மேலும் ஒன்றான மெய்தேவன் என்று தான் வேதம் கூறுகிறதே தவிர, திரியேக தேவன் என்று வேதம் எந்த இடத்திலும் கூறவில்லை.

**3. II கொரிந்தியர் 13:14**: இந்த வசனத்தில் 'பரிசுத்த ஆவி' என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறதே தவிர, 'பரிசுத்த ஆவியானவர்' என்று கூறப்படவில்லை. மேலும், அந்த வசனம் திரித்துவத்தைக் காண்பிப்பதற்காகச் சொல்லப்படாமல் உங்களிடம் கிருபையும், அன்பும், சகோதர ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக என்ற பொருளிலே தான் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியை பெற்ற அனைவரும் ஒரே சபையாக, கிறிஸ்துவின் ஒரே சரீரமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும், கிறிஸ்துவின் அங்கங்களாக ஒரே சரீரமாக ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமென்று பவுல் அப்போஸ்தலன் ஆசீர்வாதம் கூறுகிறார்.

4. **எபேசியர் 4:30:** "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்."

இதில் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் என்று சொல்லப்பட்டிருப்பதனால், பரிசுத்த ஆவியை ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாகக் கூறுகிறார்கள். ஆனால், அப்படியல்ல, பரிசுத்த ஆவி, தேவனுடைய வல்லமை மட்டுமல்ல; தேவனுடைய சிந்தை, எண்ணம் என்ற பொருளிலும் கூறப்பட்டிருக்கிறது. தன்னுடைய சுயசித்தத்தைவிட்டு விட்டு,

தேவனோடு உடன்படிக்கை பண்ணினவர்கள், பரிசுத்த ஆவியைப் பெறுகிறார்கள். இதன் மூலமாக மாம்ச சிந்தை நீக்கப்பட்டு, தெய்வீக சிந்தை அல்லது எண்ணம் கொடுக்கப்படுகிறது. இதுதான் தேவனுடைய சிந்தை என்றும், கிறிஸ்துவின் சிந்தை என்றும் வேதம் கூறுகிறது. இவ்வாறு தெய்வீக சிந்தையைப் பெற்ற இவர்கள், மாம்ச சிந்தைக்கு அடிமையாகி அதற்கேற்ற கிரியைகளைச் செய்யும் பொழுது, தெய்வீக சிந்தையை, அதாவது, பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறார்கள். ஆகையால் பரிசுத்த ஆவி ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனைக் குறிக்காமல், தெய்வீக சிந்தையைக் குறிக்கிறது.

பரிசுத்த ஆவியை ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனாக எடுத்து கொண்டோமானால், அதனால் ஏற்படும் விபரீதத்தைப் பாருங்கள், லூக். 1:35ல் தேவதூதன் கன்னிமரியாளிடம், 'பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்' என்று கூறுகிறான். இதில் பரிசுத்த ஆவியை ஆள் தத்துவமுள்ள தேவனாக எடுத்துக் கொண்டோமானால், பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கும், கன்னிமரியாளுக்கும் இயேசு கிறிஸ்து பிறந்ததாகிவிடும். இப்படிப் பட்ட விபரீதமான எண்ணம் ஏற்படாத வகையில் தான் வேதம் பரிசுத்த ஆவியை உன்னதமானவருடைய பலம் **(POWER)** என்று திட்டமும் தெளிவுமாக இந்த இடத்தில் விளக்குவதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை வேதத்தை ஆராய்ந்த வரையில், யேகோவா என்னும் நாமமுள்ள ஒன்றான மெய்தேவன் ஒருவரே தேவன் என்றும், இயேசு கிறிஸ்து அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரே பேரான குமாரனென்றும், பரிசுத்த ஆவி தேவனிடத்திலிருந்து வரும் பெலன், வல்லமை என்றும் அறிந்து கொண்டோம்.

ஆகையால், நம்முடைய பாரம்பரிய கொள்கைகளை விட்டுவிட்டு, வேதத்தின் போதனைகளை ஏற்றுக்கொண்டு, நமது ஓட்டத்தில் தொடர்ந்து ஓடுவோமாக ஏனெனில், சத்தியம் நம்மை விடுதலையாக்கும். தேவனுடைய வசனமே சத்தியம். (யோவான் 8:32;17;17).

**********



# 15. பரிசுத்த ஆவியும், அதன் கிரியைகளும்

சத்திய வேதமாகிய பைபிள் நூலில் பரிசுத்த ஆவியைக் குறித்தும் அதனுடைய கிரியைகளைக் குறித்தும், பல இடங்களில் வாசித்த போதிலும், சில தப்பறையான உபதேசத்தாலும் சில குழப்பம் நிறைந்த சங்கத்தாருடைய தவறான மார்க்கங்களாலும், கிறிஸ்தவ மக்கள் கலக்கமுற்று இருக்கின்றனர்.

மேலும், அநேகர் பரிசுத்த ஆவியைப் பெறாமலும், அதனால் உண்டாகும் தெய்வீக அனுபவங்களை உணராமலுமிருக்கிறார்கள். ஆதலால் பரிசுத்தாவி என்னவென்றும், அது எப்படிப்பட்டவர்களுக்கு அருளப்படுமென்றும், அதைப் பெற்றவர்களின் வாழ்க்கை அனுபவம் எப்படி இருக்க வேண்டுமென்றும், அதன் கிரியைகள் எப்படிப்பட்ட தென்றும் விளக்கிக் காட்டி கிறிஸ்தவர்களில் அநேகர் பரிசுத்தாவியைப் பெற்று அதனால் நடத்தப்பட்டு, அதன் மூலம் ஏற்படும் தெய்வீக மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளவே இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

### பரிசுத்த ஆவி என்றால் என்ன?

நாம் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கும்போது பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் தேவ ஆவியென்றும், கர்த்தருடைய ஆவியென்றும் அதைத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவனிடமிருந்து நேராய்ப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் வாசிக்கிறோம்.

ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுயை பிள்ளைகள் தேவ ஆவியை மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே பெற்றிருக்கிறார்கள். அதையே பரிசுத்தாவியென்று கூறப்பட்டிருக்கிறது; பரிசுத்தாவியைப் பற்றிய எல்லா வசனங்களையும் நாம் கவனித்து வாசித்தால், மகா உன்னதமான தேவனாகிய யேகோவா பரிசுத்தராயிருக்கிறார் என்றும், அவரிடத்திலிருந்து மனிதருடைய கண்களுக்குக் காணப்படாமல் வருகிற சக்தி அல்லது உன்னத பலனைத் தான் பரிசுத்த ஆவியென்றும் அறிந்து கொள்ளுவோம். இதைக் குறித்து வேத ஆதாரங்களோடு கவனிப்போம்.

தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும், சிருஷ்டிக்கத் துவக்கிய காலத்தில் (ஆதி. 1:2) தேவனின் ஆவி தண்ணீர் மேல் அசைவாடிக் கொண்டிருந்ததாக வாசிக்கிறோம்.

அதாவது தேவனுடைய சக்தி (பெலன்) ஜலத்தின் மேல் கிரியைச் செய்ய, ஆரம்பித்ததென அறிந்து கொள்ளுகிறோம். தேவன் நித்தியராயிருக்கிறபடியால், அவருடைய பரிசுத்த ஆவியும், அவரிலேயே நித்தியமாயிருக்கிறது.

ஆதலால் நம்முடைய அனாதி தேவன் தமது சிருஷ்டிப்பின் வேலையிலே தமது பெலனாகிய பரிசுத்த ஆவியைக் கொண்டு கிரியை செய்திருக்கிறார்.

இக்காரணத்தால் "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் (பரிசுத்தாவியாகிய தம் பலத்தால்) அவர்களின் சர்வ சேனைகளும் உண்டாக்கப்பட்டன" என்றும் "தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்" என்றும் வாசிக்கிறோம். (சங். 33:6; யோபு 26:13)

தேவன் பரலோகத்திலே இருந்தாலும், அவருடைய பரிசுத்த ஆவியாகிய உன்னத பலன் எங்கும் சென்று கிரியை செய்யக் கூடியதாயிருப்பதால் "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய ஆவியை அனுப்ப அவைகள் படைக்கப்படும்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. (சங். 139:7-8)

பழைய ஏற்பாட்டின், காலத்தில் அநேகர் பராக்கிரமமான வீரச் செயல்களைச் செய்ய தேவனால் ஆவியைப் பெற்றார்கள். கிதியோன், சிம்சோன், தாவீது போன்றவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றதினாலே தான் வல்லமையான கிரியைகளைச் செய்தார்கள். (நியா.6:34; 13:24,25; 14:6,19; 15:14; 1சாமு. 16:13

இஸ்ரேல் ஜனங்களை, விசாரித்து (பராமரித்து) பலமான ஊழியஞ்செய்ய மோசேயின் மேலிருந்த ஆவியை மற்ற எழுபது பேருக்கும் பகிர்ந்து கொடுத்தார். (எண். 11:17,24,26)



ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளை ஜாக்கிரதையாகச் செய்ய பெசலேயேல் என்பவருக்கு "ஞானத்தையும், புத்தி அறிவையும் கொடுக்க தேவ ஆவியாகிய உன்னத பெலன் கொடுக்கப்பட்டது." (யாத். 35:33)

இவ்விதமாகவே வருங்காலத்தில் இரட்சிப்பின் சம்பந்தமாய் நிறைவேறப்போகும் காரியங்களைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அறிந்து தீர்க்கதரிசனம் கூறிய எல்லா தீர்க்க தரிசிகளும் வேதாகமத்தை எழுதிய தேவ மனிதர்கள் யாவரும் உன்னத பலனாகிய பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டும் ஏவப்பட்டும் பேசினார்கள்.

"கர்த்தருடைய ஆவி என்னைக் கொண்டு பேசினார், அவர் வசனம் என்நாவில் இருந்தது" என்றும்; வேதவாக்கியம் ஒவ்வொன்றும் தேவ ஆவியின் ஏவுதலால் அருளப்பட்டிருக்கிறது என்றும்; தீர்க்கத் தரிசனங்களை மனுஷர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவர்களாய் தேவன் வெளிப்படுத்தினதைப் பேசினார்கள் என்றும் வாசிக்கிறோம். 2 சாமு 23:2; 2 தீமோ 3:16; 2பேது 1:20,21

## இயேசு கிறிஸ்துவுக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து, முன்னதாகவே தீர்க்கதரிசனம் கூறிய அநேக தீர்க்கதரிசிகள், அவருக்கு அளிக்கப்படும் தேவ ஆவியாகிய உன்னத பெலனைக் குறித்துப் பேசியிருக்கிறார்கள்; "இதோ நான் ஆதரிக்கிற என் தாசன்" என்றும், "ஆவியை (பரிசுத்தாவியை) அவர் மேல் அமரப்பண்ணினேன்" என்றும், "கர்த்தராகிய தேவனுடைய ஆவி என் மேல் இருக்கிறார்" என்றும், "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும் ஆலோசனையையும், பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும், "கர்த்தராகிய தேவனுடைய ஆவி என் மேல் இருக்கிறார்" என்றும், கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவி அவர்மேல் தங்கி இருக்கிறார்" என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஏசா. 11:2;42:1

இந்தத் தீர்க்க தரிசன வசனப்படி, இயேசு தமது முப்பதாவது வயதில் ஞானஸ்நானம் பெற்றபோது, தேவனுடைய பரிசுத்த ஆவி அவருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்விதமாய் நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும், அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே, அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்டயாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். மத். 3:16:17: அப். 10:38

மேலும் ஆவியின் சரீரத்தில் இருந்த கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் மரியாளின் கர்ப்பத்தில் பாவமில்லாமல் பிறப்பிக்கச் செய்யும் போது "பரிசுத்தாவி உன் மேல் வரும், உன்னதமானவருடைய பெலன் உன்மேல் நிழலிடும்" என்று தேவ தூதனால் அறிவிக்கப்பட்டது. லூக். 1:35

பரிசுத்தாவியின் வல்லமையால் இயேசு கன்னிமரியாளிடம் கர்ப்பதந்தரித்துப் பிறந்திருந்த போதிலும், தன்னுடைய முப்பதாவது வயதில், தேவனுடைய ஊழியத்தைச் செய்து முடிக்க பரிசுத்த ஆவியின் பலத்தைப் பெற்றார். தேவனால் அனுப்பப்பட்ட தம்முடைய குமாரனுக்கு தேவன் தம்முடைய பரிசுத்தாவியாகிய உன்னத பெலனை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் என்றும் வாசிக்கிறோம். யோவா. 3:34

**திருச்சபையாருக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி**

தீர்க்கதரிசியாகிய யோயேலின் மூலமாய் உரைக்கப்பட்டது, இதுவே, "கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனங்கள் சொல்லுவார்கள்.....என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்" என்று தேவன் உரைத்தார். (யோயேல் 2:28;29) இந்த வாக்குத்தத்தத்தில் "ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்," என்ற பகுதியும் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றவேன் என்ற பகுதியும் ஆக இரண்டு பிரிவுகள் இருப்பதாக பார்க்கிறோம். இதில் முதலாவது ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேலும் ஊற்றப்படுமென்ற வாக்குத்தத்தம் பெந்தெகோஸ்தே நாளிலிருந்து



திருச்சபையாருக்கு மாத்திரம் நிறைவேறியது. கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற வாக்குத்தத்தம், ஆயிர வருட ஆட்சியின் காலத்தில் நிறைவேறுமென்று அறிகிறோம். அதன் முதல் பகுதியாகிய திருச்சபைக்குரிய வாக்குத்தத்தத்தைத்தான் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் பின் வருமாறு கூறினார்.

"நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். அதே சமயத்தில் பாவத்தையும் நீதியையும் நியாயத் தீர்ப்பையும் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." யோவா. 14:16,26; 16:8

"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவானவரிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும் போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்." "நீங்களும் ஆதி முதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்." யோவா. 15:26.27

மேற்கூறிய வசனங்களில் பரிசுத்தாவியாகிய சத்திய ஆவியை "தேற்றரவாளனாகிய" அவர் வருவார் என்றும் அவர் வந்து போதிப்பார், நினைப்பூட்டுவார் என்றெல்லாம் கூறப்பட்டிருப்பதால், பரிசுத்தாவி ஒரு தனிப்பட்ட ஆளாகத்தானிருக்க வேண்டுமென்று அநேகர் கருதிக் கொண்டு தப்பான கொள்கையிலிருக்கிறார்கள். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க பாஷையில் சூரியனை அவன் (He) என்றும், சந்திரன், கப்பல், தேசம் முதலியவற்றை அவள் (She) என்றும் கூறுவார்கள். உதாரணம்:- இந்திய நாட்டை பாரதமாதா அல்லது பாரதத் தாய் என்று கூறுகின்றனர். பரிசுத்தாவி ஓர் ஆளாயிருந்தால் எப்பொழுதும் ஆள்தத்துவத்திலேயே

பேசப்பட்டிருக்கும். ஆனால் தமிழ் வேதாகமத்தில் அநேக இடங்களில் “பரிசுத்தாவி” என்றும் “பரிசுத்தாவியானவர்” என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவை தெளிவுபட மற்ற அநேக வேதவாக்கியங்களையும் கவனித்து ஆராயும்போது “தேற்றரவாளன்” என்று அழைக்கப்பட்டிருக்கும் பரிசுத்தாவி (சத்திய ஆவி) விசுவாசிகளாகிய தேவனுடைய பிள்ளைகளைத் தேற்றவும், பரிசுத்த வாழ்க்கையில் நடத்தவும், எல்லாச் சத்தியங்களையும் அறிந்து கொள்ளவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் சீஷர்களை நோக்கி, என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரில் இருங்கள் என்றும், நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலன் அடைந்து .......... எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றும் உரைத்தார். லூக் 24:49; அப். 1:4,5,8

## பெந்தெகொஸ்தே நாளில் திருச்சபையார் பெற்ற பரிசுத்த ஆவி

பிதாவாகிய தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்ததும், இயேசு கிறிஸ்துவினால் முன் அறிவிக்கப்பட்டிருந்ததுமான பரிசுத்த ஆவி, பெந்தெகோஸ்தே என்னும் பண்டிகை நாளில் சபையாரின் மேல் வந்ததாக வாசிக்கிறோம். அந்த நாளில் அப்போஸ்தலரும் சபையாரும் கூடி இருக்கும் போது, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று, அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு வெவ்வேறு பாஷைகளிலே பேசினார்கள். அச்சமயத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு, தீர்க்கதரிசியாகிய யோயேல் மூலமாய் தேவன் முன் உரைத்தப்படி “மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்” என்கிற வாக்கு நிறைவேறி, அதில் முதலாவது பகுதியாகிய ஊழியக்காரரும், ஊழியக்காரிகளுமாகிய திருச்சபையார் மேல் ஊற்றப்பட்டு அவர்களை பலப்படுத்தி தன் ஊழியத்தை செய்ய நடத்துகிறார் என்பதை விளக்கிவிட்டார்.



ஆதலால் பெந்தெகோஸ்தே நாள் முதற் கொண்டு, திருச்சபையின் அங்கத்தினருக்கு தனிப்பட்ட நிலையிலும் கூட்டமாயிருந்த போதும், பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டது. அப். 2:1-4,38

பரிசுத்தத ஆவியைப் பெற்ற அப்போஸ்தலர்களும் சீஷர்களும், விசேஷித்த அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். அதுவுமல்லாமல் விசேஷமான அற்புத அடையாளங்களை செய்வதும், தங்களுடைய கைகளை விசுவாசிகள் மேல் வைத்து பரிசுத்த ஆவியை பெறச் செய்வதும் அப்போஸ்தலருக்கு மாத்திரமே உரிய வரமாயிருந்தது. அப். 8:15,17; 9:17,40,41

## பரிசுத்த ஆவி யாருக்குக் கொடுக்கப்படும்

அப்போஸ்தலனாகிய பேதுருவின் பிரசங்கத்தைத் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களானார்கள். அவர் அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றார். அப்.2:38

ஆதலால் தேவனுடைய சுவிசேஷத்தை கேட்டு விசுவாசிக்கிறவர்கள், தங்களுடைய எல்லாப் பாவங்களின் நிமித்தம் உத்தமமாய் மனஸ்தாபப்பட்டு, அவைகளுக்காக இயேசுவின் மூலம் மன்னிப்புப் பெற்று தேவனோடு ஞானஸ்நானத்தின் மூலமாய், பலியின் உடன்படிக்கைக்கு உட்பட்டு பரிசுத்த ஜீவியத்தில் நடந்து திருச்சபையில் அங்கத்தினராக வருகிறவர்களுக்கு உன்னத பலனாகிய பரிசுத்தாவி கொடுக்கப்படும். தேவனுடைய பிள்ளைகள் தகுதியுள்ள நிலையிலிருந்து கொண்டு பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கும் போது “பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா” என்று கிறிஸ்து கூறுகிறார். இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய்த் தான் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும். இவ்விதமாய் அவருக்கு சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானது (பரிசுத்த ஆவியானது) நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாகவும், “அவர்கள் மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய

பரிசுத்த ஆவியை முத்திரையாகவும் பெற்றிருக்கிறார்கள்." பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் அதை இழந்து போகாதபடிக்கு வெகு ஜாக்கிரதையாக பரிசுத்த ஜீவியத்திலே இருந்து கொண்டு அதைக் காத்துக்கொள்ள வேண்டும். எபே. 1:14; 4:30

## திருச்சபையாருக்கு பரிசுத்த ஆவியின் வரங்கள்

தேவனுடைய உன்னத பெலன் பரிசுத்த ஆவியென்றும், சத்திய ஆவியென்றும் அழைக்கப்படுகிறது. ஆதலால் பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் பரிசுத்த ஜீவியத்தில் நிலைத்திருந்து தேவனுடைய எல்லா திவ்விய சத்தியங்களையும் அறிந்துக் கொண்டவர்களாயுமிருக்க வேண்டும். யோவா. 16:13; 17:17

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களுக்கு பல வரங்கள் அளிக்கப்பட்டன.

"என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளை பேசுவார்கள். சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்தாவின் வரங்களினாலும், தேவன் தாமே இரட்சிப்பின் சத்தியத்தை குறித்து சாட்சி பகர்ந்தார் என்று அறிகிறோம். அப்படியே திருச்சபையிலே, ஆவியினுடைய அனுக்கிரகம் அவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும் வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப்



பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளை எல்லாம் அந்த ஒரே ஆவியைக் கொண்டு நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். மாற். 16:17.18; எபி:2:4; 1 கொரி. 12:7-11

## தீர்க்கதரிசன வரம்

தேவனானவர் தம்முயை சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் ஏற்படுத்தினார். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது, அந்நிய பாஷைகளைப் பேசுவதை விட தீர்க்க தரிசனம் சொல்லுகிறதையே முக்கியப்படுத்தியிருக்கிறார். ஆதலால் பரிசுத்தாவியைப் பெற்றவர்களில் தீர்க்கதரிசன வரமுடையவர்களாயிருப்பது மிகவும் முக்கியம் என்று விளங்குகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கத்தரிசிகள் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு வருங்காரியங்களை குறித்து முன்னறிவித்தார்கள். இவ்விதமாய் முன்னறிவிக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதல்களையும், அவைகளின் காலங்களையும் பரிசுத்தாவியினாலே அறிந்து விளக்கிக் கூறுவதே திருச்சபையாருக்கு அருளப்படும் தீர்க்க தரிசன வரமாகும். ( 1 கொரி. 12:28)

**உதாரணமாக :**

கிறிஸ்து கன்னிகையின் வயிற்றில் பிறப்பதைக் குறித்தும், அவர் பிறந்த போது இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் கொல்லப்பட்டதைக் குறித்தும், அவர் பிறக்கும் இடத்தைக் குறித்தும், அவருடைய மரணத்தைக் குறித்தும், உயிர்தெழுதலைக் குறித்தும், அவர் பரமேறின பிறகு பரிசுத்தாவி அருளப்பட்டதைக் குறித்தும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் முன் உரைத்தவைகளின் நிறைவேறுதல்களை அப்போஸ்தலர்கள் எடுத்துக்காட்டி விளக்கி கூறினார்கள். இதுவே புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்படும் தீர்க்கதரிசன வரமாகும். மத். 1:22,23; 2:16,4,5; அப். 8:32; 2:31; 1 பேது. 1:10-12.

## அந்நிய பாஷைகளைப் பேசும் வரம்

தேவனாகிய யேகோவா பழைய ஏற்பாட்டின் காலத்தில் தான் தெரிந்து கொண்ட இஸ்ரேல் ஜாதியாரிடம் மாத்திரம் தம்முடைய பிரமாணங்களையும் உடன்படிக்கைகளையும் எபிரேய பாஷையிலே கொடுத்திருந்தார். உபா. 7:6; சங். 147;19,20; ரோம. 3:1,2

புதிய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரேல் அல்லாத மற்ற புறஜாதியார்களையும் தேவன் தம்முடைய நாமத்துக்காக தெரிந்து கொள்ள வேண்டிய காலம் துவக்கிவிட்டப்படியால், பல பாஷைகளைப் பேசும் வரம் ஆதி திருச்சபையாருக்கு அளிக்கப்பட்டது. எபிரேய பாஷைகளைப் பேசும் கலிலேயராகிய இயேசுவின் சீஷர்கள், பெந்தெகொஸ்தே நாளில், தங்களுடைய தாய் பாஷையல்லாத வேறு பதினெட்டு அந்நிய பாஷைகளில் தெளிவாக பேசினார்கள். கேட்டவர்களும் தங்கள் தங்கள் பாஷைகளிலே தேவ மகத்துவங்களை குறித்து பேசுவதை புரிந்து கொண்டு ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். அப். 2.11,12

சில சமயங்களில் அந்நிய பாஷைகளில் பேசியதை தெளிவாக மொழிபெயர்த்து சொன்னார்கள். இதுவே அந்நிய பாஷை வரமேயல்லாமல் தங்களுக்கும், பிறருக்கும் புரியாத பாஷையில் பேசுவதாக உரக்க கூச்சலிடுவது அந்நிய பாஷையாகாது. இந்த வரமும் கூட ஆதி திருச்சபையில் புதிதாய் சேர்க்கப்பட்டு வந்த புற ஜாதியாரின் பிரயோஜனத்துக்கு கொடுக்கப்பட்டது. (1கொரி. 14:6-11)

## அற்புத சுகமளிக்கும் வரம்

இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்த காலத்தில் அநேக வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்தினார்; தம்முடைய அப்போஸ்தலருக்கும், சீஷர்களுக்கும் அவ்விதமாகவே வியாதிகளை நீக்க அதிகாரம் கொடுத்தார். இவ்விதமாகவே திருச்சபையில் சிலருக்கு "குணமாக்கும் வரங்கள்" கொடுக்கப்பட்டிருந்தது. மத். 10:1; 1 கொரி. 12:9

பரிசுத்தாவியின் பலத்தாலே அப்போஸ்தலர்கள், குருடர்களுக்கு பார்வை அளித்தார்கள். சப்பாணிகளை நடக்கவும். குஷ்டரோகிகள்



சுத்தமடையவும், மரித்தோர் உயிரடையவும் செய்தார்கள். சாதாரணமாய் உலக வைத்தியர்களாலேயே சுகபடுத்தக்கூடாத வியாதிகளை பரிசுத்தாவியின் வல்லமையில் சுகப்படுத்தினார்கள். இந்த விசேஷித்த வரமுங்கூட அப்போஸ்தலருடைய காலத்துக்குரியதாய் இருந்தது. அவர்கள் செய்தது போல யாரும் தற்காலத்தில் செய்ய முடியாது. செய்கிறதுமில்லை! ஆனால் சிலர் தற்காலங்களில் அற்புதமாய் குணமளிக்கிறார்கள் என்று விசுவாசிக்கிறவர்கள், வஞ்சக ஆவி என்னும் தலைப்பில் வரும் பாடத்தை அறிந்து கொள்ள அன்போடு கேட்டு கொள்ளுகிறோம்.

## பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்

ஆதாமின் சந்ததியார் யாவரும் பாவத்தினாலேயே ஜெனிப்பித்தவர்களாய் சுபாவபடி பாவஞ்செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். இந்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு உண்டு. ஆனால் தேவனுடைய திருவசனத்தைக் கேட்டு பரிசுத்தாவியை பெற்று சகல சத்தியத்திலும் நடத்தப்பட்டவர்கள், பாவஞ் செய்து, தேவனை தூஷித்து, சத்தியத்தையே மறுதலிக்கிறவர்களானால் பெரும் பாதகத்துக்கு உட்பட்டவர்களாகி விடுவார்கள். "எந்தப் பாவமும், எந்த தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும், ஆவியானவருக்கு (பரிசுத்தாவிக்கு) விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் பரிசுத்தாவிக்கு விரோதமாய் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்று இயேசு கிறிஸ்து கூறினார். (மத். 12:31) பரிசுத்தமான ஜீவியத்தில் நடத்தப்படவும் சகலவிதமான சத்தியங்களை அறிந்து கொள்ளவும், பரிசுத்தாவியால் நடத்தப்பட்டவர்கள் மனதாரப் பாவஞ்செய்து கெட்டுப் போவதுமுண்டு.

"ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியை பெற்றும், தேவனுடைய நல்ல வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும் மறுதலித்து போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் மனந்திரும்பு வதற்கேதுவாய் அவர்களை

மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" என்றும், "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராமல் நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடு எதிர்பார்த்தலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்; மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே! தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்" என்றும் பவுல் கூறுகிறார். (எபி.6:4-6;10:26-29) இப்படிப்பட்ட பாவத்தைத் தான் மரணத்துக்கு ஏதுவான பாவமென்றும், அதை குறித்து வேண்டுதல் செய்யக்கூடாதென்றும், யோவான் எழுதியிருக்கிறார். 1 யோவா. 5:14 மேற்காட்டியுள்ள வசனங்களை நாம் கவனிக்கும் போது பரிசுத்தாவியினால் சத்தியத்தை அறிந்தும் நடத்தப்பட்டும் பிறகு மனதார பாவங்களுக்கு உட்பட்டு மனக் கடினப்பட்டு மனந்திரும்பாமல் வரவர தேவனையும், இயேசுகிறிஸ்துவையும் இரட்சிப்புக்குரிய திட்டத்தையும் மறுதலித்து தூஷிக்கிறவர்கள் தான் இரண்டாம் மரணமாகிய நித்திய அழிவுக்குப் போகிறவர்கள். இப்படிப்பட்ட பாவத்தைத் தான் பரிசுத்தாவிக்கு விரோதமான பாவம் என்று அறிகிறோம். சங்.19:13; வெளி.21:8

## பரிசுத்த ஆவியின் கனிகள்

மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்றும், நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளை கொடுக்கும் என்றும் வாசிக்கிறோம். ஒருவன் பரிசுத்தாவியை பெற்று அதனால் நடத்தப்படுகிறவனாக இருந்தால், அவனில் காணப்படும், "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சாமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படி பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை." கலா. 5:22-25



இதை வாசிக்கும் நண்பர்களே நீங்கள் மெய்யாகவே சகலவிதமான பாவங்களையும் விட்டு மனத்திரும்பி பரிசுத்தாவியை பெற்று, பரிசுத்த ஜீவியம் செய்து தேவனுடைய சகல சத்தியங்களையும் அறிந்து உங்களையே பரிசுத்தமும் ஜீவ பலியுமாக தேவனுக்கு ஒப்புவித்து தேவனுடைய பரம இராஜியத்தில் பங்கு பெற மேலான இயேசுவின் நாமத்தில் அன்பாக அழைக்கிறோம். கலாத். 5:19-21

## வஞ்சக ஆவியும் அதன் கிரியைகளும்

சத்திய வேதமாகிய பைபிள் நூலில் வஞ்சக ஆவிகளைக் குறித்தும் அவைகளின் பலவித வஞ்சக செயல்களைக் குறித்தும் வாசித்த போதிலும் அநேகருக்கு இவ்விதமாய் வஞ்சிக்கும் ஆவிகள் எவை என்றும், அவைகள் எப்படி ஏற்பட்டனவென்றும், அவைகள் எந்தெந்த விதமாக மக்களை வஞ்சிக்கிறதென்றும் சரியாக அறிந்து கொள்ளா மலிருக்கின்றனர். ஆதலால் மக்கள் வேத ஆராய்ச்சியின் மூலம் மெய்யான சத்தியத்தை அறிந்து கொண்டு, வஞ்சக ஆவிகளின் பொல்லாத கிரியைகளுக்குத் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ளவே இச்சிறு கட்டுரை எழுதப்பட்டது.

சாதாரணமாக வஞ்சக ஆவிகள் என்று கூறப்படும் போது, பிசாசு, பழைய பாம்பு, பாம்பு, வலுசர்ப்பம் என்றழைக்கப்படும் சாத்தானையும் அவனோடிருக்கும் பொல்லாத சேனைகளையும் குறிக்கும். முதலாவதாக ஒரு முக்கியமான தேவதூதன்தான் பாவஞ்செய்து சாத்தானாக மாறினதாகக் கூறப்பட்டிருக்கிறது.

## இந்த தேவ தூதனுடைய பெயரும், முன் நிலைமையும் விழுகையும்

தேவனாகிய யேகோவா ஆவியின் சரீரத்திலிருப்பது போல, பரலோகத்துக்குரிய சிருஷ்டிகளாகிய தேவதூதர், பிரதான தூதர், கேருபீன்கள், சேராபீன்களுங்கூட ஆவியின் தேகத்திலிருக்கிறார்கள். தேவன் நம்முடைய ஆதிப்பெற்றோர்களாகிய ஆதாம் ஏவாளைத் தமது சாயலாகவும் பூரணமாகவும் சிருஷ்டித்து, ஏதேன் தோட்டத்தில் வைத்த போது, அவர்களைப் பாதுகாக்க, ஞானத்திலும், அழகிலும் மிகச் சிறந்த ஒரு முக்கிய தேவதூதனை ஏற்படுத்தியதாக அறிகிறோம்.

அவனுடைய பெயர் லூசிபர் என்று கூறப்பட்டிருக்கிறது. லூசிபர் என்பதற்கு "பிரகாசமானவன்" என்று அர்த்தம். இவனுடைய முந்திய நிலைமையையும் பிறகு சீர்கெட்டு விழுந்ததையும், தேவன் தம்முடைய தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலின் மூலமாய் எடுத்துரைத்து, அவனை தீருதேசத்து ராஜாவுக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

"மனுபுத்திரனே, நீ தீரு ராஜாவைக் குறித்து புலம்பி அவனை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், "நீ விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம், நீ ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப் பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகல விதமான இரத்தினங்களும், பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும், உன் நாத சுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப் பட்டிருந்தது. நீ காப்பாற்றுகிறததற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் (சிறந்த தேவ தூதன்). தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப் பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய், எசே. 28:12-15

இந்த பூரண நிலைமையிலிருந்த கேரூபாகிய லூசிபர் தான் தேவனுக்கு முன் எல்லா மகிமையிலும் சரிசமானமாக வேண்டுமென்று கர்வப்பட்டு கலகம் செய்தான். அவன் தன் பொல்லாத சிந்தனையுடன் கூறியதை தேவன் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாய் எடுத்துரைத்திருக்கிறார். இவனுடைய பெயரை "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி" (ஆங்கிலத்தில் "லூசிபர்") என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய



நட்சத்திங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும், நீ உன் இருதயத்தில் சொன்னாயே, ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்." ஏசா. 14:12-15

இவ்விதமாய் கேரூபாகிய லூசிபர் கர்வங் கொண்டு தேவனாகிய யேகோவாவை எதிர்த்து நிற்கிறவனானான். சாத்தானாக மாறினான். சாத்தான் என்றால் "எதிராளி" என்று அர்த்தம்.

இவன் கெட்டதுமன்றி ஏதேன் தோட்டத்தில் தன்னுடைய ஆதினத்திலிருந்த ஆதாம் ஏவாளையும் வஞ்சித்து அவர்களையும் அவர்களுடைய முழுசந்ததியாரையும் தன் இஷ்டப்படி ஆண்டு நடத்திக் கொள்ள வேண்டுமென்று, தன்னுடைய பொல்லாத வஞ்சகக் கிரியைகளை ஆரம்பித்தான். "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று தேவன் கட்டளையிட்டிருக்க, சாத்தான் சர்ப்பத்தின் மூலமாய் ஏவாளை நோக்கி "நீங்கள் இதைப் புசித்தாலும், சாவதில்லை" என்று கூறினான். ஸ்திரியானவள் பலவீனமானவளென்று சாத்தான் அறிந்து அவளை வஞ்சித்து, அவள் மூலமாய் ஆதாமையும், தேவனுடைய கட்டளையை மீறச் செய்தான். சாகவே சாவீர்கள் என்ற தேவனுடைய வார்த்தைக்கு நேர் விரோதமாய், "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று கூறியதால், கிறிஸ்து சாத்தானைப் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறானென்றும், அவன் பொய் சொல்லி, ஆதி பெற்றோருக்கு மரணத்தை விளைவித்ததால் அவன் ஆதி முதற் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்" என்றும் கூறினார். இக்காரணத்தைக் கொண்டுதான் அப்போஸ்தலராகிய பவுலும் சாத்தானை "மரணத்துக்கு அதிகாரி" என்றும் அழைத்தார். ஆதி. 2:16,17;31:1-6; யோவா. 8:44; எபி. 2:14

## சீர்கெட்ட தூதர்கள்

ஜலப்பிரளயம் பூமியின் மேல் வருவதற்கு முன்னிருந்த உலகத்தை தேவன், தேவ தூதர்களுக்கு உட்படுத்தியிருந்தார். இந்த தூதர்கள் இப்பூமண்டலத்திற்கு வருவதும் போவதுமாயிருந்த காலங்களில், மாம்ச சரீரத்தை எடுத்துக் கொண்டு மனிதரைப் போலவே, கிரியை செய்யக் கூடியவர்களாயிருந்தார்கள். வேதாகமத்தில் தேவ தூதர்களையும், தேவ புத்திரர் என்று அழைக்கப்படுகிறது. இவர்களே நோவாவின் காலத்தில் மனுஷ புத்திரிகளுடன் கலந்து கொண்டு தங்களுக்கு இஷ்டமானவர்களை மனைவிகளாக வைத்துக் கொண்டு பராக்கிரமசாலிகளான மக்களைப் பெற்றெடுத்தார்கள். இவர்களால் பூமியிலே அதிக அநீதியும், பலாத்காரமும் நிரம்பி விட்டதால் தேவன் அந்த உலகத்தை ஜலப்பிரளயத்தால் அழித்தார். எபி.2:5; யோபு 1:6; 38:4-7; ஆதி.6:1-4, 11-13

பாவம் செய்த தூதர்கள் மாம்ச சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்தில் மாறிவிட்டதால் அவர்கள் ஜலப்பிரளயத்தில் அழியவில்லை. என்றாலும் தேவன் அவர்களை விட்டு விடாமல் அவர்களுக்கு கொடுத்த சக்தியைக் குறைத்து, அவர்கள் மறுபடியும் பரலோகத்துக்கு போகக் கூடாதவர்களாகவும், பூமியிலே மாம்ச தேகத்தையும் எடுத்து வர முடியாதவர்களாகவும் அந்தகாரச் சங்கிலிகளில் கட்டி (அந்தகார சரீரமுடையவர்களாக்கி) அடைத்து வைத்திருக்கிறார். 2பேது 2:4:5; யூதா6

தமிழ் வேதாகமத்தில் இவர்கள் கட்டப்பட்டிருக்கும் இடத்தை பாதாளம் என்றும் நரகம் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இதன் கிரேக்க பதம் (டார்டரஸ் Tarterus) ஆகும். டார்டரஸ் என்றால் பரலோகத்துக்கு மிகவும் கீழான, வான மண்டலத்தையே குறிக்கும். இயேசு கிறிஸ்து, தாம் ஆவியின் சரீரத்தில் உயிர்த்தெழுந்த பிறகு இவர்களிடம் தான் போய் பிரசங்கித்தார். இவர்களே வான மண்டலத்திலிருந்து கொண்டு கிரியை செய்கிற பொல்லாத சேனைகள் என்றும், சாத்தானை ஆகாயத்து அதிகாரப் பிரபு என்றும், அவன் இந்த உலகத்தை ஆட்சி செய்து வருவதால் “இந்த உலகத்தின் தேவன்” என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் வேதம் கூறுகிறது.



இக்காரியங்களை எல்லாம் நாம் கவனித்து அறியும் போது, சாத்தானும் அவனோடு கூட இருக்கும் பொல்லாத தூதர்களும் தான் உலகத்தையே, வஞ்சித்துக் கொண்டிருக்கும் வஞ்சக ஆவிகள் என்றும் அறிகிறோம். (1 பேது. 3:18,19; எபே. 2:1,2;6:12; I யோவா.5:19)

## சாத்தான் மக்களை வஞ்சிக்கும் பல முறைகள்

கட்டளையை மீறுவதால் “சாகவே சாவீர்கள்” என்று தேவன் கூறியிருக்க, சாத்தான் “சாகவே சாவதில்லை” என்று பொய் சொன்னான். பலன் உண்டாகுமென்று அவர்களுடைய சொரூபங்களை வணங்கவும் ஆதலால் தான் சொன்ன முதலாவது பொய்யை ஸ்திரப்படுத்தி மரித்துப் போகிறவர்கள் மெய்யாகவே சாவதில்லை, அவர்கள் இன்னும் உயிரோடே இருக்கிறார்கள் என்று காட்ட, சாத்தான் மரித்து போனவர்களின் ரூபங்களில் காணப்பட்டு, அவர்களைப் போலவே பேசி மக்களை வஞ்சிக்கிறான். அப்படியே பூலோகத்திலிருந்த சில நல்லோரும் பலவான்களும், இறவாமல் மரித்த பிறகு தேவர்களாக வானமண்டலங்களிலிருப்பதாகவும், அவர்களிடம் பூஜித்து ஜெபிப்பதால் பலன் உண்டாகுமென்று அவர்களுடைய சொரூபங்களை வணங்கவும், அவர்களுக்காக கோவில்களைக் கட்டவும், வீண் ஆராதனை செய்து, நரபலிகளையும் கூட செய்ய வஞ்சித்து விட்டான்.

இத்துடன் மரித்தவர்கள் மீண்டும் பல ஜென்மங்கள் எடுத்துப் பிறந்து கொண்டே இருக்கிறார்கள் என்றும் வஞ்சிக்கிறான்.

வேதாகமம், மரித்தவர்கள் உணர்ச்சியற்ற நிலையிலிருப்பதாகக் கூறுகிறது. “மரணத்தில் உம்மை (தேவன்) நினைவு கூறுவதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்? மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.” சங். 6:5; 115:17

“அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்த நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம்.” சங்.146:4

“உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை. அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும், வித்தையும், அறிவும் ஞானமும் இல்லையே.” “பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியிலிறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை” என்றும் கூறப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதலின் நாள் வரைக்கும் பரலோகத்துக்கோ, உத்தரிக்கும் ஸ்தலத்துக்கோ அல்லது நரகத்துக்கோ போகாமல் நித்திரையா யிருக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது. பிர.9:5,6,10; ஏசா. 38:18

இக்காரணத்தினால் தான் மரித்துப் போனவர்களிடம் ஜெபிப்பதும் விசாரிப்பதும் வீண் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் உங்களை நோக்கி, அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முனுமுனுவென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும், விசாரியுங்கள் என்று சொல்லும் போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உயிருள்ள வர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? என்று தேவன் கேட்கிறார். ஏசா. 8:19

அரசனாகிய சவுல் தேவனுடைய கிருபையை இழந்து போன பிறகு, அஞ்சனம் பார்க்கிற ஓர் ஸ்திரீயைத் தேடி அவன் மூலமாய், மரித்துப் போயிருந்த தீர்க்கதரிசியாகிய சாமுயேலிடம் விசாரித்து தன்னுடைய எதிர்கால நிலையை அறிய விரும்பிப் போனான். இந்த இடத்தில் சாத்தான், அஞ்சனக்காரியின் மூலமாய், சாமுவேல் தீர்க்கதரிசியைப் போல, காணப்பட்டு அவர் உயிரோடே இருந்த போது பேசிய சில விஷயங்களையே பேசி, மறைந்து விட்டான். 1 சாமு. 28:7-20

இவ்விதமாய் செத்தவர்களிடம் விசாரிக்க அஞ்சனம் பார்ப்பது சாத்தானின் கொடிய வஞ்சகமாயிருப்பதால், அஞ்சனக்காரருக்கு மரண தண்டனை கொடுக்க யேகோவா தேவன் கட்டளையிட்டிருக்கிறார். யாத் 22:18



சவுல் இக்காரியத்தை செய்ததால் தேவனுடைய எந்த சகாயமும் இல்லாமல் மடிந்து அழிந்தான். சாத்தானுடைய வஞ்சகங்களிலிருந்த தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலைக் காத்துக் கொள்ள அவருடைய கட்டளைகளில் “தன் மகனையாவது, தன் மகளையாவது தீக்கடக்கப் பண்ணுகிறவனும் குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்ட வைகளை செய்கிறவன் எவனும் கர்த்தரிடத்தில் அருவருப்பானவன் என்று கூறியிருக்கிறார். 1 நாளா. 10:13; உபா. 18:10-12

## கிறிஸ்தவர்களுக்குள்ளாக சாத்தானின் வஞ்சகச் செயல்கள்

செத்தவர்கள் உணர்ச்சியுள்ள நிலையிலிருக்கிறார்கள் என்றும், அவர்களோடு பேசி சில இரகசியங்களை அறிந்து கொள்ளலாமென்றும், மேல் நாடுகளில் விசேஷமாய் 1848-ம் வருஷம் முதல் (Fax and Katte Sisters) பாக்ஸ், கேட்டி, என்னும் இரு சகோதரிகள் மூலம் தட்டும் சப்தங்களினால் கேள்விகளுக்குப் பதில் கிடைத்ததால், செத்தவர்களிடம் விசாரிக்கும் சங்கங்கள் (Spiritulism) நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. இக்கூட்டங்களில் பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களே கலந்து கொண்டு அச்சபையின் அங்கத்தினராயிருப்பார்கள். இவர்களுடைய பொதுவான ஆராதனைகளில் ஞானப்பாட்டுகளைப் பாடி பிரார்த்தனையுடன் ஆரம்பித்துப் பொதுவான ஆசீர்வாதத்தோடு முடிப்பார்கள். இச்சபைகளில் சில ஆண்களும், விசேஷமாக அநேக பெண்களும் சாத்தானின் கருவியாக உபயோகிக்கப்பட்டு, சொந்த பாஷையிலும் பேசுவார்கள். அப்படி பேசும் போது அவர்களுடைய முக லட்சணங்கள் விகாரப் பட்டு மிகவும் அருவருப்பாக காணப்படும். ஆதலால் சிலர் கருப்புத் திரைகளுக்குள்ளிலிருந்து பேசுவார்கள். மரித்தவர்களுடைய ஆவிகள் இவர்கள் மேல் இறங்கி இவர்கள் மூலமாய் சில இரகசியங்களும் தங்களுடைய பல கேள்விகளுக்குப் பதிலும் அளிக்கப்படுவதாக நம்பியிருக்கிறார்கள்.

ஸ்பிரிட்சுவலிஸ்ட்ஸ் (Spiritualists) சங்கத்தினரின் கொள்கைகளுக் கிடையே பல சங்கங்கள் இந்தியாவிலும் வந்து பரம்பிவிட்டன. இச்சங்கத்தின் தலைவர்கள் விவாகம் செய்யக் கூடாதென்றும் விவாகம் செய்து கொண்டவர்கள் ஊழியம் செய்ய முன் வரும் போது அவர்களை வெவ்வேறாய் பிரித்து, கணவன், ஊழியக்காரிகளாகிய வேறு பெண்களோடு ஒரு ஊரிலும், மனைவி ஊழியர்காரர்களாகிய வேறே ஆண்களோடு இன்னொரு ஊரிலும் இருந்துக் கொண்டு ஊழியம் செய்ய கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆனால் சத்திய வேதத்தின்படி கண்காணிப்பை விரும்புகிறவன் குற்றஞ் சாட்டப்படாதவனும் ஒரே மனைவியையுடைய புருஷனும் ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதை யுள்ளவனும், அன்னியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்னுமாய், பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் என்றும், "விவாகத்தில் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" என்றும், (மத் 19:6) "உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையாயிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்" என்றும் 1 கொரி. 7:5 இல் வேதம் கூறியிருக்க, ஊழியத்திற்கு வரும் விவாகம் செய்த தம்பதிகளை, தனித்தனியாக வெகு தூரத்தில் பிரித்து விடுவது சாத்தானின் வஞ்சக உபதேசம் என்று விளங்குகிறதல்லவா. 1 தீமோ. 3:1-5

மேலும் விதவைகளுக்குரிய சங்கத்தில் "அறுபது வயதுக்குச் குறையாதவளும் ஒரே புருஷனுக்கு மனைவியாக இருந்தவளுமாகி பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி செய்து சகல நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவர்களுமாயிருந்தால் அப்படிப்பட்ட விதவையையே விதவைகளின் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இளம் விதவைகளை விதவைகளின் கூட்டத்தில் சேர்த்து



கொள்ளாதே. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் காமவிகாரங் கொள்ளும் போது, விவாகம் பண்ண மனதாகி, முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே ஆக்கினைக்குட்படுவார்கள். அதுவுமல்லாமல் அவர்கள் சோம்பலுள்ளவர்களாயும், வீடு வீடாய்த் திரியப் பழகுவார்கள். சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாதவைகளைப் பேசுகிறவர்களாயுமிருக்கிறார்கள். ஆகையால் இளவயதுள்ள விதவைகளை விவாகம் பண்ணவும், பிள்ளைகளை பெறவும் வீட்டை நடத்தவும் விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன் என்று பவுல் கூறியிருக்கிறார். அறுபது வயதிற்குக் குறையாத விதவைகளுக்கும் இளம் வயதுள்ள விதவைகளுக்கும் இப்படிப்பட்ட கட்டளைகளிருக்கும் போது, வாலிப மனைவிகளை கணவரிடமிருந்து பிரித்து, தேவ ஊழியத்திற்கெனக் கூறி அவர்களைக் கூட்டங்கூட்டமாகப் பலவிடங்களில் வைத்து மிருக்கிறார்கள். இக்காரணத்தினால் அநேக இடங்களில் பல முறைகேடான சம்பவங்கள் நடைபெற்று தேவநாமம் தூஷிக்கப்படுவதை நாம் அறிந்து வேதனைப்படுகிறோம். இவ்வித ஊழியர்கள், வீடுகளில் ஆண்களில்லாத சமயத்தில் நுழைந்து, பெண்களுக்கு உபதேசித்து, அவர்களை வஞ்சித்து அவர்கள் கணவன்மார்களின் உத்தரவின்றி ஞானஸ்தானம் கொடுத்து அவர்களைத் தங்கள் சபைகளில் முக்கியஸ்தலர்களாக்கி, சாட்சி கொடுக்கவும் பிரசங்கம் செய்யவும் அதிகாரங் கொடுத்து, அவர்களைக் கொண்டே மற்றவர்களையும் தங்கள் வலைகளில் விழவைக்க உபயோகிப்பார்கள். 1 தீமோ. 5:9-14

இப்படிப்பட்டவர்களை குறித்து ஆவியானவர் வெளிப்படையாய் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர்

கட்டளையிடுவார்கள் என்று பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தையறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து அவர்களை வசப்படுத்தி கொள்ளுகிறார்கள் என்றும் பவுல் கூறியபடி அநேகரை வஞ்சிக்கிறார்கள். 1தீமோ. 4:1-3; 2 தீமோ. 3:6,7

## சபையில் பெண்களுக்குரிய கட்டளை

தேவனுடைய சபையிலே உதவி ஊழியம் செய்யத் தக்க அநேக ஸ்திரீகள் இருந்த போதிலும் லூக் 8:1-3; ரோம. 16:1 சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. (1 கொரி. 14:34) ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்க முடையவளாயிருந்து அமைதலோடே கற்றுக்கொள்ளக்கடவள்; உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்திரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் என்று தேவ கட்டளை இருந்த போதிலும் சில சபையில் பெண்கள் விசேஷமாய் பிரசங்கிப்பார்கள். மேலும் தங்களைத் தீர்க்க தரிசிகளாகவும் அழைத்துக்கொண்டு சபைகளையே ஆளக்கூடிய தலைவிகளாயு மிருப்பார்கள். 1 கொரி. 14:34; 1 தீமோ. 2:11-14

## அந்நிய பாஷைகளைப் பேசுதல்

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் தாம் தெரிந்து கொண்ட ஜனமாகிய இஸ்ரயேலரிடம் மாத்திரமே தன்னுடைய உடன்படிக்கைகளையும், பிரமாணங்களையும் எபிரேய பாஷையில் கொடுத்திருந்தார். (உபா. 7:6) ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் புறஜாதிகளிலிருந்து தம்முடைய நாமத்துக்காக ஒரு ஜனத்தை தெரிந்து கொள்ள வேண்டிய காலம் துவங்கி விட்டப்படியால், பெந்தெகொஸ்தே



நாளில் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்ட அப்போஸ்தலரும், ஆதிச் சபையாரும் அதற்கு அடையாளமாக சுமார் பதினெட்டு விதமான அந்நிய பாஷைகளில் பேசினார்கள். கலிலேயராகிய அப்போஸ்தலர் தங்களுடைய தாய் பாஷையல்லாத அந்நிய பாஷைகளில் தேவனுடைய மகத்துவங்களைத் தெளிவாக பேசுவதைக் கேட்ட யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பிறகும் சபைகளில் அந்நிய பாஷைகளில் பேசிய போது அவைகளைச் சிலர் தெளிவாக மொழியெர்த்து விளக்கினார்கள். அக்காலத்தில் அந்நிய பாஷைகளை பேசுவது ஒரு விசேஷமான வரமாக கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்காலங்களில் தேவனுடைய விசேஷித்த கிருபையால் வேதாகமங்கள் சுமார் 1800 பாஷைகளுக்கு மேலாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பலவிதமான பாஷைகளைப் பேசும் புறஜாதிகளிலிருந்தே விசுவாசிகள் எழும்பித் தங்கள் தங்கள் பாஷைகளிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் காலமாயிருக்கிறது. அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போகும்...நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போம் என்று பவுல் கூறியபடி அந்நியப் பாஷை பேசுவது ஓய்ந்து விட்டது. 1 கொரி. 13:8

ஆனால் தற்காலங்களில் அந்நிய பாஷைகளைப் பேசுவதாகக் கூறும் சில சபையார், தங்களுக்கும், பிறருக்கும் புரியாத விநோதமான பாஷைகளில் பேசுகிறார்கள். இவ்விதத் தவறான பழக்கம் ஆதியிலேயே கொரிந்து சபைக்குள், இருந்ததால் அப்போஸ்தலனாகிய பவுல் அதைத் தமது நிரூபத்தில் கண்டனம் செய்திருக்கிறார். "அன்பை நாடுங்கள், ஞான, வரங்களையும் விரும்புங்கள், விசேஷமாய் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்; ஏனெனில் அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலேயே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுவதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான் என்றார். 1 கொரி. 14:1,2

அந்நிய பாஷைபேசும் சபையாரிடம் உங்களுக்கும், பிறருக்கும் புரியாத பாஷைகளிலே பேசினார்களே என்று கேட்டால் மேற்கூறிய வசனத்தைக் காட்டி "நாங்கள் தேவனோடு பேசுகிறோம்; ஆதலால்

உங்களுக்குத் தெரியாது" என்கிறார்கள், தேவன் எல்லா பாஷைகளையும் அறிந்திருக்கிறபடியால் அவனவன் தன் தன் பாஷையிலேயே பேசினாலும் அவர் அதைப் புரிந்து கொள்ளுவார். பேசுகிறவனும் உணர்வுள்ளவனாய் பேசுவான். தேவனோடு பேசுவதற்கு ஒரு தனி பாஷை தேவையில்லை. வேதாகமத்திலேயே ஒருவனும் ஒரு தனி பாஷையிலே தேவனோடு பேசியதாகவும் ஆதாரங் கிடையாது. மனிதருக்கே விளங்காத ஏதோ ஒரு பாஷையையோ, யாராகிலும் பேசினால் கேட்டவர்கள், அது யாருக்குத் தெரியும் கடவுளுக்குத்தான் தெரியுமென்று கூறுவார்கள். அது போல் சபையில் ஒருவருக்கும் தெரியாத பாஷையில் பேசினால், கேட்டவர்கள் அது கடவுளோடு பேசினது போலிருக்குமென்றும் அதனால், இவை யாருக்கும் ஒரு பலனுமில்லாததால் அது வீணென்று பவுல் கண்டனஞ் செய்து, எழுதியிருக்கிறார். "மேலும் சகோதரரே நான் உங்களிடம் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்க தரிசனத்தை அறிவிக்கிறதற்காவது போதகத்தைப் போதிக்கிறதற்காவது, ஏதுவானதைச் சொல்லாமல் அந்நிய பாஷையில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனமென்ன? அப்படியே புல்லாங்குழல் சுரமண்டலம் முதலிய சப்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள், தொனிக்கையில் வித்தியாசங்காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுவதும் சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுவதும் இன்னதென்றும் எப்படி தெரியும்? அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற் ஆயத்தம் பண்ணுவான்? அது போல நீங்களும் தெளிவானப் பேச்சை நாவினால் வசனியா விட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்திலே பேசுகிறவர்களாயிருப்பீர்கள். உலகத்தில் எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது. அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல. ஆயினும் பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்" என்று பவுல் கூறியிருக்கிறார். எனவே, யாரும் அறியாத பாஷையில் பேசுவது ஆகாயத்திலே பேசுவது போலிருக்கும். 1 கொரி. 14:6-11



ராணுவ முகாமில் போர் வீரர்கள் காலையில் எழுந்திருக்கிறதற்கு ஒரு சத்தமும், உடற்பயிற்சிக்கு ஒரு சத்தமும், ஆகாரத்துக்குச் செல்ல ஒரு சத்தமும், நித்திரைக்குச் செல்ல ஒரு சத்தமும், யுத்தத்திற்கு ஆயத்தப்பட ஒரு சத்தமும், ஆக பலவிதமான தொனிகளில எக்காளம் ஊதுவார்கள். அந்தந்த சத்தத்திற்கு ஏற்றபடி போர் வீரர்கள் அந்தந்த வேலையைச் செய்ய ஆயத்தப்படுவார்கள்.

ஆனால் எக்காளம் ஊதுபவன் ஆகாரத்துக்கு பதிலாக நித்திரைக்குரிய சத்தமும் யுத்தத்திற்கு பதிலாக ஆகாரத்துக்குரிய சத்தத்தையும் ஊதினால், போர் வீரர்களுக்குள் பெரும் குழப்பமும் ஆபத்தும் ஏற்பட்டுவிடும். இது போலவே தான் மக்களுக்குப் புரியாத பாஷையைப் பேசுவதால் குழப்பம் ஏற்படுமென்று உதாரணம் காட்டி பவுல் கண்டனம் செய்கிறார்.

புதிய ஏற்பாட்டை நாம் ஆராய்ந்து வாசிக்கும் போது, மூன்று முக்கியமான இடங்களில் மாத்திரம் அந்நிய பாஷைகளில் பேசினதாக தெரிகிறது.

1. பெந்தெகொஸ்தே நாளில் ஆதி திருச்சபையாராகிய யூத விசுவாசிகள் மேல் பரிசுத்தாவி வந்தது.

2. புறஜாதிகளிலிருந்து வந்த கொர்நேலியுவும், அவர் வீட்டில் சேர்ந்திருந்தவர்கள் மேல் பரிசுத்த ஆவி வந்தது.

3. எபேசு பட்டணத்தில் யோவான்ஸ்நானன் மூலமாய் மனந்திரும்புதலுக்கென்று மாத்திரம் கொடுக்கப்பட்ட ஸ்நானத்தை பெற்ற சீஷர்கள் மேல் பரிசுத்தாவி வந்த போதும் அந்நிய பாஷைகளில் பேசினார்கள். அப்.10:44,45; 19:6

இவ்விதமாகவே வேறு அநேக இடங்களில் பரிசுத்த ஆவியைப் பெற்றதாகக் கூறியிருந்த போதிலும் அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசவில்லை எனத் தெரிகிறது.

அப்போஸ்தலர் ஜெபித்தபோது அவர்கள் கூடியிருந்த வீட்டார் யாவர் மேலும் பரிசுத்தாவி வந்த போது, அந்நிய பாஷைகளில் பேசாமல்

தேவவசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள். அப். 4:31

அவ்வாறே சமாரியர் பரிசுத்தாவியைப் பெற்ற போதும் அந்நிய பாஷைகளில் பேசவில்லை.அப். 8:17

வேதத்தை நாம் ஆராயும் போது, பரிசுத்தாவி எவர்கள் மேலும் வருவதும் போவதுமாயிருந்ததில்லை. ஆனால் சில சபையார் அடிக்கடி கூடி ஜெபிக்கும் போதெல்லாம் பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வருவதாகக் கூறுகிறார்கள்.

இவ்விதமாகவே புற மதத்தினருக்குள்ளும்,சிலர் மேளம், உடுக்கை முதலியவற்றை வாசித்து சத்தமிட்டு அழைக்கும் போதெல்லாம், அவர்கள் மேலும், அருள் (ஆவி) வருவதை நாம் அறிவோம். இதற்கிடையே சில சபையாரும், பாண்டு முதலிய வாத்தியங்களை வாசித்து உரத்த சத்தமாய் ஜெபிக்கும் போது, இவர்கள் மேலும் ஆவி வருகிறது. எனவே இது பரிசுத்தாவியாயிராமல் சாத்தானின் வஞ்சக ஆவியாயிருக்கிறது.

## நீண்ட ஜெபங்கள்

தேவ சமுகத்தில் நீ துணிகரமாக உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலுமிரு. தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியிலிருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக என்றும் (பிர.5:2) நீங்கள் ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள் அதிக வசனிப்பினால், தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்; அவர்களை போல நீங்கள் செய்யாதிருங்களென்று இயேசுவும் கூறியிருக்க, சில சபையில் பலத்த சத்ததோடும், அதிகாரத்தோடும், சொன்னவைகளையே திரும்ப, திரும்பச் சொல்லி வீண் வார்த்தைகளை பிதற்றி அதை அவர்களே மொழி பெயர்க்கிறார்கள். இது மகா பயங்கரமான தேவ தூஷணமும் சாத்தானின் வஞ்சகமுமாயிருக்கிறது. மேலும் பரிசுத்தாவியை பெற்றவர்கள் தேவனுடைய சகல சத்தியங்களையும் தெளிவாக அறிந்து கொள்வார்களென்று இயேசு தாமே கூறியிருக்க, இவர்களுடைய



சபைத்தலைவர்கள் சத்தியத்திற்கு மாறான பாரம்பரிய உபதேசங்களையும், கட்டுக்கதைகளையுமே பிரசங்கிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனமில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் திரளாய்ச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக் கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும் என்றும் சீர் கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு என்றும் அவைகளால் (கள்ளப் போதகங்களால்) அவர்கள் அவபக்தியுள்ளவர்களாவார்கள் என்றும் பவுல் கூறினார். மத். 6;7,8; 2 தீமோ. 2:16;4:3-4

## சொப்பனங்களும் பொய்த் தீர்க்கதரிசிகளும்

சில சபையார் அடிக்கடி தாங்கள் சொப்பனங்களையும், தரிசனங்களையும் கண்டதாகக் கூறி அவைகளைக் குறித்தே விசேஷமாய் பிரசங்கித்து சாட்சியும் கொடுப்பார்கள். இவைகளின் விளக்கங்களும் வேதத்திற்கு நேர் மாறாகவே இருக்கும். இப்படிப்பட்ட தரிசனகாரர்கள் பூர்வகாலங்களிலுமிருந்து கொண்டு ஜனங்களை வஞ்சித்தார்கள். சொப்பனங் கண்டேன், சொப்பனங் கண்டேன் என்று என் நாமத்தைக் சொல்லி பொய் தீர்க்க தரிசனம் உரைக்கிற தீர்க்க தரிசிகள் சொல்லுகிறதை கேட்டேன். இதோ பொய் சொப்பனங்களை தீர்க்கதரிசனமாகச் சொல்லி அவைகளை விவரித்து, என் ஜனத்தை தங்கள் பொய்களினாலும் தங்கள் வீம்புகளினாலும் மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்கு கற்பித்தது மில்லை. அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே. 23:25,32 பழைய ஏற்பாட்டின் காலங்களில் தீர்க்கதரிசிகள் இனிச்சம்பவிக்கப் போகிறவைகளைக் குறித்து முன்னதாகவே தீர்க்க தரிசனம் கூறினார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு காலங்களில் தீர்க்கதரிசன வரமுடையவர்கள், புதிதாக வேறே தீர்க்க தரிசனங்களை கூறாமல், பழைய ஏற்பாட்டினர் கூறிய தீர்க்க தரிசனங்கள் எவ்விதமாய் நிறைவேறுகிறது என்பதை திட்டமாய் எடுத்துக் காட்டுகிற வரமுடையவர்களாயிருப்பார்கள். 1 கொரி. 12:10,28

## வியாதியஸ்தர்களை சுகப்படுத்துதல்

இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் தேவனுடைய வல்லமையால் பிசாசுகளைத் துரத்தி, பலவித வியாதியஸ்தர்களை சுகப்படுத்தினார்கள். சில சபையார் அடிக்கடி (Divine Healing) தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைக் கூட்டங்கள் ஏற்படுத்தி வியாதியஸ்தர்களை வரவழைத்து அவர்கள் மேல் எண்ணெய் பூசி ஜெபிக்கிறார்கள்; என்றாலும் அப்போஸ்தலர்கள் செய்தது போல மெய்யான சுகமடைவதையும் குருடர் பார்வையடைவதையும் சப்பாணிகள் நடப்பதையும் ஊமையர் பேசுவதையும், குஷ்ட்டரோகி சுத்தமடைவதையும் நாம் காண்கிறதில்லை. இப்படிப்பட்ட பொய்யான அற்புதங்களைச் செய்கிறவர்களின் மூலமாய் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. அப்.10:38; மத்.10:1

இயேசு கிறிஸ்து கூறியபடி கடைசி நாட்களில் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாய் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் என்றும் (மத். 24:24) அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்பட தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமல் அநீதியினால் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாகப்படும்படிக்கும் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் என்றபடி இருக்கிறது. 2 தெச 2: 7-12 "அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்" என்றும் கூறப்படுகிறது. வெளி 16:13-14 அப்போஸ்தலரின் காலத்தில் மெய்யாய் பல பாஷைகளிலும் பேசியதும் கைகளை வைத்து பரிசுத்தாவியின் வரத்தைக் தந்ததும் எல்லாவிதமான வியாதியஸ்தலர்களையும் பூரணமாய்ச் சுகப்படுத்தி மரித்தவர்களை எழுப்பியதும், அக்காலத்தற்குரிய விஷேசித்த வரங்களாயிருந்தன. மேலும் இவைகள் யாவும் இயேசுவின் ஆயிர வருஷ



அரசாட்சியின் காலத்தில் சகலத்தையும் முந்தின சீருக்கு கொண்டு வரும் போது மாண்டவர் யாவரையும் உயிர்ப்பிப்பதற்கும் எவ்விதமான வியாதிகளும் இல்லாமல் சகலவித ஜாதி பாஷைக்காரர்களும் ஒரே சுத்தமான பாஷையில் தேவனை தொழுது கொள்ளப்போகிறதற்கும் ஒரு விசேஷித்த முன் அடையாளமாயிருந்தது. வெளி. 20:1,6; யோவா. 5:28:29; ஏசா. 33: 24; செப். 3:9; சகரி.8.23

## மருந்து கொடுக்க மறுத்தல்

பாவத்தின் பலனாக ஏற்பட்ட அநேக விதமான வியாதிகளுக்கு கிருபையுள்ள தேவன், வியாதிகளை சுகப்படுத்திக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தப் பலவிதமான மருந்துகளை சிருஷ்டித்திருக்கிறார். இவைகளை உட்கொண்டு அநேகர் சுகமடைக்கிறார்கள். ஆனால் சில சபையோரோ வியாதியஸ்தர்கள் எவ்விதமான மருந்துகளையும் எடுத்துக் கொள்ள கூடாதென்றும் அவ்விதமாய் எடுத்துக் கொள்வது பாவமென்று சொல்லி பிரார்த்தனையின் மூலமாகவே சுகப்படுத்த வேண்டுமென்று கூறி ஜெபிப்பார்கள். அப்படி ஜெபித்த போதிலும் அவர்கள் சுகமடையாமல் பலர் மிகவும் சிரமத்துக்குட்பட்டு பயங்கர மரணமடைந்திருக்கிறார்கள். இக்காரணமாக அநேகர் தேவன் மேல் இருந்த விசுவாசத்தை விட்டு விலகி இருக்கிறார்கள். இவ்விதமாகச் செய்வது சாத்தானுடைய வஞ்சகமான கொலை பாதக செயல் என்றாலும் மிகையாகாது. இச்சபையைச் சேர்ந்த அநேக ஆண்களும், பெண்களும் சரீர பலவீனமடைந்து பைத்தியம், பிடித்து, பரிதாப மரணமடைந்து மிருக்கிறார்கள். பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டும், நடத்தப்பட்டும் வருகிற இவர்களுக்கு ஏன் பைத்தியம் பிடிக்க வேண்டும். பிசாசின் அசுத்தாவின் மூலமாகத் தான் மக்கள் மதி கெட்டு பைத்தியக்காரராயிருக்கிறார்கள்.

## வெண் உடைகள்

இயேசுக் கிறிஸ்துவின் காலத்திலிருந்த வேதபாரகரும், பரிசேயரும் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காண வேண்டுமென்று செய்து, தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின்

தொங்கல்களை பெரிதாக்கினது போல, தற்காலத்தில் சில சபையார், விசேஷமாய் அச்சபையின் ஊழியர்கள், வெண் வஸ்திரங்களைத்தான் தரித்துக் கொள்வார்கள். ஜெயம் பெற்று பரிசுத்தவான்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டதாக கூறியிருப்பதால், இச்சபையார் இப்போதே தங்களை பரிசுத்த ஆவி பெற்ற நீதிமான்கள் என்றும், பரிசுத்தவான்கள் என்றும் காண்பித்துக் கொள்ளவே வெண்வஸ்திரம் தரித்துக் கொள்வார்கள். மத், 23:5; வெளி.3.5

ஒன்றான மெய்த்தேவனாகிய யேகோவாவையும், அவருடைய முதற்பேறான குமாரனாகிய கிறிஸ்து இயேசுவையும், அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் இரட்சிப்பின் சகல ஒழுங்கு திட்டங்களையும் சரியாக அறிந்து கொள்ள மனதில்லாமல் அப்படிப்பட்ட சபையார் தாங்களே வஞ்சிக்கப்பட்டும், மற்றவர்களையும் வஞ்சித்துக் கொண்டும் வீணான தீர்க்க தரிசனங்களைச் சொல்லிக் கொண்டும், பொய்யான அற்புதங்களைச் செய்து கொண்டுமிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களைக் குறித்தே “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைகாரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன்” என்று இயேசு தாமே முன்னுரைத்தார். மத். 7:22-23

இதை வாசிக்கும் நண்பர்களே, வேதம் கூறுகிறபடி உலகில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவை களோவென்று சோதித்தறியுங்கள். விசேஷமாய் சில சபையாரின் மூலமாய் பரம்பியிருக்கும் வஞ்சக ஆவிகளுக்கு விலகி உங்களைக் காத்துக் கொள்ளவும் பரிசுத்தாவியைப் பெற்று, தேவ ஆசீர்வாதங்களை அடைய கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம். I யோவா. 4:1

*************



# 16. பஸ்காவும் இராப்போஜனமும்

*“ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.” (1கொரி.5:7,8)*

பஸ்காவைக் குறித்தும், இராப்போஜனத்தைக் குறித்தும், அப்பம் பிட்குதலைக்குறித்தும் அநேக சபைகளில் தப்பறையான போதகங்கள் உள்ளன. இதனால் சில சபைகளில் அனுதினமும் அப்பம் புசிக்கிறார்கள்; சில சபைகளில் வாரம் ஒரு முறையும், வேறு சில சபைகளில் மாதம் ஒரு முறையும், இன்னும் சில சபைகளில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், பகல் வேளையில் அப்பம் புசிக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் சரியான வேத ஞானம் இல்லாதது தான். இதைக்குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை தியானிக்கலாம்.

“ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிற வைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.

நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.” (I கொரி. 2:14,10)

**அப்பம் பிட்குதல்:**

வேதத்தை நாம் தீர்க்கமாக ஆராய்ந்தால் அப்பம் பிட்குதல் வேறு, இராப்போஜனம் வேறு என்பதை அறிந்து கொள்ளலாம். அப்பம் பிட்குதல் என்பது சகோதரர்கள் கூடி வந்திருக்கையில் சகோதர ஐக்கியத்தையும், அந்நியோந்நியத்தையும் குறிப்பதற்காக செய்யப்படுகிற ஒரு காரியம். நம்

நாட்டில் நாம் கூடும்போது பிஸ்கட், டீ, காபி சாப்பிடுவது போல இஸ்ரயேல் நாட்டில் அப்பம் பிட்குதல் வழக்கமாக இருந்தது.

திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் விசுவாசிகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள். (அப். 2:42,46)

"அவர்கள் ஒருமனப்பட்டவர்களாக தேவாலயத்தில் அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு போஜனம் பண்ணினார்கள்." என்று வேதம் சொல்கிறது. அதாவது அவர்கள் அப்பம் பிட்குதலை தேவாலயத்தில் பண்ணாமல் வீடுகளிலே மட்டும் பண்ணினார்கள். ஏன்? வீடுகளில் தான் உணவு தயாரித்து போஜனம் பண்ணமுடியும். ஆகையால் தான் அவர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள் என்று வேதம் கூறுகிறது. ஆகையால் இந்த அப்பம் பிட்குதல் என்பது சகோதரர்கள் கூடி வரும்போது போஜனம் பண்ணுதலே என்பது தெளிவாகிறது.

இதை சரியாகப் புரிந்து கொள்ளாமல்தான் சில சபையார் அப். 2:46 வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அநுதினமும் அப்பம் புசிக்கிறார்கள். சில சபையார் அப். 20:7 வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு வாரத்தின் முதலாம் நாள் அப்பம் புசிக்கிறார்கள். ஆனால் அப். 20:11ம் வசனத்தை படித்தால் அப்பம் பிட்குதல் என்பது வெறும் போஜனம் பண்ணுதலே ஒழிய வேறில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

**பஸ்கா:**

பஸ்கா என்றால், "கடந்து போகுதல்" (PASS OVER) என்று பொருள். இஸ்ரயேலர் தேவக்கட்டளைப்படி பஸ்காவை ஆசரித்ததால் சங்காரத்தூதன் அவர்கள் வீட்டைக் கடந்து போனான்.

இஸ்ரயேலர் எகிப்திலே அடிமைப்பட்டிருந்தனர். அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறும் நாளில் பஸ்காவை ஆசரிக்கும்படி தேவன்



அவர்களுக்கு மோசே மூலம் கட்டளை கொடுத்திருந்தார். தேவ கட்டளைப்படி பழுதற்ற ஒரு வயதுள்ள ஆண் ஆட்டுக்குட்டியை நீசான் (எ) ஆபிப் மாதம் 10ம் தேதி தெரிந்து கொண்டு அதை ஆபிப் மாதம் 14ம் தேதி சாயங்காலத்திலே அடித்து அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, வீட்டுவாசல் நிலைக் கால்களிலும் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். அன்று இராத்திரியிலே சங்காரத்தூதன் எகிப்து தேசமெங்கும் கடந்துபோய் எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன்கள் மட்டும் முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணுவார். எந்த வீட்டின் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்டுள்ளதோ அந்த வீட்டில் வாதையும் சங்காரமும் வராதிருக்கும் என்று தேவன் சொல்லியிருந்தார். (யாத். 12:1-15)

**பஸ்காவை ஆசரிக்க வேண்டிய விதம்:**

இஸ்ரயேலர்கள் இந்த பஸ்காவை ஆசரிக்க வேண்டிய விதமாவது:

ஆட்டின் இரத்தத்தை நிலைக்கால்களிலும், மேல் சட்டத்திலும் தெளித்து அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிக்க வேண்டும். தங்கள் அரையில் கச்சைக் கட்டிக்கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டும், கைகளில் தடிபிடித்துக் கொண்டும் தீவிரமாய் அதைப் புசிக்க வேண்டும். (யாத். 12:7-11)

தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடியே இஸ்ரயேல் மக்களும் செய்தனர். அன்றிரவு சங்காரத்தூதன் எகிப்தியரின் தலைச்சன்களை எல்லாம் அழித்தார். இஸ்ரயேலரின் தலைச்சன்களெல்லாம் காக்கப்பட்டனர். அன்றையத்தினமே தேவன் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். (யாத். 12:13,41,42)

இந்த பஸ்காவை இஸ்ரயேலர் குறிப்பிட்ட நாளில் குறித்த வேளையில் அதாவது ஆபிப் மாதம் 14ம் தேதி மாலையில் தலைமுறை தலைமுறைதோறும் ஆசரிக்கும்படி தேவன் கட்டளை கொடுத்தார்.

அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்க வேண்டும்; அந்த

மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டு போகக் கூடாது; அதில் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது: விருத்தசேதனம் இல்லாத ஒருவனும் அதில் புசிக்கக்கூடாது; அந்நியன் ஒருவன் பஸ்காவை ஆசரிக்க விரும்பினால் அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் அனைவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டபிறகு ஆசரிக்க வேண்டும். (யாத்.+ 12:46-48)

தீட்டுப்பட்டவர்களும், பிரயாணமாய் தூரம் போனவர்களும் இரண்டாம் மாதம் (சீப்) 14ம் தேதியிலே பஸ்காவை சகல முறைமைகளின்படியும் ஆசரிக்க வேண்டும். ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதே போனால் அவன் குறித்த காலத்தில் கர்த்தரின் பலியை செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டு போவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான். (எண்.9:9-13)

**நிழல் - பொருள்:**

பஸ்கா என்ற இந்த ஆசரிப்பு, வரும் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அதன் உண்மைப் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது. (எபி. 10:1; கொலோ. 2:16,17)

பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமான பஸ்கா ஆட்டுக்குட்டி -குற்றமில்லாதவரும் மாசற்றவரும், பூரணரும், வாலிப வயதுள்ளவரும், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியான வருமாகிய நம் ஆண்டவராகிய இயேசுவை நிழலாகக் காட்டுகிறது; பஸ்கா ஆட்டின் இரத்தம் நிலைக்கால்களில் தெளிக்கப்படுதல் - நம்முடைய இருதயங்களில் கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுவதைக் காட்டுகிறது.

(யாத். 12;5; I பேது. 1:19; எபி. 7:26; I கொரி. 5:7,8; யோவா, 1:29; யாத். 12:7; எபி. 12:24; I பேது. 1:2)

புளிப்பில்லா அப்பம் - துப்புரவு, உண்மை என்கிற சத்தியத்தின் அப்பத்தைக் காட்டுகிறது. (புளிப்புள்ள அப்பம் துர்க்குணம், பொல்லாப்பு என்பவைகளைக் காட்டுகிறது) கசப்பான கீரை-கசப்பான



அனுபவங்களையும், சோதனைகளையும் நிழலாகக் காட்டுகிறது. (I கொரி. 5:8; மத். 5:11; II தீமோ. 3:12; I பேது. 4:14-16)

இஸ்ரயேலர் தங்கள் அரைகளில் கச்சை கட்டிக் கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டும், கையில் தடி பிடித்துக் கொண்டும் பஸ்காவை தீவிரமாய் புசித்தனர். கச்சை என்பது சத்தியத்தையும் பாதரட்சை என்பது சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தத்தையும், தடி என்பது பரிசுத்த ஆவியையும் குறித்துக் காட்டுகிறது. ( யாத். 12:11; எபே. 6;14, 15; சங்.23:4)

விருத்த சேதனம் பண்ணப்பட்டவர்கள் மாத்திரமே அதை புசிக்க வேண்டும். பஸ்கா ஆட்டின் எலும்பை முறிக்கக் கூடாது என்பது நமது ஆண்டவரின் எலும்புகள் முறிக்கப்படாது என்பதை நிழலாய்க் காட்டுகிறது. விருத்தசேதனம் என்பது இருதயத்தின் நுனித்தோலை நீக்குதலாகிய ஞானஸ்நானத்தை குறிக்கிறது. (யாத். 12:46; யோவா. 19:32,33; உபா 10:16; கொலோ. 2:11) பஸ்கா ஆட்டின் மாம்சத்தை விடியற்காலை வரை வைத்திருக்கக் கூடாது என்பது, இரவாகிய இந்த சுவிசேஷயுகத்தில் மட்டும்தான் இந்த இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டும் என்பதையும் விடியற்காலையாகிய ஆயிர வருட யுகத்தில் ஆசரிக்கக்கூடாது என்பதையும் காண்பிக்கிறது.

எகிப்து-இந்த பொல்லாத உலகத்தையும், எகிப்தியர்கள் அவிசுவாசிகளையும், பார்வோன்-சாத்தானையும், பார்வோனின் ஆட்களும் குதிரை வீரர்களும்-விழுந்துபோன தூதர்களையும், கானான்-பரம கானானையும், இஸ்ரயேலர்கள்-தேவனுடைய பிள்ளைகளையும் நிழலாகக் காட்டுகின்றன(ர்). சிவந்த சமுத்திரம்-இரண்டாம் மரணத்தையும், சிவந்த சமுத்திரத்தில் இஸ்ரயேலர் காக்கப்பட்டது-சுவிசேஷ யுக விசுவாசிகள் இரண்டாம் மரணத்திலிருந்து காக்கப்படுவதையும், பார்வோனின் சேனைகள் அதிலே அழிக்கப்பட்டது-துன்மார்க்கர் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதையும் குறிக்கிறது. இஸ்ரயேலர் பஸ்கா ஆட்டை நீசான் மாதம் 10-ஆம் தேதி தெரிந்து கொண்டது. பஸ்கா ஆடாகிய கிறிஸ்து, திரளான ஜனங்கள் “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!

கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரிக்க பஸ்காவுக்கு 5 நாட்கள் முன்னதாக நீசான் மாதம் 10-ஆம் தேதி எருசலேம் நகரத்தில் பிரவேசித்ததை நிழலாகக் காட்டுகிறது. (மத். 21:9; சக. 9:9; யோவா. 12:1,12)

**முதற்பேறானவர்கள் காக்கப்படுதல்:**

சுவிசேஷ யுகத்தின் மெய்யான கிறிஸ்துவின் சபை முதற்பேறானவர்களின் சபை என்றும், சிருஷ்டிகளின் முதற்பலன்கள் என்றும் அழைக்கப்படுகிறது. (எபி. 12:23; யாக். 1:18; வெளி. 14:4) இது தேவனுடைய குடும்பத்தில் பிந்தின பேறானவர்களும், பிற்பலன்களானவர்களும் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் முதற்பலனானவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும் பிற்பலனானவர்கள் இருக்கவே மாட்டார்கள் என்றும் பேர் கிறிஸ்தவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

எல்லா இஸ்ரயேலரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. ஒரு தேச மக்களாக அவர்கள் தேவனோடு எப்போதும் ஐக்கியமாகி தேவனுடைய ராஜ்யத்தில் நித்தியஜீவனைப் பெறப்போகிற எல்லா மனுக்குலத்துக்கும் அடையாளமாக இருந்தார்கள். ஓர் இஸ்ரயேலனாவது விடப்படாமல் எல்லாரும் தேவனால் அற்புதமாக விடுவிக்கப்பட்டு சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்திச் செல்லப்படுவது அவரை சேவிக்கும் எல்லா சிருஷ்டிகளும் பாவம், சாத்தான், மரணம் இவைகளின் வல்லமையிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்படுகிறதைக் காட்டுகிறது. இஸ்ரயேலர்கள் பஸ்காவை ஆசரிப்பதின் மூலம் முதற்பேறானவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். பஸ்காவை ஆசரிக்காததின் மூலம் முதற்பேறானவர்கள் மட்டுமே மரண அபாயத்தில் இருந்தார்கள். அதுபோல் இந்த சுவிசேஷயுகத்தில் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்கள் மட்டுமே இரண்டாம் மரண அபாயத்திலிருக்கிறார்கள். மீதிபேர் மரண அபாயத்தில் இல்லை. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த முதற்பேறானவர்கள் விசுவாச வீட்டிற்குள் இருந்தார்களா? தெளிக்கப்பட்ட இரத்தத்திற்குப் பின்னால்



இருந்தார்களா? என்பது தான் முக்கியம். (எபி. 10:22) அப்படி இல்லை என்றால் அவர்கள் தெய்வீக இரக்கத்தை அலட்சியம் செய்வதைக் குறிக்கும். இப்படிப் பட்டவர்களின் பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராது. (எபி 10:26) இவர்களது மரணத்தைத் தான் எகிப்திலே முதற்பேறானவர்களின் மரணம் நிழலாய் காண்பிக்கிறது. ஒரு வேளை தேவக்கட்டளையை மீறி இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அந்த இரவிலே வீடுகளை விட்டு வெளியே வந்திருந்தால் அவர்கள் சங்கரிக்கப்பட்டிருப்பார்கள். இந்த மரணமும் கூட சுவிசேஷயுக முதற்பேறானவர்களின் கீழ்ப்படியாமையினால் கிடைக்கிற இரண்டாம் மரணத்துக்கு நிழலாயிருக்கிறது. (எபி. 6:4-6)

**இராப்போஜனம்:**

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தான் பஸ்கா ஆட்டுக்குட்டி என்பதை அறிந்திருந்தார். அவர், தான் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, "நான் பாடுபடுவதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்." (லூக். 22:15) என்று கூறினார். அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள்" என்றார். இப்படியாக நமது கர்த்தர் பழைய பஸ்காவுக்குப் பதிலாக புதிய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார். (1 கொரி. 11:24,25)

நாம் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தைத் தெரிவிக்கிறோம். (1 கொரி. 11:26) நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது. இந்த ஒரே அப்பத்தில் நாமெல்லோரும்

பங்கு பெறுகிறபடியால் நாமெல்லோரும் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

**அப்பம் :** பல கோதுமை மணிகள் அரைக்கப்பட்டு மாவாகி ஒவ்வொரு கோதுமையும் தன் தனித்தன்மையை இழந்து ஒரே அப்பமாக மாறுகிறது.

**திராட்சை ரசம் :** பல திராட்சை பழங்கள் நசுக்கப்பட்டு ஒவ்வொரு பழமும் தன் தனித்தன்மையை இழந்து ஒன்றோடு ஒன்று கலந்து ஒரே திராட்சை ரசமாக மாறுகிறது. அதுபோல நாம் சுயத்தை நீக்கி, நாம் தன்னைத்தான் வெறுத்து மற்றவர்களோடு (விசுவாசிகளோடு) இணைந்து (கிறிஸ்துவின்) ஒரே சரீரமாக மாற வேண்டும்.

நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருந்து நாம் அவரது மரணத்திலும் பலியிலும் பங்கு பெறுகிறோம். (1 கொரி. 10:16,17) கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக நம் மாம்சத்தில் நிறைவேற்றுவதே நம் உடன்படிக்கையாயிருக்கிறது. (கொலோ.1:24) நாம் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றோம் என்பதையே இது தெரிவிக்கிறது. (ரோம. 6:3)

சிலர் கிறிஸ்துவின் மரண நாளை ஆசரிக்கும்போது அந்த அப்பத்தை புசிக்காமலும், திராட்சை இரசத்தை பானம் பண்ணாமலும் தங்களை தகுதியற்றவர்கள் என்று கருதி ஒதுக்குகிறார்கள். ஆனால் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து “நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றும், “புசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்றும் கடைசிநாளில் அவன் எழுப்பப்படுவான்” என்றும் “என்றென்றைக்கும் பிழைப்பான்” என்றும் மிகத் தெளிவாக யோவா. 6:53-58ல் கூறியிருக்கிறார்.

எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்த பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும். ஏனெனில்



அபாத்திரமாய் பானம் பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி பானம் பண்ணுகிறான். இதனிமித்தம் அநேகர் பலவீனமும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள், அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். (1 கொரி. 11:28-30)

இந்த இராப்போஜனத்தில் நாம் பங்குபெறும்போதெல்லாம், நமது ஆண்டவரின் பலியினால் கிடைக்கிற ஆசீர்வாதத்தை நினைவு கூருவதோடு நம்முடைய ஞானஸ்நான (நல்மனசாட்சியின்) உடன்படிக்கையையும் நினைவு கூருகிறோம், புதுப்பிக்கிறோம். நாம் அவரோடு மரித்தால் அவரோடு பிழைத்தும் இருப்போம். நாம் அவரோடு பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகை செய்வோம். இந்த இராப்போஜன ஆசரிப்பு எவ்வளவு காரியங்களைக் காண்பிக்கிறது பாருங்கள்! (II தீமோ. 2:11,12)

**திருப்பலி பூஜை:**

நமது ஆண்டவர் ஏற்படுத்தின இந்த இராப்போஜனத்தை ஆதிதிருச்சபையார் கிரமமாக ஆசரித்து வந்தனர். நாட்கள் செல்லச் செல்ல இதன் முக்கியத்துவமும் தாற்பரியமும் மறையத் தொடங்கின. வருடாந்திர ஆசரிப்பும் ஒதுக்கப்பட்டது. அப்போஸ்தலர்களும், அதன் பின் அவர்களை பின்பற்றி வந்தவர்களும் மரித்த பிறகு ஏறக்குறைய கி.பி.3-ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க சபை பிரபலமடைந்தது. இந்தக்காலகட்டத்தில் தான் அவர்களால் திருப்பலி பூஜை ஏற்படுத்தப்பட்டது. ரோமன் கத்தோலிக்க சபையார் அவர்களது குருவானவரால் நடத்தப்படுகிற இந்த திருப்பலி பூஜையை இராப்போஜனத்திற்கு ஒப்பிட்டுச் சொல்கிறார்கள். இது சரியல்ல. இராப்போஜனம் என்பது கல்வாரியிலே நிறைவேற்றப்பட்ட நமது ஆண்டவரின் மரணத்தை நினைவு கூறுவது. ஆனால் திருப்பலி பூஜை என்பது அது செய்யப்படும் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு புது பலியைக் குறிக்கிறது. இந்த திருப்பலி பூஜையினால் தான் பாவங்கள் நீங்குவதாகவும், குருவானவர் அப்பத்தை ஆசீர்வதிக்கும்போது அது கிறிஸ்துவின் சரீரமாக மாறுவதாகவும் ரோமன் கத்தோலிக்கர் நம்புகிறார்கள். ஒரு தனிப்பட்ட ஆளின் பாவத்திற்காக செய்யப்படுகிற ஒரு பிரத்தியேகமான கிறிஸ்துவின்

பலியே பாடல் பூஜை என்றும் ஒரு சபையின் பொதுவான பாவங்களுக்காக செய்யப்படுகிற கிறிஸ்துவின் பலியே சாதாரண பூஜை என்றும் சொல்லப்படுகிறது.

இப்படி தனிப்பட்ட மனிதனுக்காகவும், சபைக்காகவும் கிறிஸ்து அடிக்கடி பலியிடப்படுவது வேதத்திற்கு விரோதமானது; "கிறிஸ்து இனி மரிப்பதில்லை" என்றும், தன் மூலமாக பிதாவினிடத்தில் வருகிற எல்லாரையும் "ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றும் வேதம் கூறுவதை மறுதலிக்கிறது. (ரோம 6:9; எபி.10:14;9:27,28) ஆகையால் தான் இந்த பூஜை பலியை "பாழாக்கும் அருவருப்பு" என்று தானியேல் கூறுகிறார். (தானி. 11:31;12:11; மத். 24:15)

திருப்பலி பூஜையின் கொள்கை தவறானது என்று ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்த சபையார்களில் சிலர் அதை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், சிலர் மாதம் ஒருமுறையும், சிலர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் ஆசரிக்கின்றனர். இராப்போஜனம் என்பது நமது ஆண்டவரின் மரணத்தை நினைவு கூறுகிற ஆசரிப்பாக இருப்பதாலும், பஸ்காவை எப்படி இஸ்ரயேலர் வருடம் ஒருமுறை ஆசரித்தார்களோ, அதன்படி நாமும் இந்த ஆசரிப்பை வருடம் ஒருமுறை ஆசரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

### இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டிய நாள்

இஸ்ரயேலர்கள் சந்திர வருடத்தை அநுசரித்து வந்தனர், அமாவாசையன்று தான் அவர்களுக்கு மாதத்தின் முதல் நாள் ஆகும். வசந்த காலத்து சமராத்திரி நாளுக்கு மிகவும் சமீபமான அமாவாசை தான் மத சம்பந்தமான வருடத்தின் ஆரம்பமாக எண்ணப்படுகிறது. அதாவது ஆபீப் மாதத்தின் முதல் தேதி. மேலும் இஸ்ரயேலருக்கு மாலை 6 மணியிலிருந்து அடுத்த நாள் மாலை 6 மணி வரை ஒரு நாள் ஆகும்.

இஸ்ரயேலர்கள் பஸ்காவை ஆசரித்தது ஆபீப் மாதம் 14-ந் தேதி தான் நமது ஆண்டவர் ஈடுபலியை செலுத்தின நாள். பஸ்கா ஆடு



அடிக்கப்பட்ட அந்திப்பலி நேரமாகிய மாலை 3 மணிக்குத் தான் நமது ஆண்டவரும் தன் ஜீவனை விட்டார். (யாத். 12:6; 11 நாளா. 35:1; லூக். 23:44-46; மத். 27;46)

இயேசு கிறிஸ்து தான் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி தான் இராப்போஜனத்தை (புது உடன்படிக்கையை) ஏற்படுத்தினார். மாலை 6 மணிக்குமேல் தான் 14-ஆம் தேதி ஆரம்பிக்கிறது. இரவிலே இராப்போஜனத்தை ஏற்படுத்தினார்; பிறகு காட்டிக்கொடுக்கப்பட்டார். இரவிலே காவலில் வைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டார்; காலை 6 மணிக்கு பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப்பட்டு தீர்ப்பு கொடுக்கப்பட்டது; காலை 9 மணிக்கு (3ஆம் மணி வேளை) சிலுவையில் அறையப்பட்டார்; 12 மணியிலிருந்து மாலை 3 மணி வரை அந்தகாரம் உண்டாயிற்று; மாலை 3 மணிக்கு ஜீவனை விட்டார்; மாலை 6 மணிக்கு சற்று முன்னர் அடக்கம் பண்ணப்பட்டார். (யோவா. 19:14; மாற். 15:25; மத். 27:45, 46; லூக். 23:54)

இப்படியாக ஆபீப் மாதம் 14-ந் தேதி (மாலை 6 மணி முதல் அடுத்த நாள் மாலை 6 மணி வரை) முழுவதும் இந்த காரியங்கள் நிறைவேறின. எனவே நாம் இராப்போஜனத்தை ஆபீப் மாதம் 14ஆம் தேதி ஆரம்ப இரவிலே மாலை 6 மணிக்குமேல் (சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு) ஆசரிக்க வேண்டும்.

இஸ்ரயேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டின் இரத்தம் தான் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது என்பதின் ஞாபகார்த்தமாக, தலைமுறை தலைமுறை தோறும் குறித்த நாளில் பஸ்காவை ஆசரித்ததைப் போல (ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய) நாமும் கூட இயேசு கிறிஸ்து என்ற பஸ்கா ஆட்டின் இரத்தம் தான் நம்மை இரட்சித்தது என்பதை நினைவு கூற, (ஆண்டவரின் மரணத்தை நினைவு கூற) ஞாபகார்த்தமான இராப்போஜனத்தை (Memorial Supper) நாம் குறித்த நாளிலே வருடம் ஒருமுறை ஆசரிக்க வேண்டும்.

**முடிவுரை:**

பஸ்கா, அப்பம் பிட்குதல், இராப்போஜனம் ஆகியவைகளைக் குறித்து நாம் வேதத்தின் மூலம் விரிவாக தெரிந்துகொண்டோம். எனவே நாம் இதுவரை கொண்டிருந்த தப்பறையான கருத்துக்களையும், போதனைகளையும் விட்டு விலகி நமது ஆண்டவரின் மரணத்தை நினைவு கூறுகிற இராப்போஜனத்தை குறித்த நாளிலே வருடம் ஒருமுறை மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாக ஆசரிப்போமாக! நமது சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போமாக! (ரோம. 12:1)

***********



# 17. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

*“நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.” யோவான் 14:3*

கடைசி காலத்தில் இருக்கும் நாம் தற்கால சத்தியமாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி அறிந்து கொள்ளுவது மிக அவசியம். கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அப்போஸ்தலர்களும் சீஷர்களும் இயேசுவே கிறிஸ்து என்றும், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும் போதித்து, சாட்சி கொடுத்தார்கள். (அப்.5:42; 4:33) அதே போல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தில் இருக்கும் நாம், அவரது பிரசன்னம் குறித்தும் அதன் விதம் குறித்தும், வருகையின் நோக்கம் குறித்தும் அறிந்து அதற்கு சாட்சிகளாயிருக்க வேண்டும்.

கிறிஸ்து தனது முதலாம் வருகையில், தன்னை ஈடுபலியாகக் கொடுக்க வந்தார்; இரண்டாம் வருகையில் நாம் இழந்து போனதைத் திரும்ப கொடுக்க வந்திருக்கிறார். அவர் உலகத்தை ஆயிரம் வருடம் ஆளுகை செய்து, நாம் ஆதாமில் இழந்த எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கிறார்.

“முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்புவார்.” “தீர்க்கதரிசிகளுடைய வாக்கினால் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.” அப்.3:19,21

“நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு........நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்ந்துக் கொள்ளுவேன்.” யோவா. 14:3

மேலே கூறப்பட்ட வசனங்கள் கிறிஸ்து மறுபடியும் வரப்போவதை அதாவது இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

சிலர் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கின போதும், வேறு சிலர் எருசலேமின் அழிவு சம்பவித்த போதும் மேற்கூறிய இயேசுவின்

வார்த்தைகள் நிறைவேறின என நினைக்கிறார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாளுக்கு 60 வருடத்திற்கு பிறகும் எருசலேமின் அழிவுக்கு 26 வருடத்திற்கு பிறகும் எழுதப்பட்ட வெளிப்படுத்தின விசேஷத்தில், "இதோ, சீக்கரமாய் வருகிறேன்;........... நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" என்று இயேசு கூறி இருக்கிறார். அப்.யோவான், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கூறுகிறார். வெளி. 22;12,20

கீழே கொடுத்திருக்கும் இரு வசனங்களைக் கவனியுங்கள்:

"இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." மத். 28:20

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு......நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்." யோவா 14:3

இந்த இரு வசனங்களும் மாறுபாடான அர்த்தங்களைக் கூறுவதாக எண்ணி சிலர் குழப்பம் அடைகின்றனர். இயேசு ஆள்தத்துவத்திலே இங்கு நம்முடன் உலக முடிவு பரியந்தமும் இருக்கவில்லை. அவர் திருச்சபையின் தலையாக பரலோகத்தில் இருந்து கொண்டு பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மை வழி நடத்துகிறார். இந்த பொருளில் தான் மத்.28:20ல் கூறுகிறார். அவர் இரண்டாம் வருகையில் ஆவியின் சரீரத்தில் பிரசன்னமாகி சபையைச் சேர்த்துக் கொண்டு உலகத்தை ஆளுகை செய்வார்.

### கிறிஸ்து பிரசன்னமாகும் விதம்

இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில் பிரசன்னமாகும் விதம் குறித்து நாம் அறிந்து கொள்வது அவசியம். ஏனெனில் முதலாம் வருகையில் அவரை ஒரு ராஜாவாக இஸ்ரயேலர்கள் எதிர்பார்த்தனர். அவர் வந்து தங்களை ரோமர்களிடமிருந்து மீட்டு இரட்சிப்பார் என்று (லூக். 24:21;அப்.1:6) எதிர்பார்த்து ஏமாந்தனர். இரண்டாம் வருகையின் காலத்தில் கூட அநேக கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்துவை மாம்சீக சரீரத்தில் எதிர்பார்க்கின்றனர். இயேசு கிறிஸ்து இனிமேலும் மாம்ச ஜீவியல்ல



என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். முதல் வருகையிலே மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்து தமது மாம்சீக சரீரத்தை ஈடு பலியாக ஒப்புக்கொடுத்தார். (1தீமோ, 2:6; எபி.10:4,5) அவர் எல்லாவற்றிக்கும் மேலாக தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார். ஆகையால் தான் அப்.பவுல் "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" என்று கூறுகிறார். (2 கொரி. 5:16) அவர் மரித்தோரிலிருந்து மாம்ச சரீரத்தை உடைய மனிதனாக அல்ல, உயிர்ப்பிக்கிற ஆவியாக எழுப்பப்பட்டார், "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (1பேது 3:18) கிறிஸ்து மறுபடியும் மாம்சத்திலே வரமாட்டார், ஏனெனில் "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார்." (எபி. 2:9) அதாவது தேவனுடைய தன்மையின் சொரூபமாக இருக்கிறார். (எபி. 1:3) கிறிஸ்து மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினபடியால், தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி எல்லா நாமத்திற்கும் (பிதாவினுடைய நாமத்தைத் தவிர) மேலான நாமத்தை தந்தருளினார். (பிலி. 2:9; 1 கொரி. 15:27) அப்.யோவான், கிறிஸ்து வரும்பொழுது எப்படியிருப்பார் என்று வெளிப்படவில்லை; நாம் எவ்விதம் இருப்போம் என்பதும் இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாமும் இருந்து தரிசிப்போம் என்று கூறுகிறார். (I யோவா.3:2) ஆகவே இனி நம்முடைய ஆண்டவர் மாம்ச சரீரத்தை எடுக்க மாட்டார்; அதற்கு அவசியமும் இருக்காது. ஆவியின் சரீரத்தில் அவர் தமது இரண்டாம் வருகையில் பிரசன்னமாவார்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஏற்பட்டுவிட்டதாக எண்ணிய தெசலோனிக்கேயரின் தவறை சரிபடுத்தவே பவுல் தனது இரண்டாம் நிருபத்தை எழுதினார். முதலாவது விசுவாச வீழ்ச்சி ஏற்பட்டு பாவ மனுஷன் (அந்திகிறிஸ்து-போப்பு சபை) தோன்றி தனது கிரியைகளை நடப்பித்து முடிக்கும்வரை இயேசுவின் இரண்டாம் வருகை ஏற்படாது என்று

அப்.பவுல் அவர்களுக்கு எழுதினார், இயேசுவின் வருகை அதரிசனமானது என்று பவுல் அவர்களுக்கு கற்பித்திருந்தார். ஆகையால்தான் அவர்கள் இயேசுவின் வருகை ஏற்பட்டிருக்குமோ என்று எண்ணினார்கள்.

கர்த்தர் இரண்டாம் வருகையில் பிரசன்னமாகும் விதம்பற்றி சில தீர்க்கதரிசனங்களைக் கவனமாகப் படித்து புரிந்துகொள்ளாவிட்டால் அவை மாறுபாடான அர்த்தத்தை கொடுப்பதாக இருக்கும்.

உதாரணமாக,

“இதோ, திருடனைப் போல் வருகிறேன்.” வெளி 16:15

“நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனின் நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக்குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லோரையும் அழித்துப்போட்டது.” (லூக்கா 17:26,27)

“தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.” (லூக்கா 17:20)

மேற்கூறிய வசனங்கள் கிறிஸ்து பிரசன்னமாகும் விதத்தைப் பற்றி கூறுகின்றன. இந்த வசனங்களில் இருந்து கிறிஸ்து, உலகத்தார் அறியாத காலத்தில் இரகசியமாகவும், ஒரு திருடன் எப்படி சப்தம் இல்லாமலும், எந்த அறிவிப்பும் இல்லாமலும் வருவானோ அவ்விதமாகவே பிரசன்னம் ஆவார் என்றும் தெரிகிறது. நோவாவின் காலத்தில் எப்படி மக்கள் ஜலப்பிரளயம் வரப்போவதைப் பற்றி நோவா கூறியிருந்தும், அதை நம்பாமல் பெண் கொண்டும், பெண் கொடுத்தும், புசித்தும் குடித்தும் இருந்தார்களோ, அவ்வாறே கிறிஸ்துவின் பிரசன்னத்திலும் உலகத்தார் அவரது வருகையைப் பற்றி அறிவிக்கப்பட்டாலும் அதை நம்பாமல் கர்த்தரின் கோபாக்கினை நாள் வரும்போது துன்பப்படுவார்கள்.

ஆனால் இதற்கு மாறான அர்த்தத்தை உடையதுபோல காணப்படுகிற சில வசனங்களையும் நாம் ஆராய வேண்டும்.

“கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய



சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.” (1 தெச.4:16)

“மனுஷகுமாரன் (கர்த்தராகிய இயேசு) வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.” (மத் 24:30)

“இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரை காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்.” (வெளி.1:7)

வேதத்தில் உள்ள எந்த தீர்க்கத்தரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாய் இராதென்று நாம் முந்தி அறிந்து கொள்ள வேண்டும். (2பேதுரு 1:20) ஆகையால் நாம் 1 தெச. 4:16; 2 தெச. 1:7,8; மத். 24:30; வெளி. 1:7 ஆகிய வசனங்கள் எதைக் குறிக்கின்றன என்பதை ஆராய்ந்தால் அதன் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ளமுடியும். மேலும் அப். 1:11; மத். 24:27 போன்ற வசனங்களையும் நாம் ஆராய வேண்டும்.

### 1 தெசலோனிக்கேயர் 4:16

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். இங்கே கூறப்பட்டு இருக்கும் சத்தம், தேவ எக்காளம் என்பவைகள் வெளி. 11:15-19ல் கூறப்பட்டு இருப்பதற்கு ஒத்து இருக்கின்றன. “ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜ்யங்கள் ஆயின.....ஜாதிகள் கோபித்தார்கள். அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்பு அடைவதற்கும்....” இதையே தான் தானி. 12:1,2ல் “பெரிய அதிபதியாகிய மிகாயேல் அக்காலத்தில் எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும்....பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய

நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும், விழித்து எழுந்திருப்பார்கள்" என்று கூறப்பட்டு இருக்கிறது. மேலும், அப்போஸ்தலர் பவுல் 1தெச.4:16ல் சத்தத்தையும் எக்காளத்தையும் குறிப்பிடும் போது, "அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்து இருப்பார்கள்" என்று கூறுகிறார். மேலும், 2தீமோ. 4:1ல் கிறஸ்துவின் வருகையில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது உயிரோடு இருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்ப்பார் என்று கூறப்பட்டு இருக்கிறது.

அதாவது தானியேல், அப்போஸ்தலர் பவுல், யோவான் ஆகிய மூவரும் கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது ஏற்படும் ஆபத்துக் காலத்தையே அவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

### ஆரவாரம்

1 தெச. 4:16ஐ நாம் ஆராயும்போது "keleusma" என்ற கிரேக்க பதம் இங்கு ஆரவாரம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது. "உற்சாகப்படுத்துவதற்கான ஆரவாரம்" என்று பொருள். அறிவு பெருகியதால் இப்பொழுது மக்கள் தங்களுடைய ஜீவாதார உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடி வருகிறார்கள். கடந்த சில வருடங்களாகத்தான் இந்த போராட்டம் அதிகமாக இருக்கிறது. நாகரீகத்தில் மேம்பட்ட சில நாடுகள் அரசியல், பொருளாதாரம், ஜீவாதார உரிமைகள், சமூக சுதந்திரம் ஆகியவைகளைப் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டிராத அளவுக்கு ஆராய்ந்து வருகின்றன. இதற்காக பல ஸ்தாபனங்களும் ஏற்பட்டு போராடி வருகின்றன. அறிவு பெருகியதால் ஏற்பட்ட உரிமைப் போராட்டங்களைத்தான் ஆரவாரம் என்று தீர்க்கதரிசன பாஷையில் கூறப்பட்டு இருக்கிறது. இது பற்றி தான் ஏசாயா தீர்க்கதரிசியும், "திரளான ஜனங்களின் சத்தத்திற்கு ஒத்த வெகு கூட்டத்தின் இரைச்சலும் கூட்டப்பட்ட ஜாதிகளுடைய இராஜ்யங்களின் அமளியான இரைச்சலும் மலைகளில் கேட்கப்படுகிறது. சேனைகளின் கர்த்தர் யுத்த ராணுவத்தை இலக்கம் பார்க்கிறார்." (ஏசாயா 13:4) என்று கூறுகிறார்.



### பிரதான தூதனுடைய சத்தம்

பிரதான தூதன் என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். (மல்கி.3:1) இவரைத்தான் தானியேல் தீர்க்கத்தரிசி மிகாயேல் (தானி. 12:1) என்று குறிப்பிடுகிறார். பிரதான தூதனுடைய சத்தம் என்பது கிறிஸ்துவின் அதிகாரத்தையும் கட்டளையையும் குறிக்கிறது. இந்த அறிகுறியான பாஷை கிறிஸ்து இந்த உலகத்தின் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு தம்முடைய அரசாட்சியை ஆரம்பிக்கும்போது கொடுக்கும் கட்டளையையும் சட்டத்திட்டங்களையும் குறிக்கிறது. (வெளி.11:15; 1கொரி. 15:52)

### தேவ எக்காளம்

எக்காளம் என்பது ஒரு பெரும் காலப்பகுதியையும், அதில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகிறது. "எக்காளம் தொனிக்கும், அப்போது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்" என்று அப்.பவுல் கூறுகிறார். இது குறித்து இன்னும் விளக்கமாக யோவானும் வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடுகின்றார். வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ள முதல் ஆறு எக்காள காலங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் மானிடச் செயல்களையும் ஏழாவது எக்காளமோ கர்த்தரின் வேலையையும் குறிப்பதாக இருக்கின்றது. எக்காளம் என்பது கருவியினால் எழுப்பப்படும் சத்தத்தைக் குறிக்காது. ஏனெனில் கிறிஸ்து வருவது திருடன் வருவது போல் இரகசியமாக இருக்கும். திருடன் எக்காளச் சத்தம் செய்து கொண்டு வரமாட்டான். நாம் இப்பொழுது ஏழாம் எக்காளத்தின் காலத்தில் இருக்கிறோம்.

ஆகையால் பிரதான தூதனுடைய சத்தம், ஆரவாரம், தேவ எக்காளம் என்பது அறிகுறியான பாஷை என்றும் இப்போது அவைகள் நிறைவேறும் காலமாக இருக்கிறது என்றும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். மூன்று தீர்க்கத்தரிசனங்களும் (தானி 12:1; வெளி 11:15;1 தெச. 4:16) கிறிஸ்து பிரசன்னமாகும் போது நடக்கும் காரியங்களைக் குறித்தே கூறுகின்றன.

**ஜுவாலித்து எரிகிற அக்கினி. 2 தெச. 1:8**

அடுத்து அறிகுறியான பாஷையில் கூறப்பட்டிருப்பது எரிகிற அக்கினி போன்றவை. "கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்." கிறிஸ்துவின் பிரச்சன்னத்தை உலகுக்கு வெளிப்படுத்தும்போது கோபத்தின் மிகுதியால் அக்கிரமக்காரருக்கு கொடுக்கும் தண்டனையைக் குறித்தே இங்கு அக்கினி என்று கூறப்பட்டிருக்கிறது. இதைக் குறித்தே மல். 4:1ல் "இதோ சூளையைப்போல் எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள். வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும். அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமல் போகும்" என்று கூறப்பட்டிருப்பதாகக் காண்கிறோம்.

வல்லமையின் தூதரோடும் என்பது இந்த உலகத்தின் பொல்லாத ஆளுகையை நீக்கிப்போடுவதற்காக கிறிஸ்து பயன்படுத்தும் பலவகையான சக்திகளையே குறிக்கிறது.

கிறிஸ்து ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வெளிப்பட்டு, தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்துவார். 2 தெச.1:7

**மத் 24:30:** "மனுஷகுமாரன் (கர்த்தராகிய இயேசு) வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்."

**வெளி 1:7:** "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரை காணும், அவரைக் குத்தினவர்களும் காண்பார்கள்....."

கண்கள் யாவும் அவரைக்காணும், இது மாம்சீக கண்களைக் குறிக்காதபடி அறிவின் கண்களை குறிக்கிறது. கிறிஸ்துவை இரண்டாம் வருகையில் உலகம் மாம்ச கண்ணால் பார்க்க இயலாது என்பதற்கு கீழ்க்கண்டவை ஆதாரமாக இருக்கின்றன.



(1) "இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்." (யோவா. 14:19) இந்த வசனம் நமது ஆண்டவர் தமது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் முன்பு கூறியது. அவரது மரணத்திற்கு பிறகு உலகம் அவரைக் காணாது. ஆனால் திருச்சபையார் அவரைக் காண்பார்கள். ஏனெனில் அவர்கள் உயிர்த்தெழுதலில் அவருக்கு ஒப்பான சரீரத்தைப் பெற்றிருப்பார்கள். (1யோவா. 3:2)

(2) மகிமையடைந்த இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார். (எபி.3:1-3) கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாயிருக்கிறார். (கொலோ. 1:15) இயேசு கிறிஸ்து மனுஷரில் ஒருவரும் காணக்கூடாதவராயிருக்கிறார் என்று 1 தீமோ. 6:16 மூலம் அறிந்து கொள்ளுகிறோம். ஆகையால் இப்படிப்பட்ட மகிமையில் பிரசன்னமாகும் கிறஸ்துவை எந்த மனிதனும் மாம்ச கண்ணால் பார்க்க முடியாது.

(3) மகிமையின் கிறிஸ்துவை தரிசித்ததால் சவுல் தன் கண் பார்வையை இழந்தான் என்று வேதம் கூறுகிறது. (அப்.22:6-8,11-14)

(4) "தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது." (லூக்.17:20) தேவனுடைய இராஜ்யம் வெளியரங்கமாய் வராதற்கு காரணம் கிறிஸ்துவின் பிரசன்னம் மாம்ச கண்களுக்குத் தெரியாமல் இருக்கும் என்பதேயாகும்.

மேலே சொல்லப்பட்ட இந்த நான்கு வசனங்களும் மகிமையடைந்த கிறிஸ்துவின் வருகையில் அவரைக் காண இயலாது, காண முடியாது என்று காண்பிக்கிறது. எனினும் வெளி.1:7; மத். 24:30 ஆகிய இரு வசனங்களும் கண்கள் யாவும் அவரைக் காணும் என்று கூறுகின்றன. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது கருத்துக்கு இசைவான வசனங்களை எடுத்துக்கொண்டு, இசைவில்லாத வசனங்களை விட்டுவிடக்கூடாது. நாம் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவர்களாயும், தேவனுக்கு முன்பாக உத்தமர்களாயிருக்கும்படி

ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டும். (2தீமோ. 2:15) வேதத்தின் சரியான போதனையை தெரிந்துகொள்ள அந்த காரியத்தைப்பற்றிய எல்லா வசனங்களையும் பகுத்து ஆராய்ந்து அவைகளை இசைவுபடுத்த வேண்டும். எது சொல்லர்த்தமானது, எது அடையாள பாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதுதான் கஷ்டமான காரியம். நேரடியான அர்த்தத்திற்கு ஒத்துவராத வசனங்களை அடையாள பாஷையில் சொல்லப்பட்டுள்ளதாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்குரிய உண்மைப் பொருளை வேறொரு நேரடியான வசனம் மூலம் தரவேண்டும்.

யோவா. 14:19; 1 தீமோ. 6:16; அப். 22: 6-8, 11-14; லூக், 17:20 ஆகிய வசனங்கள் எல்லாம் நேரடியான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய வசனங்கள், இதை அடையாளமான பாஷையில் எடுத்துக்கொள்ள முடியாது.

ஆனால் மத் 24:30; வெளி 1:7 ஆகிய வசனங்கள் பூமியின் கோத்திரத்தார் அனைவரும் அவரைக் காண்பார்கள் என்று கூறுகிறது. எனவே இந்த வசனங்கள்தான் அடையாளமான பாஷையில் சொல்லப்பட்டதாகும். உதாரணமாக, லூக்.3:5 ஐப் பாருங்கள். "மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்." இது மாம்ச கண்ணால் பார்ப்பதைக் கூறமுடியாது. இது அறிந்து கொள்வதை, உணர்ந்து கொள்வதைக் குறிக்கிறது. இதில் வரக்கூடிய "Optomai" என்ற கிரேக்க வார்த்தைதான் மத்.24;30; வெளி.1:7 ஆகிய வசனங்களிலும் வருகிறது. ஆகவே இது அடையாளமான பாஷையில் சொல்லப்பட்டிருப்பதை புரிந்து கொள்ளுகிறோம்.

### அப்போஸ்தலர் 1:11

"உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்."

இந்த வசனத்தை படிக்கும் பெரும்பாலோர் இயேசு பரலோகத்திற்கு



எழுந்தருளிப்போகும்போது எப்படி மாம்ச கண்களுக்கு காணப்பட்டாரோ அதேபோல இரண்டாம் வருகையிலும் அவர் காணப்படுவார் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த வசனத்தை திரும்ப திரும்ப படித்தால் அவர் போகும் போது அவரைக் கண்டவர்கள் மறுபடியும் அவர் வரும்போது அவரைக் காண்பார்கள் என்றோ அல்லது வேறு யாராவது காண்பார்கள் என்றோ கூறவில்லை என்பதைத் தெரிந்து கொள்வார்கள். அவர் எப்படி எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார். அவர் எப்படி எழுந்தருளிப் போனார்? எல்லாருக்கும் தெரிவதுபோலவோ எக்காள சத்தமிட்டுக் கொண்டோ, அசாதாரணமான வெளிச்சத்துடனோ, ஒளியுடனோ, ஆரவாரத்துடனோ சென்றாரா? இல்லை. ஆடம்பரம் இல்லாமலும், அமைதியாகவும் சென்றார்; அவரது உண்மையுள்ள ஊழியர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாமல் சென்றார்; அவர்களை ஆசீர்வதித்துக் கொண்டு சென்றார். மேலும் அவரது தெய்வீக சரீரத்தை யாரும் பார்க்கவில்லை. "இன்னும் கொஞ்சம் காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள்" (யோவா. 14:19) என்ற வசனத்தின்படி கிறிஸ்துவின் மரணத்திற்கு பிறகு உலகத்தார் யாரும் அவரைக் காணவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்குச் சென்றதற்கு அவரது சீஷர்கள் மட்டுமே சாட்சி. அவர் எப்படி பரலோகத்திற்கு எழுந்தருளிப்போனரோ, (அமைதியாக, இரகசியமாக, உலகத்தாருக்கு தெரியாமல்) அதேபோல திரும்ப வருவார்.

மேலும் தேவதூதர்கள் கிறிஸ்து மறுபடியும் வருவதைப் பற்றிக் கூறும்போது, "இதே இயேசு (This same Jesus)" என்று குறிப்பிடுகிறார்கள். உலகத் தோற்றத்திற்கு முன்பு தமக்கு இருந்த மகிமைகளை விட்டுவிட்டு மனிதனாகி, நமக்காக, கல்வாரியில் சிலுவையில், அறையப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, பிறகு நாற்பது நாட்கள் சீஷர்களுக்கு தரிசனமாகி, பரலோகத்திற்குச் சென்ற அந்த கிறிஸ்துவானவர்தான் மறுபடியும் திரும்ப வருவார் என்று கூறுகிறார்கள். ஆவியின் சரீரத்தில் இருந்து, மனுஷ சாயலாகி, பிறகு தெய்வீக சுபாவத்துக்கு மாற்றப்பட்ட அந்த கிறிஸ்துதான் திரும்ப வருவார் என்று

கூறுகின்றார்கள். மாம்சத்தில் இருக்கும்போது அன்பாய் இருந்த அதே கிறிஸ்துதான் ஆவியின் சரீரத்தையும் தெய்வீக சுபாவத்தையும் பெற்ற பின்பும் மாறாத அன்புடையவராக இருக்கிறார்.

**மத்தேயு 24:27**

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்." "மின்னல்" என்பது தவறான மொழிபெயர்ப்பு, பிரகாசமான சூரிய ஒளி என்று இருக்க வேண்டும். ஏனெனில் மின்னல் கிழக்கிலிருந்து தொடங்கி மேற்கு வரைக்கும் பிரகாசிக்காது; சூரியன் மட்டுமே கிழக்கில் தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கும். இங்கு வரும் ஆஸ்ட்ரேப் (astrape) என்ற கிரேக்க வார்த்தை தவறாக மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. லூக்கா 17:24 லும் இதேபோல் தவறாக மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. லூக்கா 11:36ல் இதே கிரேக்க வார்த்தை வருகிறது. இது விளக்கின் பிரகாசமான வெளிச்சம் என்று மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. மல் 4:2ல் "நீதியின் சூரியன் உங்கள் மேல் உதிக்கும், அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்று கூறப்பட்டு இருக்கிறது. மேலும் ஏசாயா 60:1-3ல் கிறிஸ்து என்னும் சூரியன் முதலில் அவரது பிள்ளைகளுக்கு ஒளிகொடுப்பதற்காக உதிக்கிறது. பிறகு உலகத்தார் அந்த ஒளியினிடத்திற்கு வருகிறார்கள் என்று கூறப்பட்டு இருக்கிறது.

**கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கான அடையாளங்கள்**

இதுவரை கிறிஸ்து பிரசன்னமாகும் விதம் குறித்தும், மாறுபாடான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய வசனங்களின் உண்மையான பொருள் குறித்தும் ஆராய்ந்தோம். இனி கிறிஸ்து பிரசன்னம் ஆகியிருப்பதற்கான அடையாளங்களைக் காண்போம்.

**1. இஸ்ரயேலர்கள் கூட்டிச் சேர்க்கப்படுதல்**

"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள்



காணும்போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்." மத்.24:32,33: லூக். 21:29-31

இங்கே அத்திமரம் என்பது இஸ்ரயேலைக் குறிக்கிறது. (எரே.24அதி) தீத்துராயனால் கிபி 69ல் சிதறடிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் தற்போது கூட்டிச்சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நமது ஆண்டவர் கனிகளை காணாததினால் அத்திமரத்தைச் சபித்தார். மத்.21:19

"இதோ, உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்." மத்.23:38 இந்த வார்த்தை கிபி.69ல் நிறைவேறியது.

**அவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட படிப்படியாக நிறைவேறின காரியங்கள்:**

கி.பி.1878ல் Berlin congress of Nations இஸ்ரயேலர்கள் தாய்நாடு திரும்புவதை அனுமதித்தது.

1917ல் பால்ஃபோர் பிரகடனத்தின்மூலம் பாலஸ்தீனாவில் இஸ்ரயேலருக்கு தனித்தாய்நாடு உறுதியளிக்கப்பட்டது.

1922ல் சர்வதேச சங்கம் இஸ்ரயேலருக்கு தனித்தாய்நாடு கொடுக்க தீர்மானித்தது.

1948-ல் இஸ்ரேல் சுதந்திரம் அடைந்தது.

1967-ஆறு நாட்கள் போரில் எருசலேம் இஸ்ரேல் வசமானது.

இப்படியாக ஒரு நாடு ஒன்றுமில்லாமல் அழிந்துபோய் 2000 ஆண்டுகளுக்கு பிறகு மறுபடியும் எல்லாரும் கூட்டிச் சேர்க்கப்பட்டு ஒரு நாடாக மீண்டும் உருவாகியிருப்பது உலக சரித்திரத்தில் ஒரு அற்புதமாகும்.

மேலும், "அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள்" என்று வேதம் கூறுகிறது. (லூக். 21:29) இதற்கேற்றாற்போல 1948க்கு பிறகு 80க்கும் மேற்பட்ட நாடுகள் சுதந்திரமடைந்திருக்கின்றன. ஆகையால் இஸ்ரேல் தேசம் மீண்டும் உருவாகியிருப்பது கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

## 2. எருசலேம் இனிமேலும் மிதிக்கப்படுவதில்லை

லூக். 21;24; புறஜாதியார்காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.

இதில் எருசலேம் என்பது இரு பொருளில் சொல்லப்படுவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. முதலாவது, எருசலேம் என்பது அந்த நகரத்தைக் குறிக்கிறது. 1967ல் எருசலேம் பிடிக்கப்பட்டு நவீன இஸ்ரேல் தேசத்தோடு சேர்க்கப்பட்டதுடன் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது. இரண்டாவது, எருசலேம் என்பது இஸ்ரேல் தேசத்தைக் குறிக்கிறது. முதலாம் உலகப்போரின்போது இஸ்ரேல் நாடு உறுதியளிக்கப்பட்டது; 1948ல் சுதந்திரமடைந்தது. புறஜாதியார் காலம் நிறைவேறி கிறிஸ்து பிரசன்னமாகியிருப்பதால் இஸ்ரேல் தேசம் சுதந்திரமடைந்திருக்கிறது.

## 3. இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள்; அறிவு பெருகிப்போம்

**தானி. 12:1-4;** பெரிய அதிபதியாகிய மிகாயேல் எழும்பும்போது போக்குவரத்து அதிகரிக்கும்; அறிவு பெருகிப்போம்.

**போக்குவரத்து அதிகரிப்பு:** மணிக்கு 30 மைல் வேகத்தில் பிரயாணம் செய்த மனிதன் தற்போது 25,000 மைல் வேகத்தில் பிரயாணம் செய்கிறான்.

1806ல் நீராவி கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது.

1831ல் இரயில் எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டது.

1877ல் கார் கண்டுபிடிக்கப்பட்டது.

1904ல் விமானம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனிமித்தம் மனிதனின் பிரயாண வேகம் 1000 மடங்கு அதிகரித்துள்ளது.

**அறிவு பெருகிப்போகும்:** அறிவு தற்போது அதிவேகமாக பெருகியிருக்கிறது. கம்ப்யூட்டர், இன்டர்நெட், ஈ-மெயில், எலக்ட்ரானிக்



இயந்திரங்கள், மொபைல் போன், நவீன அணு ஆயுதங்கள் ஆகியவை அறிவு பெருக்கத்திற்கு அடையாளமாக இருக்கின்றன. தற்போது உள்ள வசதிகளில் எந்த காரியத்தைப்பற்றிய அறிவையும் நாம் இன்டர்நெட் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். உலகில் எந்த மூலையில் இருந்தாலும் தொடர்புகொள்ள வசதி உள்ளது. இப்படியாக விஞ்ஞான அறிவு பெருகியுள்ளது. அது மாத்திரமல்ல, வேத அறிவும் பெருகியுள்ளது.

1804ல் பிரிட்டன் வேதாகம சங்கம் நிறுவப்பட்டது.

1811ல் கல்கத்தாவில் வேதாகம சங்கம் நிறுவப்பட்டது.

1813ல் மும்பையில் வேதாகம சங்கம் நிறுவப்பட்டது.

1820ல் சென்னையில் வேதாகம சங்கம் நிறுவப்பட்டது.

வேதாகமம் தற்போது 1800க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அநேக வேத அகராதி, பைபிள் சம்பந்தமான அநேக புத்தகங்கள், ஆராய்ச்சி புத்தகங்கள் தற்போது அதிவேகமாக பெருகியிருக்கின்றன.

*100 வருடத்திற்கு முன்பு உலகத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 10% தான். தற்போது 40% ஆக பெருகியுள்ளது.

*விஞ்ஞானிகளில் 90% தற்போது வாழ்கிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் தற்கால கண்டு பிடிப்புகளில் 50% கண்டுபிடிக்கப்பட்டன.

ஆகவே இந்த போக்குவரத்து பெருக்கமும், அறிவு பெருக்கமும் நமது ஆண்டவரின் பிரசன்னத்தைக் குறிக்கிறது.

## 4. இருளில் மறைந்திருக்கிறவைகளை கர்த்தர் வெளியரங்கமாக்குவார்

“கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும்

வெளிப்படுத்துவார்....." 1 கொரி. 4:5

உலக சரித்திரத்தில் தற்போதுபோல் மதத்தலைவர்கள், அரசாங்க தலைவர்கள், ராஜதந்திரிகள், தொழிற்சங்க தலைவர்கள், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் ஆகியோர் எப்பொழுதும் தண்டிக்கப்பட்டதோ, கேள்வி கேட்கப்பட்டதோ, குற்றம் சாட்டப்பட்டதோ இல்லை. கடந்த காலங்களில் பிரபலமானவர்கள் செய்த குற்றம் வெளிவராதிருந்தது. தற்போது எல்லாமே வெளியரங்கமாயிருக்கிறது. வாட்டர்கேட், இரான்கேட், போபர்ஸ் ஊழல் ஆகியவை சில உதாரணங்கள், சர்வாதிகார ஆட்சிகளெல்லாம் ஒழிந்து விட்டன. கிறிஸ்துவின் பிரசன்னத்தினால் மறைந்துள்ள குற்றங்களெல்லாம் வெளியரங்கமாகியுள்ளன.

## 5. விசுவாசக்குறைவு

"மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ." லூக்.18:8

"......அவருடைய பிரசன்னமாகுதலையும்,.........அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்....சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்." 2தீமோ. 4:1-4

நிச்சயமாக இந்த விசுவாசக்குறைவு, பல்கலைக்கழகத்திலிருந்து பிரசங்க மேடைவரைக்கும் பரவியிருக்கிறது. வேத வசனங்களில் கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது. மனித தத்துவங்களிலும், கோட்பாடுகளிலும் தான் நம்பிக்கை அதிகரித்து வருகிறது. National Council of Churches-ன் பிரதிநிதிகளிடம் எடுத்த கருத்துக்கணிப்பில், மூன்றிலொரு பங்கினர், கடவுள்மேல் திட நம்பிக்கையற்றவர்களாயிருக்கின்றனர். 31% மரணத்திற்குபின் வாழ்க்கையில் நம்பிக்கையற்றவர்களாயிருக்கின்றனர். 62% வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள அற்புதங்களில் நம்பிக்கையற்றவர்களாயிருக்கின்றனர். 77% சாத்தான் இருப்பதையே நம்பவில்லை. 87% மனிதன் பாவி என்கிற வேத போதகத்தை நம்பவில்லை. இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில்



வந்திருக்கிறார். ஆயிர வருட அரசாட்சி நடந்துகொண்டிருக்கிறது என்று போதித்து வந்த சில ஊழியக்காரர்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்து வரவில்லை என்று மறுதலிக்கிறார்கள். இந்த விசுவாசக்குறைவு கிறிஸ்துவின் பிரசன்னத்தை நிரூபிக்கிறது.

## 6. யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்

"யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள், யுத்த வீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்...... பலவீனன் தன்னை பலவான் என்று சொல்வானாக." யோயேல் 3:9,10

யோயேல் 3:1 இஸ்ரேல் கூட்டிச் சேர்க்கப்படுவதைக் குறித்து கூறுகிறது. இது நமது இரட்சகரின் பிரசன்னத்திற்கு அடையாளம் என்று முன்னமே பார்த்திருக்கிறோம். எனவே யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவது நமது இரட்சகரின் பிரசன்னத்தை குறிக்கிறது. உலகம் இரண்டு உலகப்போர்களைக் கண்டிருக்கிறது. மறுபடியும் இன்னொரு யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வருடத்திற்கு 5000 அணுகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. 20ஆம் நூற்றாண்டில் யுத்தத்தில் 10 கோடி பேர் மரித்திருக்கிறார்கள். 19ஆம் நூற்றாண்டில் முப்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் பேர் மட்டுமே மரித்திருக்கிறார்கள். ஆகையால் யுத்தமும், யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுதலும் நமது இரட்சகரின் பிரசன்னத்திற்கு அடையாளமாகும்.

## 7. பலவீனன் தன்னை பலவான் என்று சொல்வானாக

யோயேல் 3;10ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக பலமுள்ள நாடுகளுக்கு பலவீனமுள்ள நாடுகள் பயந்துகொண்டிருந்தன அல்லது அடிமைப்பட்டிருந்தன. தற்போது நிலைமை மாறியுள்ளது. ஒரு சிறிய நாடுகூட ஐக்கிய நாட்டு சபையில் அங்கமாகி தனது கருத்தை பலமுள்ள நாடுகளுக்கு எதிராக கூறமுடிகிறது. இதனால் சிறிய நாடுகள் நெருக்கப்படுவது வெகுவாகக் குறைந்திருக்கிறது. பலமுள்ள நாடாகிய அமெரிக்கா, வட வியட்நாம், வடகொரியா ஆகிய போர்களில் வெற்றிபெற முடியாமல் போனது, பலவீனன்; தன்னை பலவான் என்று சொல்லுவான்

என்பது நிறைவேறியிருக்கிறது. பாகிஸ்தான் போன்ற சிறிய நாடுகள் கூட அணுகுண்டை செய்து வைத்துக்கொண்டு தன்னை பலவான் என்று கூறிக்கொள்கிறது. எண்ணெய் வளம் உள்ள சிறிய நாடுகள் உலகப்பொருளாதாரத்தில் அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன. இதெல்லாம் நமது ஆண்டவரின் பிரசன்னத்தைக் குறிக்கிறது.

## 8. ஆபத்துக்காலம்

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாயேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." தானி. 12:1

"உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." மத்.24:21

தானியேலும் மத்தேயும் ஒரே ஆபத்துக்காலத்தையே குறிப்பிடுகின்றனர். தானியேல் மிகாயேல் எழும்பும்போது ஆபத்துக்காலம் வரும் என்கிறார். மத்தேயும் ஆண்டவரின் பிரசன்ன காலத்தில் மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும் என்கிறார். இந்த ஆபத்து என்பது உலகப்போர்களைத்தான் குறிப்பிடுகின்றன. கி.பி.1914லிலும் 1939லும் உலகப்போர்களை இந்த உலகம் கண்டிருக்கிறது. நாம் இப்போது ஆபத்தின் நாட்களில் இருக்கிறோம். இன்னும் ஒரு உலகப்போருக்காக உலகம் தயாராகிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த உலகப்போர்களும், ஹிட்லரின் எழுச்சியும் வீழ்ச்சியும், கம்யூனிசத்திற்கும், ஜனநாயகத்திற்கும் ஏற்பட்ட அதிகாரப்போர் ஆகியவை ஆபத்துக் காலத்தைக் குறிக்கின்றன. எனவே இது நமது ஆண்டவரின் பிரசன்னத்தைக் குறிக்கிறது.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நோக்கம்

இதுவரை நாம் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கான அடையாளங் களைப் பார்த்தோம். இனி கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் வந்து செயல்படுத்தப்போகும் காரியங்களைக குறித்துப் பார்ப்போம்.



**சபையை கூட்டிச்சேர்த்தல்:**

இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் செய்யும் முதல் வேலை தெரிந்துகொள்ளப்பட்ட சபையை கூட்டிச்சேர்க்குதல், "அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்து கொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு வானத்தின் கடைமுனை மட்டும் உள்ள நான்கு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்." சங். 50:5; மத்.24:31, 45; மாற். 13:26,27

**சபையை சுத்திகரித்தல்:**

பிறகு சேர்க்கப்பட்ட சபையை சுத்திகரிக்கிறார். "ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்?. . . . . அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து...... அவர்களைப் பொன்னைப் போலவும் புடமிடுவார்." மல். 3:2,3 இங்கு லேவியர் என்பது ஆசாரிய வகுப்பாராகிய திருச்சபையாரைக் குறிக்கிறது.

**சபை எடுத்துக்கொள்ளுதல்:**

பிறகு சுத்திகரிக்கப்பட்ட சபையை எடுத்துக்கொள்ளுகிறார், "கர்த்தர்.... வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும்..... அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்." 1தெச.4:16,17

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லோரும் நித்திரை அடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்." (1கொரி.15:51) நித்திரை என்பது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் உள்ள நிலைமை, கிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ளும்போது, மரணம் அடையும் சிலர் (மணவாட்டி வகுப்பார்) கல்லறையில் ஓய்வு எடுக்காமல் உடனே முதலாம்

உயிர்த்தெழுதலில் பங்கெடுக்கிறார்கள். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் மணவாட்டி வகுப்பார் பெறும் பலன்கள்:

தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகுதல். 2பேது 1:4; 1பேது. 1:4; ரோம.2:7;1கொரி 15:54

இயேசுவோடு கூட எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்படுதல். எபே.1:16-23

கிறிஸ்துவுடன் கூட ஆயிரம் வருடம் அரசாளுதல். வெளி 20:6; 2:26,27;3:21

**சாத்தானின் இராஜ்யத்தை நீக்குதல்:**

அதன்பிறகு இந்த உலகத்தை ஆளுகை செய்யும் சாத்தானின் (எபே. 2:2; யோவா. 12:31;16:11; 2கொரி. 4:4) அதிகாரத்தை நீக்கிப்போடுகிறார்.

“பிசாசென்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடுகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளி 12:7-9. சாத்தான் யாரையும் மோசம் போக்காதபடி ஆயிர வருடமளவும் கட்டப்படுகிறான். வெளி.20:1-2

**கிறிஸ்து தனது இராஜ்யத்தை ஸ்தாபித்தல்:**

“ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜ்யங்களாயின.” வெளி.11:15

கிறிஸ்து சாத்தானின் இராஜ்யத்தை நீக்கியபின் தமது இராஜ்யத்தை பரிசுத்தவான்களோடு சேர்ந்து ஸ்தாபிக்கிறார். (தானி.7:13,14,18,27) “புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் (பழைய வானமும் பழைய பூமியும்) இனி நினைக்கப்படுவதில்லை.” ஏசா. 65:17 இந்த தீர்க்கதரிசனத்தைத் தான் அப்.யோவான் வெளி 21:1-4ல் கூறுகிறார். மேலும், 2 பேது. 3:7ல்



“இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது” என்று கூறப்பட்டுள்ளது.

பழைய வானம், பழைய பூமி என்பது சாத்தானின் ஆளுகையையும், தற்போது உள்ள பூமியின் ராஜ்யங்களையும் (சாத்தானின் கட்டுப்பாட்டில் உள்ளது) குறிக்கும். புதிய வானம் புதிய பூமி என்பது கிறிஸ்துவின் பரலோக ராஜ்யத்தையும், அவரது பிரபுக்கள் ஆளுகை செய்யும் பூமிக்குரிய இராஜ்யத்தையும் குறிக்கும். ஆவியின் சரீரத்தைப் பெறுபவர்கள் பரலோக இராஜ்யத்திலும், மாம்சீக சரீரத்தைப் பெறுபவர்கள் பிரபுக்கள் ஆளுகை செய்யும் பூமிக்குரிய இராஜ்யத்திலும் பிரவேசிக்கிறார்கள். (சங். 45:16)

சாத்தான் எப்படி இந்த உலகத்தை வானத்தில் இருந்து கொண்டு (கண்ணுக்குத் தெரியாமல், ஆவியின் ஜீவியாக இருந்து கொண்டு) ஆளுகை செய்கிறானோ அவ்விதமாகவே கிறிஸ்து தனது திருச்சபையாருடன் சேர்ந்து ஆவியின் ஜீவியாக வானத்தில் இருந்து கொண்டு பூமியில் உள்ள பிரபுக்களைக் கொண்டு ஆளுகை செய்வார்.

ஆதிப்பிதாக்களும் மற்ற தீர்க்கதரிசிகளும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைந்தாலும் (எபி.11:35) திருச்சபையால் மட்டுமே அவர்கள் பூரணப்பட முடியும். பூரணப்பட்ட ஆதிப்பிதாக்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரபுக்களாக இருப்பார்கள். (லூக்.13:28,29) இந்த வசனத்தில் தீர்க்க தரிசிகள் என்று கூறப்பட்டிருக்கும் பிதாக்கள்தான் ஆயிர வருட அரசாட்சியில் குமாரர்களாகி பூமியின் இராஜாக்களாக வைக்கப்படுவார்கள் என்று வேதம் கூறுகிறது. (சங். 45:16)

**ஆயிரவருட அரசாட்சியும் அதன் பலன்களும்:**

கிறிஸ்துவுடன் கூட பரிசுத்தவான்கள் ஆயிரம் வருடம் அரசாளுகிறார்கள். அந்த காலத்தில் சாத்தான் கட்டப்பட்டு இருப்பதால் அவனது கிரியை ஏதும் உலகில் இல்லாதிருக்கும். மனுமக்கள் அனைவரும் தேவனைப்பற்றிய அறிவை அறிந்து கொள்வார்கள். ஏசா.11:9; ஏசாயா 25:6-9இல் கூறப்பட்டிருக்கும் விருந்து என்பது தேவனைப்பற்றிய அறிவைக் குறிக்கிறது.

கர்த்தரைப் பற்றிய அறிவைப் பெறுவதற்காக குருடரின் கண்கள் திறக்கப்படும்; செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்; முடவரின் கால்கள் சொஸ்தமாக்கப்பட்டு கர்த்தரைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு விரைந்து நடக்கும்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும். (ஏசா. 35:4-6; 29:18; 32:3-4) பூமியிலுள்ள மனுமக்களின் முழங்கால்கள் யாவும் முடங்கி, பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். (பிலி.2:10,11) நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்ளுவார்கள். (ஏசா.26:9) தனது கிரியைகளின் பலனை தானே அனுபவிப்பான். (ஏசா. 65:22) இனி ஒரு சாபமுமிராது. (வெளி.22:3) ஆயுதங்கள் விவசாயக்கருவிகளாக மாற்றப்படும். யுத்தங்களை யாரும் கற்பதில்லை. ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதும் இல்லை. (ஏசா. 2:4) வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் யாரும் சொல்வதில்லை. (ஏசா.33:24) கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். (வெளி.21:4) சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள். (மத்.5:5) துஷ்ட மிருகங்கள் இருக்காது; தீங்கும் செய்வதில்லை. ஏசா. 11:6-9; 35: 1,7-9

கர்த்தரைப் பற்றிய அறிவு போதிக்கப்பட்ட பின்பும் மனம் திருந்தாதவர்களும், சாத்தானும் அவனது தூதர்களும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தமும் எரிகிற கடலிலே தள்ளப்பட்டு அழிக்கப்படுவார்கள். (சங். 37:9,10,20,34-36; வெளி. 21:8; 20:10; ஏசா. 26:9,10) அதன்பிறகு மரணமும் பாதாளமும் அழிக்கப்படும். (வெளி.20:14;21:4)

எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும் வரைக்கும் கிறிஸ்து ஆளுகை செய்வார். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். பிறகு தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுத்து, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்கு கீழ்ப்பட்டிருப்பார். 1 கொரி.15:24-28

**********